I கொரிந்தியர் - பகுதி I

பவுலின் போதனைகள்

புத்தகம் — 18

வேத பாடசாலை
67, பராக்கா ரோடு,
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.

கேட்கத் தவறாதீர்கள்
வேதபாடசாலை ரேடியோ ஒலிபரப்பு
882 AM MW திங்கள் - வெள்ளி 22.45 மணி

I Corinthiaus – Part I
Booklet — 18
Tamil

©
ICM
Mini Bible College
2002

For additional booklets write to
India Bible Literature
67, Beracah Road, Kilpauk,
Chennai - 600 010.

1. முதல் கொரிந்திய சபை

(I கொரிந்தியர் 1 : 1 - 9)

பவுல் கொரிந்து பட்டணத்தில் நிலைநாட்டிய சபையில் அநேக கேள்விகளும் பிரச்சினைகளும் எழுந்தன. இவற்றைச் சரிசெய்ய ஒரு மிகப்பெரிய மிஷனரியும் சபைகள் பலவற்றை உண்டாக்கியவருமான ஒருவரின் ஆலோசனை வேண்டியிருந்தது.

சபை நம்பிக்கையற்ற வழியில் பிளவுபட்டிருந்தது. விசுவாசிகளுக்குப் போதனையளித்து சீடத்துவப் பயிற்சி அளிப்பதற்காக பவுல் ஏற்படுத்தியிருந்த அநேக தலைவர்களைச் சுற்றி சிறுசிறு கூட்ட மக்கள் கவரப்பட்டதால் இந்தப் பிளவு ஏற்பட்டது. சபைத் தலைவன் ஒருவன் தன் மாற்றாந்தாயோடு தகாத உறவு கொண்டிருந்தான். இந்தப் பிரச்சினை எல்லாருக்கும் தெரியும், ஆனாலும் ஒருவரும் அதைப்பற்றி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவர்கள் ஒருவர்மேல் ஒருவர் கொரிந்துவின் சிவில் (Civil) நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். மேலும் அவர்கள் கர்த்தருடைய திருவிருந்தைக் கொண்டாடும்போது திராட்சரசத்தால் போதையடைந்தனர்.

பவுல் இந்தப் பிரச்சினைகளைப்பற்றி அங்கிருந்த வீட்டுச் சபைகளில் ஒன்றிலிருந்து தெரிந்துகொண்டார். கொரிந்திய விசுவாசிகளும் அவருக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். அந்தக் கடிதத்தில் அநேக கேள்விகளைக் கேட்டிருந்தனர். அவை திருமண உறவு, விக்கிரகாராதனை, சபையில் பெண்களின் பங்கு, குறிப்பாக சபை ஆராதனையின் செயல்பாடு, உயிர்த்தெழுதல், உக்கிராணத்துவம் குறித்தவைகளாயிருந்தன. இந்தப் புத்தகத்தில் அவர்கள் பிரிவினை பற்றிய பிரச்சினையை ஒன்று முதல் நான்காம் அதிகாரம் வரையிலும், நெறிதவறுதல் அதைத்தொடர்ந்த வழக்குகள் குறித்து ஐந்தாம் ஆறாம் அதிகாரங்களிலும், அவர்கள் கடிதத்தில் கேட்டு எழுதியிருந்த காரியங்களைப் பற்றி ஏழு முதல் பதினாறாம் அதிகாரம் வரையிலும் சொல்லியிருக்கிறார்.

முதல் கொரிந்திய நிருபத்திலுள்ள துவக்க வசனங்களை நாம் பார்ப்போம். முதல் வசனத்தில் பவுல் தன்னை, ''தேவனுடைய சித்தத்தினாலே இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவன்,'' என்று விவரிக்கிறார். நீங்கள் இந்தக் கடிதத்தில் எழுதப்பட்டிருப்பவைகளையும், இரண்டு கொரிந்தியர் புத்தகத்தையும் வாசிக்கும்பொழுது, கொரிந்திய சபை, பவுல் தம்மை அப்போஸ்தலன் என்று அழைத்த உரிமையைப்பற்றி கேள்வி எழுப்பியுள்ளது. உடன்தானே அவர், ''தேவனுடைய சித்தத்தினாலே அப்போஸ்தலன் என்று அழைக்கப்பட்டவன்,'' என்று தெளிவுபடுத்தினார்.

பவுல் இந்தக் கடிதத்தை, ''கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டு பரிசுத்தவான்கள் என்றழைக்கப்பட்டவர்களுக்கு,'' எழுதுகிறார் (2). பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் என்ற சொல் ''தனியாகப் பிரிக்கப்படுதல்'' என்ற அர்த்தமுடையது. கிறிஸ்துவைப் பின்பற்றும்படி நீங்கள் பிரித்தெடுக்கப்படும்பொழுது, பாவகரமான செயல்களிலிருந்து நீங்கள் ஓடுவது அவசியமாகிறது. ஆனால் வேதவசனங்களில் பரிசுத்தமாக்கப்படுவது என்று சொல்லும்போது, நீங்கள் பாவத்தில் **இருந்து** பிரித்தெடுக்கப்படவில்லை. ஆனால் உங்களை தம்மோடு ஐக்கியமாக இருக்கும்படி அழைத்த **ஒருவருக்காக** பிரித்து வைக்கப்பட்டீர்கள் என்பதை அழுத்தமாகத் தெரிவிக்கிறது (1:9).

பவுல் விசுவாசிகளை மிகப்பிரியமாக ''பரிசுத்தவான்கள்'' என்று குறிப்பிடுகிறார். அவர்களுடைய அநேகப் பிரச்சினைகளைத் தெரிந்துகொண்டும், பவுல் இந்த விசுவாசிகளுக்கு ''பரிசுத்தவான்கள்'' என்று எழுதுவது, எதைக் குறிக்கிறது? பரிசுத்தமாக்கப்படுதல் என்பது ஒரு விசுவாசி அவனுடைய அல்லது அவளுடைய வாழ்க்கையை கிறிஸ்துவுக்காகவும் பாவத்திலிருந்தும் பிரித்து வைக்கும்படி அழைக்கப்பட்டார் என்பதே.

I கொரிந்தியர் 2:2ல் பவுல், ''... எங்களுக்கும் தங்களுக்கும் ஆண்டவராயிருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுது கொள்ளுகிற அனைவருக்கும்...'' என்று எழுதுகிறார். இந்தக்கடிதம் கொரிந்துவிலிருந்து தேவனுடைய சபைக்கு மட்டும் எழுதப்பட்டதல்ல, இது உலகம் முழுவதிலும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தை அழைக்கும் ஒவ்வொருவருக்காகவும் பல தலைமுறைகளுக்காகவும் எழுதப்பட்டது. இதன் கருத்து என்னவென்றால் இந்தக் கடிதம் உனக்கும் எனக்கும் எழுதப்பட்டது. ''தேவனுடைய சபை'' என்பது காணமுடியாத உலகளாவிய சபை, ''கொரிந்துவிலிருந்த தேவனுடைய சபை'' என்பது காணக்கூடிய உள்ளூர்ச்சபை.

வசனம் மூன்று ஒரு வாழ்த்துதலைக் கொண்டது: ''நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.'' இது பவுலின் இயல்பான வாழ்த்துரை, ஏனெனில் ஒரு விசுவாசிக்கு தேவ கிருபையிருந்தால், தேவன் அவர்களுக்கு

அளித்த எல்லாவிதமான அற்புதமான ஆசீர்வாதங்களையும் அவர்கள் வாழ்வில் பெற்றுக் கொள்ளுவார்கள் என்று அவர் விசுவாசித்தார் – அந்த ஆசீர்வாதங்களைப் பெற அவர்கள் தகுதியானவர்கள் என்றல்ல; தங்கள் சுயமுயற்சியினால் அவைகளைப் பெற்றுக்கொண்டனர் என்பதாலும் அல்ல. கிருபை என்பது தேவனால் தகுதியற்ற நமக்குக் கொடுக்கப்பட்ட சலுகை மட்டுமல்ல. அது தேவனுடைய வல்லமை, அவர் மேலுள்ள பயபக்தியுமாகும். அதுவே அவர்களை இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களாகச் செயல்பட வழி வகுக்கிறது. தேவனுடைய கிருபையின் விளைவாக கொரிந்திய விசுவாசிகள் ''யாதொரு வரத்திலும் குறைவில்லாதவர்களாய்'' இருந்தனர் (5, 7).

தம் போதனையில் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குப் பவுல் முக்கியத்துவம் கொடுத்தார். இதனால் அவர் கொரிந்துவிலிருந்த முதல் நூற்றாண்டு விசுவாசிகளிடம், ''நம்முடைய கர்த்தராகிய இயேசு வெளிப்படுவதற்குக் காத்திருக்கக்'' கூறினார் (7). அவருடைய வருகைக்காக அவர்கள் காத்திருக்கும்பொழுது, ''நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே நீங்கள் குற்றஞ்சாட்டப்படாதவர்களாயிருக்கும்படி முடிவுபரியந்தம் அவர் உங்களை ஸ்திரப்படுத்தவார்,'' என்று பவுல் எழுதுகிறார் (8).

இந்த மக்கள் வீழ்ந்து போகாமல், இயேசு கிறிஸ்து திரும்பவும் வரும் நாள் வரையிலும் தொடர்ந்து இருப்பார்கள் என்ற நம்பிக்கை பவுலுக்கு எப்படி ஏற்பட்டது (குறிப்பாக எல்லாப் பிரச்சினைகளோடு கூடிய இந்தச் சபையில்)? அந்த அப்போஸ்தலனின் நம்பிக்கை; ''தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர், '' (9) என்பதினாலேயாகும்.

2. ''கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா?''

(I கொரிந்தியர் 1 : 10 – 17)

இந்த அதிகாரத்தில் காணப்படும் இந்த வசனங்கள் இந்தக் கடிதத்தின் நோக்கத்தை வெளிப்படுத்துகிறது. முன் கூறியதுபோல, கொரிந்தியருக்கு எழுதப்பட்ட முதல் நிருபம், அநேகப் பிரச்சினைகளையுடைய ஒரு சபைக்கு எழுதப்பட்டது. முதல் நான்கு அதிகாரங்களில் பவுல் சபையில் காணப்படும் பிரிவினைகள் பற்றி எழுதுகிறார். அவர் சபையின் பிரிவினைகளைப்பற்றி, ''குலோவேயாளின் வீட்டாரால் உங்களைக்குறித்து எனக்கு அறிவிக்கப்பட்டது,'' என்று எழுதுகிறார் (11). கொரிந்து சபை, கொரிந்து பட்டணம் முழுவதிலுமுள்ள வீட்டுச் சபைகளைச் சந்தித்தது. பவுல் நிலைநாட்டிய எல்லா சபைகளும் இப்படிச் சந்திக்கப்பட்டன. பவுல் எபேசிய தலைவர்களுக்கு ''வெளிப்படையாகவும், வீட்டுக்கு வீடு போதித்ததை'' ஞாபகப்படுத்

தினார். பரிசுத்த ஆவியினால் தொடப்பட்ட மக்களை மூப்பர்கள் கண்காணிக்குமாறு / மேய்க்குமாறு பவுல் கூறினார்.

இந்த மூப்பர்கள் எபேசுவின் வீட்டுச் சபைகளுக்குத் தலைமை தாங்கினார்கள் என்றும் ஆவிக்குரிய வளர்ச்சியை கண்காணிப்பதற்கு பொறுப்புள்ளவர்களாயிருந்தனரென்றும் தங்கள் வீட்டுச் சபைகளில் சந்தித்தவர்களின் வளர்ச்சியில் அக்கறை கொண்டிருந்தார்கள் என்றும் நாம் எடுத்துக் கொள்ளலாம் (அப். 20:28). சபையின் வரலாற்றில் முதல் முன்னூறு ஆண்டுகளுக்கு புதிய ஏற்பாட்டுச் சபை வீடுகளில் சந்தித்தனர்.

கொரிந்திய வீட்டுச் சபையினர், தங்கள் தலைவர்களைச் சுற்றியே கவரப்பட்டனர். இந்த மக்கள் இரட்சிக்கப்பட்டபொழுது கொரிந்து பட்டணத்துக்கு வந்து நற்செய்தியைப் பிரசங்கித்தவர் பவுல் என்பதால் அவர்களில் சிலர், ''நான் பவுலைப் பின்பற்றுகிறேன், அவரே என்னைக் கிறிஸ்துவினிடம் வழி நடத்தினார், நான் அவரைப் பின்பற்றுவேன்,'' என்று சொன்னார்கள். பவுல் மனந்திரும்புவதற்கு முன்பாக, அவர் ஒரு மிகப்பெரிய கல்விமானாகவும், ஒரு ரபியாகவும், கமாலியேல் என்ற பிரபலமானவரிடம் வேதத்தைக் கற்ற ஒரு பரிசேயனாகவும் இருந்தான் (அப். 22:3). கல்வியறிவின் நற்சாட்சி பெற்றவர்களுக்கு பெரும் மதிப்பளிக்கும் கொரிந்திய விசுவாசிகள் பவுலுக்குச் செவி கொடுத்தனர், பேதுருவுக்கோ குறைந்த மரியாதையையே கொடுத்தனர்.

எனினும், கொரிந்துவிலுள்ள ஒவ்வொருவரும் கல்வித் திறமையுடையவர்களல்ல, அநேகர் பேதுருவின் சாதாரணமான, எளிதில் செயல்படுத்தக் கூடிய பெருமையற்ற பேச்சைக் கேட்க ஆவலாயிருந்தனர். பேதுருவின் பக்தி மார்க்கப் பிரசங்கங்களை புரிந்துகொண்டதுபோல் அவர்களால் பவுலின் போதனைகளை எளிதில் விளங்கிக்கொள்ள முடியவில்லை. பேதுரு கல்வியறிவில்லாதவனாயிருந்தாலும், அவனுடைய கடிதங்களில் அவன் பக்திவழியையும் ஆவிக்குரிய போதனைகளை செயல்படுத்துவது பற்றியும் திட்டவட்டமாக எழுதியிருப்பதையும் காணலாம்.

அப்பொல்லோ என்ற பெயருடைய வாலிபன் ஒருவன் இருந்தான். மனந்திரும்புவதற்குமுன் ஒருவேளை அவன் கிரேக்க மொழியில் நன்றாகப் பேசக் கூடியவனாக இருந்திருப்பான். கொரிந்தியர்கள் பேச்சுவன்மையை மேலாக மதித்ததால், அவர்களில் சிலர் ''நான் அப்பொல்லோவைப் பின்பற்றுகிறேன். அவன் நன்றாகப் பேசுகிறான்,'' என்றார்கள்.

கடைசியாக, கொரிந்திய சபையில் மிகவும் பக்தியுள்ள ஒரு கூட்டம் இருந்தது. இந்த மக்களைத்தான் பவுல், ''கிறிஸ்துவைச் சேர்ந்தவர்கள்'' என்று விவரிக்கிறார். அவர்கள், ''நாங்கள் எந்த மனிதனையும் பின்பற்றவில்லை.

கிறிஸ்துவை மட்டுமே பின்பற்றுகிறோம்,'' என்று சொல்லுகிறார்கள் என்பதாக பவுல் விளக்குகிறார் (12).

சபையின் இந்தப் பிரிவினைகளை எடுத்துக்கூறியபின், தலைவர்களால் ஈர்க்கப்படுவதைப்பற்றி ஒரு மிகப்பெரிய கேள்வியை எழுப்பினார்: ''கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா?'' என்று கேட்டார்.

ஒரு வசனத்தில், உண்மையில் இரட்சிப்பு என்றால் என்ன என்பதைக் குறிப்பிடுகிறார். மேலாக அவர், ''தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்,'' என்று எழுதுகிறார் (9). இப்போது இரட்சிப்பு என்பது கிறிஸ்துவோடு ஒரு உறவை ஏற்படுத்துவதற்கான அழைப்பாக இருந்தால், உயிர்த்தெழுந்த உயிரோடிருக்கும் கிறிஸ்துவுடன் நாம் ஐக்கியமாக இருக்க முடியுமானால் ''கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா?'' என்ற கேள்வியைப் பவுல் நம்மிடம் கேட்கிறார்.

கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? இதைப்பற்றிச் சிந்தியுங்கள். இதன் வெளிப்படையானப் பதில் திட்டவட்டமாக ''இல்லை!'' என்பதே. இதன் வெளிப்படையான நம்முடைய முடிவு, கிறிஸ்து உண்மையிலேயே நமக்குள் வாசம் செய்தால், நாம் பிரிந்திருக்க முடியாது என்பதே. நாம் நம்முடையத் தலைவர்களைச் சுற்றி கவரப்படுவதால் பிரிந்திருக்கிறோம் என்றால், கிறிஸ்துவோடு நமக்குள்ள உறவில் ஏதோ தவறு இருக்கிறது, நம்முடைய தலைவர்களை நாம் பார்க்கும் கண்ணோட்டத்திலும் தவறு இருக்கிறது.

பதிமூன்றாம் வசனத்தில் பவுல், தலைவர்களை நாம் எப்படிக் காண வேண்டும் என்பதற்குத் தன்னையே ஒரு எடுத்துக்காட்டாகப் பயன்படுத்துகிறார். ''பவுலா உங்களுக்காக சிலுவையிலறையப்பட்டான்?'' இந்தக் கேள்வியில் அவர், ''நான் உங்களுக்காகச் சிலுவையில் மரிக்கவில்லை, அப்படி மரித்தேனா? எனவே ஏன் உங்களில் சிலர், 'நான் பவுலைச் சேர்ந்தவன்,' என்று சொல்லுகிறீர்கள்,'' என்று கேட்கிறார்.

மற்ற தலைவர்களைச் சுற்றிக் கவரப்பட்டவர்களைக் குறித்து அவர் எதுவும் எழுதவில்லை. ''முதல் கொரிந்து சபையில்'' தன்னைப் பின்பற்றியவர்களைப் பற்றி மட்டுமே சாமர்த்தியமாக எழுதுகிறார்.

பவுல் கொரிந்துவிலுள்ள ஒரு சில விசுவாசிகளுக்கு மட்டுமே ஞானஸ்நானம் கொடுத்ததைக் குறிப்பிட்டுக் காட்டுகிறார், இதன்பின் இந்த ஆழ்ந்த கருத்தைத் தெரிவிக்கிறார்: ''ஞானஸ்நானத்தைக் கொடுக்கும்படி கிறிஸ்து என்னை அனுப்பவில்லை; சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே அனுப்பினார்; கிறிஸ்துவின் சிலுவை வீணாய்ப் போகாதபடிக்கு, சாதுரிய ஞானமில்லாமல் பிரசங்கிக்கவே அனுப்பினார்,'' (17). ஞானஸ்நானத்தையும் சுவி

சேஷத்தையும் பிரித்தால் நாம் இரட்சிக்கப்படும்படியாக ஞானஸ்நானம் பெறவில்லை என்றாகிறது.

நாம் இரட்சிக்கப்பட்டதால் ஞானஸ்நானம் பெறுகிறோம். ஞானஸ்நானம் என்பது ஒரு திருமணக் கொண்டாட்டம் போன்றது. இங்கே நாம் தனிப்பட்டு எடுத்த ஒரு முடிவை வெளிப்படையாக எல்லார் முன்னும் அறிக்கையிடுகிறோம்.

இந்தப் பகுதியை தெளிவாக்குவதற்கு, பவுல் இந்த முதல் அதிகாரத்தின் எஞ்சிய பகுதிகளிலும் மூன்றாவது, நான்காவது அதிகாரங்களிலும், சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும்பொழுதும் அதை விசுவாசிக்கும்பொழுதும், மக்கள் மனந்திரும்பும்போதும் என்ன நடைபெறுகிறது என்று விளக்குகிறார்.

அநேகர் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை புத்திசாலிகளைக் கவரத்தக்கதாக முயற்சி செய்கின்றனர். அது சரியல்ல.

பவுல் இங்கே, அவர் கொரிந்தில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தபொழுது நடைபெற்றது இது அல்ல என்று நமக்குச் சொல்லுகிறார். ஞானமுடைய தம்முடைய கவர்ச்சிகரமான வார்த்தைகளை பயன்படுத்தி சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வரவில்லை, அதற்காக அவர் அங்கு அனுப்பப்படவில்லை என்று கூறுகிறார். அவர் அப்படிச் செய்திருந்தால், அது கிறிஸ்துவின் சிலுவையை அதன் வல்லமையிலிருந்து வெறுமையாக்கியிருக்கும், அவர்கள் விசுவாசம் மனிதனுடைய ஞானத்தில் வேர்கொண்டிருக்கும். அவர் அவர்களோடு இருந்தபொழுது பெரும் பலவீனத்துடனும், நடுக்கத்துடனும் இருந்ததாக எழுதுகிறார். கிறிஸ்து சிலுவையிலறையப்பட்டதையும் கிறிஸ்துவை தவிர வேறொன்றையும் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை என்று அவர் வெளிப்படையாக தீர்மானிக்கிறார். அவர் சுவிசேஷத்தை அவர்கள் பட்டணத்தில் பிரகடனம் செய்தபொழுது, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையின் செயல்பாட்டை அவர்கள் கண்டார்கள்.

3. ''சிலுவையைப்பற்றிய உபதேசம்''

(I கொரிந்தியர் 1 : 18 – 2:5)

இந்தக் கடிதத்தைப் பெற்றுக்கொள்ளுபவர்கள் பவுல் எழுதிய இந்த வசனங்களைப் புரிந்துகொண்டு செயல்படுத்தினால் (1:10-17) அவர்கள் தங்கள் தலைவர்களால் கவரப்படாமலும் பிரிவினை இல்லாதவர்களுமாக இருப்பார்கள்.

பதினெட்டாம் வசனத்தில் பவுல் சிலுவையைப்பற்றிய உபதேசம் என்ன என்றும் மக்கள் அதற்கு எப்படி பதிலளிக்கிறார்கள் என்பதைப் பற்றியும் கூறுகிறார்: ''சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனா யிருக்கிறது'' என்று விவரிக்கிறார். பவுல் கொரிந்துவுக்கு சுவிசேஷத்தைப் பிர சங்கிக்க வந்ததாகக் கூறும்போது, ''பிரசங்கிக்க'' என்பதற்கு அவர் பயன் படுத்தும் சொல், ஒரு அரசனின் கட்டளையைப் பறை சாற்றுபவன் அறிவிப் பதுபோல, தாம் சுவிசேஷத்தை அறிவிக்க மட்டுமே வந்ததைக் குறிப்பிடு கிறார் என்பதைக் காட்டுகிறது.

அவர்களுக்கு கிறிஸ்துவையும் அவர் சிலுவையில் அறையப்பட்டதை யும் தவிர வேறு எதையும் தாம் அறிவிக்க வரவில்லை, அவர்கள் தெரிந்து கொள்ளவும் வேண்டியதில்லை என்று பவுல் வெளிப்படுத்துகிறார். அப் போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தின் பதினேழாவது அதிகாரத்தில், கொரிந்துவில் அவர் செய்த ஊழியத்தில் ஆழ்ந்த தாக்கத்தை உண்டு பண்ணிய, அத்தேனேயில் பவுலுக்கு ஏற்பட்ட ஒரு அனுபவத்தை விவரிக் கிறார்.

அவர் அத்தேனே பட்டணத்திலிருந்தபொழுது, அரியோபேகஸ் மேடையில் பிரசங்கம் பண்ணும்படி அவரை அழைத்தனர். அத்தேனே பட்டணத்தை நோக்கியிருக்கும் அது, பெரும் மதிப்பிற்குரிய நாகரிகம் மிகுந்த ஒரு இடம். இங்கே பெரிய கல்விமான்களும், அரசியல்வாதிகளும், சிறந்த பேச்சாளர்களும், அந்த நாட்களின் முக்கிய காரியங்களையும் கலாச் சாரத்தைப்பற்றியும் விவாதம் செய்யும்படி அழைக்கப்பட்டனர். அங்கே விவாதம் செய்ய அல்லது போதிக்க அழைக்கப்படுவது பெரும் மதிப்பிற்குரிய ஒரு காரியமாகும்.

அந்த இடத்தின் கலாச்சார அழுத்தம் தத்துவத்துக்கும் புத்திக்கூர்மையான விவாதங்களுக்கும் கொடுக்கப்பட்டதால் பவுல் அதற்கு இணங்கிவிட்டார் என்று சில கல்விமான்கள் நம்புகின்றனர். அங்கே மார்ஸ் மேடையில் தன் பிர சங்கக் கருத்துப் பொருளாக அவர்களுடைய விக்கிரகங்கள் ஒன்றின்மீது எழுதப்பட்டிருந்த வாக்கியத்தை எடுத்துக்கொண்டு, கிரேக்க தத்துவ ஞானி களையும் புலவர்களையும் பற்றிப் பிரசங்கித்து தன் பெரிய பிரசங்கத்தை முடித்தார். அது ஒரு உன்னதமானப் பிரசங்கம், ஆனால் அதன் விளைவோ அற்பமானது. அத்தேனே பட்டணத்தாருக்கு அவர் நிருபம் எதுவும் எழுத வில்லை, ஒரு சபையையும் நிலைநாட்டவில்லை. அவருடைய புத்திசாலித் தனமான மேன்மையான பிரசங்கத்தை ஒரு சிலரே பாராட்டினார்கள்.

அத்தேனேயில் ஏற்பட்ட இந்த அனுபவத்துக்குப்பின் பவுல் நேராக கொரிந்துவுக்குப் போனார். அவர் கொரிந்துவுக்கு வந்து சேர்ந்ததும் கர்த்தர் ஒரு

தரிசனத்தில், ''நீ பயப்படாமல் பேசு, மவுனமாயிராதே; நான் உன்னுடனேகூட இருக்கிறேன். உனக்குத் தீங்குசெய்யும்படி ஒருவனும் உன்மேல் கைபோடு வதில்லை; **இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு**,'' என்றார் (அப்.18:9-10). பவுல் ஒன்றரை ஆண்டு கொரிந்துவில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்.

அப்போஸ்தலர் புத்தகத்தில் (அப். 17-18) கொரிந்தியருக்கு அவர் எழுது வதை வாசியுங்கள். கொரிந்துவில் அவர் இயேசு கிறிஸ்துவைப்பற்றிய இரண்டு எளிய சத்தியங்களையே அறிவித்தார். அவர் சுவிசேஷத்தைப் பிரசங் கித்தார். அதை பிரகடனம் செய்து எப்படி அதைப் போதித்தார் என்பதோடு இந்தக் கடிதத்தை முடிக்கிறார் (15:1-14). பவுல் சுவிசேஷத்தைப் பிரசங்கித்த பொழுது இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்தார் என்றும், மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்றும், வேத வசனங்களையும், சுவி சேஷத்தையும் கேட்ட சிலருக்கு பரிசுத்த ஆவியானவர் விசுவாசத்தின் வரத்தைக் கொடுப்பார் என்றும் விசுவாசித்தார். தேவன் பவுலிடம் இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு என்று சொன்னபொழுது விசுவாசித்தவர்களான இந்த மக்களையே குறிப்பிட்டார்.

சிலர் ஏன் விசுவாசிக்கிறார்கள்?

சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டபொழுது ஏன் சில மக்கள் மட்டுமே விசு வாசித்தனர், சிலர் ஏன் விசுவாசிக்கவில்லை? அது விசுவாசிப்பவர்கள் புத்தி மான்கள் அல்ல, விசுவாசிக்காதவர்கள் புத்திசாலிகள் என்ற காரணத் தினாலல்ல. விசுவாசிப்பவர்கள் புத்தியுள்ளவர்கள், விசுவாசியாதவர்கள் முட்டாள்கள் என்பதினாலுமல்ல. பவுல் விசுவாசம் ஒரு வரம் என்றும், சுவி சேஷம் அறிவிக்கப்படும்பொழுது அதை விசுவாசிக்கும் மக்களுக்கு பரிசுத்த ஆவியானவர் இந்த வரத்தை அளிக்கிறார் என்றும் கூறுகிறார். அவர்கள் கேட்பது சத்தியம் என்பதைத் தெரிந்துகொள்ள பரிசுத்த ஆவியானவர் அவர்களை அசைக்கிறார். அவர்களுக்கு விசுவாசத்தின் வரம் கொடுக்கப்பட்ட தால் அவர்கள் விசுவாசிக்கிறார்கள் (எபே. 2:8; பிலிப்பியர் 1;29).

பத்தொன்பதாம் வசனத்தில் ஏசாயா தீர்க்கதரிசி ''அவர்களுடைய ஞானி களின் ஞானம் கெட்டு, அவர்களுடைய விவேகிகளின் விவேகம் மறைந்து போகும்,'' (ஏசாயா 29:14) என்று கூறியிருப்பதைப் பவுல் எடுத்துக்காட்டு கிறார். மூன்றாம் அதிகாரம் பத்தொன்பதாம் வசனத்தில் யோபுவின் புத்த கத்தில், ''அவர் ஞானிகளை அவர்களுடைய தந்திரத்திலே பிடிக்கிறார்; திரி யாவரக்காரரின் ஆலோசனை கவிழ்க்கப்படும்,'' (யோபு 5:13) என்று எழுதி யிருப்பதையும் பவுல் எடுத்துக்காட்டுகிறார். ஏசாயா மூலமாக மனிதனுடைய விவேகமே அவனது அழிவுக்குக் காரணமாயிருக்கும் என்று தேவன் முன்னறி விக்கிறார். இந்த தீர்க்கதரிசனம் நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துவதாக பவுல், ''ஞானி எங்கே? வேதபாரகன் எங்கே? இந்தக் காலத்தின் தத்துவ ஞானி

எங்கே? உலக ஞானத்தை தேவன் பைத்தியமாக்கவில்லையா?'' என்று கேட்கிறார். இந்தக் கேள்விகளைக் கேட்டு தேவன் மனிதனுடன் தன் விவாதத்தை ஆரம்பிக்கிறார், ''நீ எங்கே இருக்கிறாய்?'' பின்னர் அவர் காயீனிடம், ''உன் சகோதரன் எங்கே?'' பின்னைய நாட்களில் தேவன் ஆபிரகாமிடம், ''உன் மனைவி எங்கே?'' என்று கேட்கிறார். இங்கே நம்முடைய கேள்வி, ''ஞானமுள்ள மனிதன் எங்கே?'' இந்தக் கேள்வியின் அழுத்தம், ''ஆவிக்கேற்றபடி நடக்கும் ஞானமுள்ள மனிதன் எங்கே?'' என்பதாகும்.

இவ்வுலகத்தின் ஞானம் தேவனுக்கு முன்பாக ஏன் பைத்தியமாயிருக்கிறது? இதற்குப் பவுலின் பதில், ''உலகமானது சுயஞானத்தினாலே தேவனை அறியவில்லை,'' (21) என்பதே. நம்மைப்படைத்த தேவனுக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் என்று தேவனுக்குத் தெரியும் (நீதி. 9:10).

யூதர்கள் தேவனை அணுகும் வழிகளைத் தொகுத்துக் கூறும்போது, பவுல், ''யூதர்கள் அடையாளத்தைக் கேட்கிறார்கள்,'' என்று எழுதுகிறார்.

''கிரேக்கர் ஞானத்தைத் தேடுகிறார்கள்,'' என்று பவுல் எழுதும்பொழுது கொரிந்துவில் வாழும் மக்கள் எப்படி தேவனை அணுகுகிறார்கள், எப்படி மற்ற காரியங்களை அணுகுகிறார்கள் என்பதைப்பற்றிய அவர்களின் குணத்தைப் பற்றி விவரிக்கிறார். இந்தக் காரணத்தினால் கிறிஸ்து சிலுவையிலறையப்பட்ட சுவிசேஷத்தைப் பற்றிய எளிய பிரகடனம் யூதர்களுக்கு தடைக்கல்லாயிருந்தது. அவர்கள் சுவிசேஷத்தைக் கேட்கும்போது மற்ற எல்லாரிடமும் இருக்கும் அடையாளத்துக்கு அப்பால் அது எந்த அடையாளத்தையும் கொடுக்கவில்லை.

சுவிசேஷம் ''பைத்தியமாயிருக்கிறது,'' என்று கிரேக்கர்கள் நினைக்கிறார்கள். ஏனெனில் சுவிசேஷத்தை அறிந்துகொள்ள நீ ஒரு புத்திசாலியாயிருக்க வேண்டியதில்லை. ஆனால் ''அழைக்கப்பட்டிருக்கிறவர்கள்'' யூதர்களாயிருந்தாலும் கிரேக்கர்களாயிருந்தாலும் அதைப்பற்றி எந்தத் தடையுமில்லை – கிறிஸ்து சிலுவையிலறையப்பட்டதைப் பற்றிய சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது தேவனுடைய ஞானமும் வல்லமையுமாயிருக்கிறது. மக்கள் அதைக் கேட்டு விசுவாசிக்கும்பொழுது அவர்களுடைய வாழ்வில் இரட்சிப்பின் அற்புதம் நடக்கும்.

4. ''இயல்பான மனிதனும் ஆவிக்குரிய மனிதனும்''

(I கொரிந்தியர் 2:6 – 16)

இரண்டாம் அதிகாரம் ஆறாம் வசனத்தில், தேவனுடைய வசனப்பகுதிகளில் எனக்குப் பிரியமான ஒரு பகுதியுடன் ஆரம்பிக்கிறார்:

''அப்படியிருந்தும், தேறினவர்களுக்குள்ளே ஞானத்தைப் பேசுகிறோம்; இப்பிரபஞ்சத்தின் ஞானத்தையல்ல, அழிந்து போகிறவர்களாகிய இப்பிரபஞ்சத்தின் பிரபுக்களுடைய ஞானத்தையுமல்ல, உலகத்தோற்றத்திற்கு முன்னே தேவன் தம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும் மறைக்கப்பட்டதுமாயிருந்த இரகசியமான தேவஞானத்தையே பேசுகிறோம். அதை இப்பிரபஞ்சத்துப் பிரபுக்களில் ஒருவனும் அறியவில்லை; அறிந்தார்களானால், மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறையமாட்டார்களே. எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணியவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை. நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்.

அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார். மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷருக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான். நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்குத் தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம். அவைகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவர்களோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம்.

ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானப்படுகிறவைகளானதால் அவைகளை அறியவுமாட்டான். ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்; ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். கர்த்தருக்குப் போதிக்கத்தக்கதாக அவருடைய சிந்தையை அறிந்தவன் யார்? எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது'' (2 : 6-16).

பவுலைப்போன்ற எந்தப்பெரிய போதகரும், மக்கள் எப்படிக் கற்றுக்கொள்ளுகிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்வர். மக்கள், ''காது வாசல்''

வழியாக அல்லது கேட்பதின் மூலமாகக் கற்றுக்கொள்ளுகிறார்கள். இது நம்முடைய பெற்றோர்கள், போதகர்கள், ஆசிரியர்கள் இன்னும் மற்றவர்கள் சொல்லிய எல்லாக் காரியங்களையும் உள்ளடக்கியது. நாம் ''கண் வாசல்'' மூலமாகவும் கற்றுக்கொள்ளுகிறோம். இது நாம் பார்த்து கற்றுக் கொள்வதைக் குறிக்கிறது. இதனால் தான் ஒலி ஒளி வழிக்கல்வி (Audio Visual Education) மூலம் போதிக்கும்போது பயன்தருகிறது. இங்கே நாம் ஒரே நேரத்தில் கண்மூலமும் காதுமூலமும் கற்றுக் கொள்ளுகிறோம்.

இந்த வசனப்பகுதியில் பவுல் கண், காது, இருதயம் ஆகியவை களைப்பற்றிக் குறிப்பிடுகிறார். இருதயம் சித்தத்தைக் குறிப்பிடுகிறது. கற்றுக்கொள்ள விருப்பமில்லாத ஒருவனுக்குக் கற்றுக் கொடுப்பது கடினம். நம்முடைய ஆண்டவர், ''எந்த ஒரு மனிதனுக்கும் செய்ய மனதிருந்தால், அவன் அறிந்துகெள்ளுவான்'' (யோவான் 7:17 இன் அடிப்படையில்). சீடர்கள் இயேசுவைப் பின்பற்றுபவர்கள், இவர்கள் செயல்களின் மூலம் கற்றுக் கொள்ளுகிறார்கள், பின்னர் தங்கள் வாழ்வின் மற்ற நேரங்களில் தாங்கள் கற்றுக்கொண்டவைகளை செயல்படுத்துவதில் தங்கள் நேரத்தைச் செலவிடுபவர்கள். ''சீடர்'' என்ற சொல்லின் முக்கிய அர்த்தம் இதுவே. தாங்கள் தெரிந்தவைகளைச் செயல்படுத்தும் மக்களை இயேசு தேடிக்கொண்டிருந்ததில் ஆச்சரியம் எதுவுமில்லை.

வேதகாமத்திலுள்ள இந்தச் சிறந்த அதிகாரத்தின் முக்கியமான செய்தி என்னவெனில் ஆவிக்குரிய சத்தியங்களை நாம் கற்றுக்கொள்ள நமக்கு இன்னொரு வாசல் அவசியம் – அதாவது நமக்குப் பரிசுத்த ஆவியானவராகிய வாசல் அவசியம். இந்தக் கருத்தைத் தெளிவுபடுத்த பவுல் ஒரு அழகான எடுத்துக்காட்டைப் பயன்படுத்துகிறார். மனிதனுடைய ஆவியினால் மட்டுமே மனிதனுடைய எண்ணங்களை அறிந்துகொள்ள முடியும். மற்றொரு மனிதன் எதைச் சிந்திக்கிறான் என்று நாம் அறிந்து கொள்ள வேண்டுமானால் நமக்குள் அந்த மனிதனின் ஆவி இருக்க வேண்டும்.

இதுபோலவே, தேவன் என்ன சிந்திக்கிறார் என்பதைத் தெரிந்துகொள்ள தேவனுடைய பரிசுத்த ஆவியானவரால் மட்டுமே முடியும். பரிசுத்த ஆவியானவர் நமக்குள் இருக்கும்பொழுது, தேவனுடைய எண்ணங்களைத் தெரிந்துகொள்ளும் ஆற்றல் நமக்கிருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் நமக்குள்ளிருக்கும்போது கிறிஸ்துவினுடைய அதே இருதயம் நமக்கிருக்கிறது! நாம் கிறிஸ்துவினுடைய ஆவிக்குரிய சத்தியத்தைத் தெரிந்துகொள்ள ஒரே வழி, பரிசுத்த ஆவியானவரை நமக்குள் வைத்திருப்ப தேயாகும். ஏனெனில் ஆவிக்கேற்ற சத்தியங்களை ஆவிக்கேற்றபடிக் கற்றுக் கொள்ள வேண்டும். உங்களுக்குள் பரிசுத்த ஆவியானவர் இல்லையென்றால் ஆவிக்கேற்ற சத்தியங்களை நீங்கள் அறிந்துகொள்ள முடியாது.

பதினைந்தாவது வசனத்தில் ''ஆவிக்குரியவன்'' என்ற சொல்லைக் காண்கிறீர்கள். பவுல் யாரைப்பற்றிப் பேசுகிறார்?

அவர் சுவிசேஷத்தை விசுவாசித்து, இரட்சிப்பின் அற்புத அனுபவத்தைப் பெற்று அதன்மூலம் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொண்ட மனிதனைப் பற்றி திட்டமாகக் கூறுகிறார். அவன் கூரிய புத்திசாலியாகவோ வேதாகமக் கல்வியை கற்றுக் கொண்டவனாகவோ இருக்க வேண்டிய தில்லை. இருந்தாலும், இவற்றைத் தெரிந்து கொண்டால் மிக்க நல்லது தான்.

முதல் நான்கு அப்போஸ்தலர்களும் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் என்ற உண்மை எனக்குக் குழப்பமாகவே இருக்கிறது. இயேசுவுக்காக அவர்கள் தங்கள் உலகம் முழுவதையும் எட்டிப் பிடித்தார்கள். ஏனெனில் அவர்கள் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொண்டவர்கள்; ஆவிக்குரிய வாழ்க்கை வாழ்ந்தவர்கள். இந்த உலகத்தில் ஏறக்குறைய இருபது லட்சம் போதகர்கள் இருக்கிறார்கள், ஆனாலும் ஒரு லட்சம் மக்களுக்குக் குறைவானவர்களே வேதாகமக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றவர்கள்.

இந்த முதல் நான்கு அப்போஸ்தலர்களைப் போன்ற மக்களால் உயிர்த்தெழுந்த, உயிரோடிருக்கும் கிறிஸ்து, உலகம் முழுவதிலும் இன்று எடுத்துச் செல்லப்படுகிறார்.

இந்த வசனங்களில் பவுல் இரண்டு வகையான மனிதர்களைப் பற்றி குறிக்கிறார். வேதாகமம் முழுவதிலும் இந்த மாதிரி பின்பற்றப்பட்டது. சங்கீதப் புத்தகம் ஆசீர்வதிக்கப்பட்ட மனிதனையும் துன்மார்க்க மனிதனையும் குறிப்பிடுகிறது; இயேசு புத்திசாலியான மனிதனையும் புத்தியில்லாத மனிதனையும் குறிப்பிடுகிறார் (சங்கீதம் 1, மத்தேயு 7:24–27). இங்கே பவுல் ஆவிக்குரிய மனிதனையும் ஜென்மசுபாவமுள்ள மனிதனையும் குறிப்பிடுகிறார். அவர் ''ஜென்மசுபாவமுள்ள'' என்ற வார்த்தையை ''ஆவிக் குரியவனல்லாத'' என்ற கருத்தில் பயன்படுத்துகிறார். தனக்குள் பரிசுத்த ஆவியானவர் வாசமாயிருக்கும் ஒருவனையும், பரிசுத்த ஆவியானவரைப் பெற்றிராத ஒருவனைப் பற்றியுமே நமக்கு அவர் தெரிவிக்கிறார்.

போதகர்கள் இன்று தேவனுடைய வசனங்களைப் போதிக்கும்பொழுது, அங்கத்தினர்களை மேல்வாரியாகப் பார்த்து ஆவிக்கேற்றபடியான மனிதனை ஆவியினால் ஆட்கொள்ளப்படாத மனிதனிடமிருந்து பிரித்தறிய முடியும். பவுல் எபேசியருக்காக ஜெபம் பண்ணியபோது, ''உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்க வேண்டுமென்றும்'' ஜெபித்தார். (எபே. 1:19). தேவனுடைய வசனங்களை மற்றவர்களுக்கு அறிவிப்பவர்கள் தேவனுடைய வசனங்களைக்கேட்டுப் புரிந்து கொண்டவர்களின் கண்கள் பிரகாசிப்பதைக் கண்டுகொள்ள முடியும்.

இதுபோலவே, சில சமயங்களில் பவுல் ஜென்மசுபாவமுள்ள அல்லது ஆவிக்கேற்றபடியல்லாத மனிதன் என்று விவரிப்பவனை எளிதில் அடையாளங்காண முடியும். அந்த மனிதனால் ஆவிக்குரிய காரியங்களைப் புரிந்து கொள்ள முடியாது. உண்மையில் அவைகளை அவன் பைத்தியக்காரத்தனமானவை என்று கருதுகிறான். ஏன்? ஏனெனில் அவனுக்குள் பரிசுத்த ஆவியானவர் இல்லை. புரிந்துகொண்டதற்கு அடையாளமாக அவனிடம் பிரகாசமில்லை.

ஆவிக்குரிய மக்களல்லாதவர் ஆவிக்குரிய சத்தியங்களை அல்லது ஆவிக்கேற்ற மதிப்புகளைப் புரிந்துகொள்ளுவார்கள் என்று நாம் எதிர்பார்க்கக் கூடாது. கிறிஸ்துவுக்குள் உங்கள் விசுவாசத்தையும் அனுபவத்தையும் மதச் சார்பற்ற மக்களோடு பகிர்ந்துகொள்ள முயற்சிக்கும்பொழுது, உங்கள் கண்களையும் காதுகளையும் திறந்த அதே பரிசுத்த ஆவியானவர், அந்த மக்கள் மறுபடியும் பிறந்து தேவனுடைய ஆவியைப் பெற்றுக்கொள்ளும்படி அவர்களுடைய கண்களையும் காதுகளையும் திறக்க வேண்டுமென்று ஜெபம் செய்யுங்கள்.

இது நம்மைச் சில முக்கிய கேள்விகளோடு விட்டுச் செல்லுகிறது. தேவனுடைய கிருபையினால் நீ சுவிசேஷத்தை விசுவாசித்து மறுபடியும் பிறந்தவனா? பரிசுத்த ஆவியானவர் உனக்குள் வாசம் செய்கிறாரா? உன் கண் வாசலையும், காது வாசலையும், இருதய வாசலையும் திறந்து ஆவிக்கேற்ற சத்தியங்களை போதிப்பதற்காக ''ஆவியின் வாசல்'' உன்னிடம் இருக்கிறதா? பரிசுத்த ஆவியானவர் உன்னில் வாசம் செய்வதால் தேவனுடைய எண்ணங்களையும் கிறிஸ்துவின் இருதயத்தையும் உன்னால் அடைய முடியுமா? அல்லது நீ ஆவிக்கேற்ற சத்தியங்களைப் புரிந்துகொள்ள முடியாத, சுவிசேஷங்கள் பைத்தியமானவை என்றழைக்கும் ஜென்மசுபாவமுள்ள, ஆவிக்கேற்றபடியல்லாத ஒரு மனிதனா?

5. ''பரிசுத்த ஆவியானவர் போதிக்கும் வேதவசனங்கள்''

(I கொரிந்தியர் 2 : 6 – 16)

பரிசுத்த ஆவியானவருக்கு அநேக ஊழியங்களும் கடமைகளும் இருக்கின்றன. அவர் நமக்குப் புத்துயிரளித்து உள்ளிருந்து வெளியாக நம்மைப் புது சிருஷ்டியாக்குகிறார். இயேசு அவரை ஒரு பராக்லீட் (Paraclete) என்றழைத்தார். இந்த கிரேக்கச் சொல், ''நமக்கு உதவும்படியாக நம் அருகில் வந்து நம்மோடு இணைந்து கொள்கிறார்'' என்ற அர்த்தமுடையது.

பரிசுத்த ஆவியானவரின் முக்கியமான ஊழியங்களில் ஒன்று நமக்குப் போதிப்பது. இயேசு பரிசுத்த ஆவியானவர் என்ற கருத்தை அப்போஸ்தலருக்கு அறிமுகப்படுத்தியபொழுது, அவர் (பரிசுத்த ஆவியானவர்) ''சகல சத்தியங்களுக்குள்ளும் உங்களை நடத்துவார்... வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்'' (யோவான் 16 : 13), என்று கூறினார். ஒரு சமயத்தில், இயேசு எல்லாரிடமும் பேசியபின், அவர் அப்போஸ்தலர்களோடு தனியாயிருந்து அவர்களுடைய கேள்விகளுக்குப் பதிலளித்து அவருடைய போதனைகளை விளக்கிக் கூறினார். அவர் அவர்களிடம் தம் போதனை அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது, அதன் அர்த்தத்தைத் தெரிந்துகொள்ளுவதற்காகவே என்றும், மற்றவர்களுக்கு அது கொடுக்கப்படவில்லை என்றும் கூறினார்.

இயேசு அடிக்கடி தம்முடைய போதனையைக் குறித்து இப்படி அபிப்பிராயத்தைத் தெரிவித்தார். திருமண உறவைப்பற்றி அவர் போதித்தபின், வரம் பெற்றவர்கள் தவிர மற்றவர்கள் திருமண உறவைப்பற்றிய அவருடைய போதனையை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் (மத்தேயு 19:11) என்று சொன்னார். அவர் ஏன் உவமைகள் மூலமாக போதிக்கிறார் என்று அவரிடம் கேட்டபொழுது, உவமைகளால் போதிக்கும்போது அது அருளப்பட்டவர்களால் மட்டுமே அதை அறிந்துகொள்ள முடியும் என்று சொன்னார் (மத். 13.11). அவருடைய போதனைகளைப் புரிந்துகொள்ளும்படி அருளப்பட்டவர் பரிசுத்த ஆவியானவரின் வரம் பெற்றவர்களே என்பது தெரிகிறது.

அப்போஸ்தலன் யோவான் நமக்குள் ஒரு அபிஷேகம் இருக்கிறது, இந்த அபிஷேகம் நமக்குப் போதிக்கிறது என்று எழுதுகிறார். நமக்குள் இருக்கும் அபிஷேகமே சகலத்தையும் குறித்துப் போதிக்கிறது, வேறு எந்த மனிதனும் அவசியமில்லை என்றும் அவர் சொல்லுகிறார் (I யோவான் 2:20,27).

நமக்குள் வாசம் செய்யும் பரிசுத்த ஆவியானவர் ஆவிக்குரிய சத்தியங்களை நமக்குப் போதிக்க முடியும் என்று பவுல் கூறுகிறார். தேவனுடைய வசனத்தை போதிப்பதே தனது ஊழியத்தின் நோக்கம் என்று கூறும்போது இந்த சத்தியத்தை பவுல் அழகாக வெளிப்படுத்துகிறார். ஆவிக்கேற்ற சத்தியங்களை ஆவிக்குரிய மக்களுக்கு ''பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே'' (தாம்) போதிப்பதாக உரிமையுடன் கூறுகிறார். ஆவிக்குரிய சத்தியம் ஆவிக்குரியபடி பிரித்தெடுக்கப்படுகிறது என்றும், ஆவிக்குரிய சத்தியத்தை ஆவிக்குரியவரிடம் போதிப்பதாகவும் அவர் எழுதியதின் அர்த்தம் (2 : 13).

நீ வேத வசனங்களை பிரசங்கிப்பதையும் போதிப்பதையும் நீ வாசிக்கும் போதோ, கேட்கும்போதோ, ''இதை நான் கடந்த வாரத்தில் அல்லது நேற்று நான் வாசித்ததோடு சம்பந்தப்பட்டது போலிருக்கிறதே'' என்று யோசிக்கிறீர்களா? அப்படியானால் அதுவே பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய

வசனங்களை உங்களுக்குப் போதிக்கும் வார்த்தைகளாகும். இயேசு, பவுல், அப்போஸ்தலன் யோவான் இவர்கள் யாவரும் தேவனுடைய வசனத்தை நாம் புரிந்துகொள்ளுவதற்கு ஒரே வழி, பரிசுத்த ஆவியானவர் நமக்குள்ளிருந்து, நம்முடையப் போதகராக ஆவிக்குரிய காரியங்களை நமக்கு வெளிப் படுத்துவதே என்றனர். அவர் உனக்குள் வாசம் செய்வதற்கான காரணங்களில் இதுவும் ஒன்று – இது அவர் உங்களுக்கு ஊழியம் செய்வதின் அதிக முக்கிய மான வழிகளில் ஒன்று.

ஒரு மனிதனுக்கு புத்திசாலித்தனம், அல்லது கல்வியின் அடிப்படையில், ஆவிக்குரிய சத்தியங்களைப் புரிந்துகொள்ளும் திறனிருந்தால், அது சரி யல்ல. நம் எல்லாருக்கும் ஒரே அளவு புத்திசாலித்தனமும் கல்வியறிவும் பெற வாய்ப்புகளில்லை.

பேதுருவால் கடிதங்களை எழுத முடியவில்லை, எனினும், பேதுருவின் நிருபங்களை நீங்கள் வாசிக்கும்பொழுது, ஆவிக்குரிய காரியங்களைப்பற்றி அவ்வளவு அழகாக, தெளிவாக எழுதியுள்ளார். தேவன் நமக்கு ''ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும்'' கிடைக்கச் செய்திருக்கிறார் என்று அவர் எழுதுகிறார் (II பேதுரு 1:3). ஆவிக்கேற்றவனாக இருக்க அவனுக்கு எழுதப்படிக்கத் தெரிய அவசியமில்லை. அவனுக்குள் பரிசுத்த ஆவியானவர் இருக்கிறார், அவனுக்குப் போதிக்க எந்த மனிதனும் அவசியமில்லை. ஏனெனில் பரிசுத்த ஆவியானவரே அவனுக்குப் போதித்தார்.

ஆவிக்குரிய காரியங்களை புரிந்துகொள்ளும் திறன் இன்னும் விசுவாசி களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. ''கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்,'' என்று இயேசு போதித்தார். ''தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும் (மத். 7:7). தேவனுடைய வசனங்களைக்கேட்டு, தேடி, கதவைத் தட்டிக் கொண்டு வந்தால், பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய வசனங்களை உங் களுக்காகத் திறந்து கொடுப்பார். அவர் உங்களுக்கு வேதத்திலுள்ள உண்மை களைப் போதிப்பார்.

6. ''பவுல் யார்?''

(I கொரிந்தியர் 3 : 1 – 7)

மானிட குடும்பத்தை ஜென்ம சுபாவமுள்ளவன் என்றும் ஆவிக்குரியவன் என்றும் பிரித்தபின், கொரிந்தியரின் முதலாம் நிருபத்தின் மூன்றாம் அதி காரத்தில் பவுல் மூன்றாவது பிரிவைச் சார்ந்த மனிதனை அறிமுகப்படுத்து கிறார். அநேக வார்த்தைகளினால் அவர், ''கொரிந்துவிலுள்ள துன்மார்க்கரே, உங்களை நான் எப்படி அழைப்பேன்? நீங்கள் உங்கள் தலைவர்களால் கவரப்

பட்டு அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும்போது, உங்களை ஆவிக் குரிய மனிதர் என்று எப்படி நான் சொல்ல முடியும்?'' என்று எழுதுகிறார்.

முடிவில் பவுல் ''நான் உங்களை ஆவிக்குரியவர்களென்று எண்ணி உங் களுடன் பேசக்கூடாமல், மாம்சத்துக்குரியவர்களென்றும், கிறிஸ்துவுக்குள் குழந்தைகளென்றும் எண்ணிப் பேசவேண்டியதாயிற்று'' (3 : 1) என்று கூறு கிறார். இப்பொழுது நம்மிடம் ஆவிக்குரிய மனிதன் (ஆவியைப் பெற்றுக் கொண்டு ஆவிக்குரிய காரியங்களைப் புரிந்துகொள்ளும் ஒருவன்), ஜென்ம சுபாவமான மனிதன் (தேவனுடைய ஆவியைப் பெற்றுக்கொள்ளாமல் ஆவிக் குரிய காரியங்களைப் புரிந்துகொள்ளாத ஒருவன்) மாம்சத்துக்குரிய மனிதன் ஆகியவர்கள் இருக்கிறார்கள். (பவுல் ''மனிதன்'' என்ற சொல்லை மனித வகை என்ற கருத்தில் பயன்படுத்துகிறார்.) ''இந்த மாம்சத்துக்குரிய மனிதன் யார்?'' என்று நாம் கேட்கவேண்டும்.

''மாம்சம்'' என்ற வார்த்தை, கிரேக்க மொழியில் ''சதை'' என்பதன் மொழி பெயர்ப்பாகும். மூன்று வகையான மனிதர்களை இங்கே பவுல் குறிப்பிட்டுச் சொல்லுகிறாரா? ஆனால் இந்தப் பகுதியை மற்றொரு வழியிலும் பார்க்கலாம். ஜென்மசுபாவமான மனிதன் ஆவிக்குரிய மனிதனாக இருக்க முடியாது. ஏனெனில் அவனிடம் ஆவியில்லை. அவனுக்கு வேறு எதையும் தெரிவு செய்ய முடியாது. அவன் எப்பொழுதும் மாம்சத்தில் நடக்கிறான். ஆவியில் நடக்க அவனுக்கு ஆற்றல் இல்லை.

இதற்கு மாறாக, ஆவிக்குரிய மனிதன், பரிசுத்த ஆவியையுடையவனா யிருக்கிறான், ஆனால் எப்பொழுதும் அவன் ஆவிக்குரிய மனிதன் போல் நடக்கிறானா? இல்லை, அவனுக்கு தேர்ந்தெடுக்கும் உரிமை இருக்கிறது. அவன் ஆவியில் நடந்து, வாழ்ந்து அசைந்து ஆவியின் ஜீவியாயிருந்து ஆவியின் கனியைக் கொண்டுவர முடியும். ஆனால் அவன் எப்பொழுதும் அப்படிச் செய்யவில்லை. எனவே ஆவிக்குரிய மனிதன் ஆவியில் நடக்காவிட்டால், அவனை ''மாம்சத்துக்குரிய'' மனிதன் என்று பவுல் அழைக்கிறார்.

இப்பொழுது நீங்கள், ''மாம்சத்துக்குரிய ஆவிக்கேற்ற மனிதன் என்று ஒன்றுமில்லை,'' என்று சொல்லலாம். ஆனால் அதைப்பற்றி சிந்தித்துப் பாருங்கள். உண்மையாகவே வேறு எந்த வகையிலுமான ஆவிக்குரிய மனிதன் இருக்கிறானா? இயேசு கிறிஸ்து நூறு சதவீதம் எல்லா நேரத்திலும் ஆவிக்குரியவராயிருந்தார், ஆனால் நாம் அப்படியிருக்கிறோமா? நாம் அப்படியிருக்கும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம், அப்படி நாம் இருக்க முடியும், ஆனாலும் நாம் எல்லா நேரங்களிலும் ஆவிக்கேற்றவர் களாயிருக்கிறோமா? ஆவிக்குரியவன் தேவனைச் சாராமல் தன்னுடைய மனித இயல்பைச் சார்ந்திருந்தால் அவன் மாம்சமானவன் என்பது அப்போஸ்தலர் பவுலின் கருத்து.

கொரிந்திய விசுவாசிகள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்த வான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கின்றனர் என்பதை அவர்களுக்கு ஞாபகப்படுத்தி பவுல் இந்த கடிதத்தைத் துவங்குகிறார். இப்பொழுது அவர்கள் தம் அழைப்புக்குப் பாத்திரராக வாழவில்லை என்று பவுல் அவர்களுக்குச் சொல்லுகிறார். அவர்களின் பொறாமையும் சண்டைசச்சரவுகளும் இதற்கு நிரூபணமாயிருக்கின்றன. இதன் அர்த்தத்தை பவுல் சுருக்கமாக ''மாம்சத்தில் நடக்கும் மனிதர்களைப்போல நான் உங்களை நடத்தவேண்டும், ஏனெனில் நீங்கள் அதையே செய்கிறீர்கள். உண்மை யாகவே நான் உங்களைக் குழந்தைகளைப்போல நடத்தத் தீர்மானித் திருக்கிறேன். ஏனெனில் நீங்கள் அப்படியே இருக்கிறீர்கள். ஆவிக்குரிய குழந்தைகள், தேவனுடைய உதவியில்லாமல் எதையும் செய்யமுடியாது என்று இன்றும் கற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் தங்கள் சொந்த பெலத்தில் தேவனிடமிருந்து உதவியைத் தேடாமல் பரிசுத்தவான்களைப்போல வாழ முயற்சிக்கிறார்கள்.

பவுல், குழந்தைகளுக்கு இன்னும் ஜீரண உறுப்புகள் வளர்ச்சி யடையாததால், அவர்களுக்குப் பால் போன்ற எளிதாக ஜீரணமாகும் ஆகாரத்தையேக் கொடுக்க வேண்டும் என்று எழுதுகிறார். தொடர்ந்து அவர்களுக்குக் குழந்தையின் ஆகாரம் கொடுக்க வேண்டியிருப்பதைக் குறித்து அவர் வருந்துகிறார். கொரிந்திய சபை முழுவதையும் ஒரு நர்சரி பள்ளி போல நடத்துகிறார்.

உங்கள் போதகரிடமிருந்து ஏற்கெனவே ஜீரணித்த ஆவிக்குரிய ஆகாரத்தை மட்டுமே பெற்றுக்கொள்ளுபவர்களாக இருந்தால், நீங்கள் வசனம் என்ற பாலூட்டப்படும் ஆவிக்குரிய குழந்தையாகவே இருக்கிறீர்கள். நீங்கள் ஒரு குழந்தையாயிருந்தபொழுது பால் ஒரு அற்புதமான உணவு. பேதுரு, நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள் என்று நம்மை உற்சாகப்படுத்துகிறார். (I பேதுரு 2 : 3). ஆனால் ஒரு வளர்ச்சியடைந்த மனிதனுக்கு ஒழுங்கான உணவாகப் பாலைக் கொடுக்கும் ஒரே நேரம் அவன் சுகவீனமாயிருக்கும் வேளையில் மட்டுமே.

பவுலின் பாதையில் சென்று முதல் நான்கு அதிகாரங்களில் கொடுக்கப்பட்ட விவாதங்களை பாராட்டுவது முக்கியமானது.

''அப்பொல்லோ யார் ? பவுல் யார் ?'' என்று பவுல் கேட்கும்பொழுது அவர் சபையிலுள்ள பிரிவினைகளைப்பற்றி எழுதுகிறார். ''கர்த்தர் அவனவனுக்கு அருளியபடியே'' பவுல், அப்போல்லோ, இவர்கள் கொரிந்தியர்கள் விசுவாசிக்கிறதற்கு ஏதுவாயிருந்த ஊழியக்காரர் தானே என்று பவுல் எழுதுவதன் மூலம் தன் கேள்விக்கு பவுல் பலமுறை பதிலளிக்கிறார் (5).

பெரும்பாலான கடிதங்களில் பவுல் தன்னை இயேசு கிறிஸ்துவின் அடிமை என்று கூறுகிறார். பவுலும் அப்பொல்லோவும் கொரிந்து பட்டணத்தில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும், சபைக்கு மேய்ப்பர்களா யிருக்கும்படியும் பொறுப்பளிக்கப்பட்ட அடிமைகள் மட்டுமே. தொடர்ந்து பவுல் தன் கேள்விக்குப் பதிலளிக்கிறார்: ''நான் நட்டேன், அப்பொல்லோ நீர்ப்பாய்ச்சினான், தேவனே விளையச் செய்தார். அப்படியிருக்க, நடுகிறவனும் ஒன்றுமில்லை, நீர்ப்பாய்ச்சுகிறவனும் ஒன்றுமில்லை, விளையச் செய்கிற தேவனாலே எல்லாமாகும்'' (6,7). பவுல் கொரிந்தியர்கள் தங்கள் தலைவர்களைச் சுற்றி கவரப்பட்டு, அதனால் சபையில் பிரிவினை ஏற்படுவதால் அவர்களைக் கடிந்துகொண்டார்.

சுருக்கம்

ஆவிக்குரிய சமூகமானது விரோதத்தாலும் பொறாமையினாலும் நிறைந்திருப்பதால் அவர்கள் இன்னும் மாம்சத்திற்குரியவர்களாகவே நடந்து கொண்டிருக்கிறார்கள் என்று பவுல் முடிவு செய்கிறார். அவர்கள் நடத்தையும் அவர்கள் ஆவிக்குரியவைகளில் குழந்தைகளாகவே இருக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது. கொரிந்துவில் சுவிசேஷத்தை அவர் பிரசங்கித்த போது அவர்கள் அனுபவித்த மிகப்பெரிய இரட்சிப்புக்குப்பின்னால் தேவனுடைய வல்லமை இருந்தது. இதனால் அவர்கள் தேவனைச் சுற்றி கவர்ந்திழுக்கப்பட்டவர்களாக இருக்க வேண்டும். தம்முடைய குமாரனை, கொரிந்துக்கு அவர்களின் இரட்சிப்புக்காக அனுப்பிய தேவனுக்கே அவர்கள் கீழ்ப்படிந்து அவரையே பின்பற்ற வேண்டும், என்று பவுல் கூறுகிறார்.

7. ''அஸ்திபாரத்தின் மேல் கட்டுதல்''

(I கொரிந்தியர் 3 : 8-17)

மூன்றாம் அதிகாரத்தில் கொரிந்தியர்கள் தேவனுடைய விளைநிலம் என்ற அழகான உவமையைப் பயன்படுத்தி பவுல் எழுதுகிறார். அவரும் அப்பொல்லோவும் விவசாயிகளைப் போலிருக்கிறார்கள். அவர் சுவிசேஷம், தேவனுடைய வசனம் ஆகியவற்றை விதைத்தார், அப்பொல்லோ அதற்குத் தண்ணீர் விட்டான், தேவன் அந்த விதைக்கு உயிர்கொடுத்து அதை வளரச்செய்தார். ஒன்பதாம் வசனத்தில் அந்த உவமையை மாற்றி அதே விசுவாசிகளுக்கு, ''நீங்கள் தேவனுடைய பண்ணையும் மாளிகையு மாயிருக்கிறீர்கள்,'' என்று சொன்னார்.

பேதுருவும், பவுலும், ஒரு விசுவாசியின் உடலே இப்பொழுது தேவனுடைய ஆலயமாயிருக்கிறது என்று போதித்தார்கள். இன்று தேவன்

கட்டும் ஆலயத்தில் நாம் ஜீவனுள்ள கற்களாக இருக்கிறோம் என்ற கருத்துடைய உவமையாக பேதுரு கூடுதலாக எழுதுகிறார் (1 பேதுரு 2 : 5). உயிர்த்தெழுந்து உயிரோடிருக்கும் கிறிஸ்துவைப்பற்றி எவ்வளவு அழகான விவரணம் !

கட்டிடம் என்ற எடுத்துக்காட்டைப் பயன்படுத்தி, பவுல், ‘‘எனக்கு அளிக்கப்பட்ட தேவகிருபையின்படியே புத்தியுள்ள சிற்பாசாரியைப்போல அஸ்திபாரம் போட்டேன். வேறொருவன் அதின்மேல் கட்டுகிறான். அவனவன் தான் அதின்மேல் இன்னவிதமாய்க்கட்டுகிறானென்று பார்க்கக் கடவன். போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப்போட ஒருவனாலும் கூடாது,‘‘ (10-11) என்று தொடர்ந்து எழுதுகிறார். கொரிந்துவிலுள்ள சபை ஒரு கட்டிடத்தைப் போன்றது என்றும், அவர் கொரிந்துவில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, அதை நிலைநாட்டிய அங்கத்தினர்கள் இரட்சிப்படைந்தபோது அந்தக் கட்டிடத்துக்கு அஸ்திபாரமிட்டார் என்றும் பவுல் சொல்லுகிறார்.

பவுல் ஒரு மிஷனரி. கிறிஸ்துவின் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்ட இடத்தில் அவர் பிரசங்கிக்க விரும்பவில்லை. கிறிஸ்துவைப்பற்றி பிரசங்கிக்கப்படாத இடங்களில் அவர் பிரசங்கிக்க விரும்பினார். அவர் அஸ்திபாரங்களிட விரும்பினார். ஆனால் கிறிஸ்தவம் ஒரு கூட்டு முயற்சி என்று பவுலுக்குத் தெரியும், அப்பொல்லோ, பவுல் போன்றவர்கள், கொரிந்து போன்ற இடங்களில் அவருடைய ஊழியத்தைப் பின்தொடருவார்கள் என்று அவர் விசுவாசித்தார். சுவிசேஷத்தை பிரசங்கித்ததின் மூலம் அவர் அஸ்திபாரமிட்ட இடங்களில் அவர்கள் கட்டியெழுப்புவார்கள்.

அந்த அஸ்திபாரத்தின்மேல் கட்டப்போகிறவர்களுக்கு அவர் கொடுத்த எச்சரிக்கையை இப்பொழுது நாம் வாசிக்கிறோம்:

> ‘‘ஒருவன் அந்த அஸ்திபாரத்தின்மேல் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல், மரம், புல், வைக்கோல் ஆகிய இவைகளைக் கட்டினால், அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும்; நாளானது அதை விளங்கப்பண்ணும். ஏனெனில் அது அக்கினியினாலே வெளிப்படுத்தப்படும்; அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும். அதின்மேல் ஒருவன் கட்டினது நிலைத்தால், அவன் கூலியைப் பெறுவான். ஒருவன் கட்டினது வெந்துபோனால், அவன் நஷ்டமடைவான்; அவனோடு இரட்சிக்கப்படுவான்; அதுவும் அக்கினி யிலகப்பட்டுத் தப்பினது போலிருக்கும்’’ (12-15).

அநேக வேத அறிஞர்கள், விசுவாசிகள் நியாயந்தீர்க்கப்படும்போது, கிறிஸ்துவின் நியாயத்தீர்ப்பு ஆசனத்தை பவுல் குறிப்பிடுகிறார் என்று விசுவாசிக்கிறார்கள். வேதவசனங்களில் காணப்படும் மற்றொரு நியாயத்தீர்ப்பு, பெரிய வெள்ளை நியாயத்தீர்ப்பு. சிங்காசனத்திலிருந்துவரும் நியாயத்தீர்ப்பு. அப்போது விசுவாசிகளாக இல்லாதவர்கள் நியாயந் தீர்க்கப்பட்டு நித்திய மரண ஆக்கினையடைவார்கள் (வெளி. 20:11-15).

எனினும், கிறிஸ்துவின் நியாயத்தீர்ப்பில் எவரும் துண்டிக்கப்பட மாட்டார்கள். இந்த நியாயத்தீர்ப்பின் விளைவு மதிப்பிடுதல், இயேசுவை உன் இரட்சகராக விசுவாசித்தபின் உன் வாழ்வின் முழு மதிப்பென்ன? ‘‘ஒரே ஒரு வாழ்வு, அது சீக்கிரமாய்க் கடந்துபோகும், கிறிஸ்துவுக்காகச் செய்த காரியங்கள் மட்டுமே நிலைத்திருக்கும்.’’ கிறிஸ்துவாகிய அஸ்திபாரத் தின்மேல் எதைக்கட்டப் போகிறீர்கள். நிலைத்திருப்பவைகளான பொன், வெள்ளி, விலையேறப் பெற்ற கற்கள் ஆகியவைகளாலேயா அல்லது மரம், புல், வைக்கோல் ஆகிய நீடித்து உழைக்காதப் பொருட்களாலேயா?

நியாயத்தீர்ப்பை பற்றிய இந்த உவமை, நாம் மரம், புல், வைக்கோல் இவைகளோடு பொன், வெள்ளி, விலையேறப்பெற்றக் கற்களையும் கலந்து சேகரிக்கிறோம் என்று மறைமுகமாகத் தெரிவிக்கிறது. நாம் விசுவாசிகள் என்று மதிப்பிடப்படும்பொழுது, நாம் சேமித்த எல்லாவற்றையும் இயேசு கிறிஸ்து நெருப்பினால் எரிப்பார். மரம், புல், வைக்கோல் ஆகியவைகள் நெருப்பில் எரிக்கப்படும்பொழுது அவைகள் அழிந்துபோகும். பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கற்கள் ஆகியவைகளை நெருப்பு சுத்திகரிக்கும்.

இதில் போதிக்கப்படும் சத்தியமாவது, இரட்சிப்பின் அனுபவத்தை நாம் பெற்றபின் மாம்சத்துக்குரியவர்களாக இருந்து அவர்மேல் நம்பிக்கை வைக்காமல், அவருக்காக வாழ்ந்து ஊழியஞ்செய்ய முயற்சிக்கும்பொழுது நாம் மரம், புல், வைக்கோல் ஆகியவைகளைச் சேகரிக்கிறோம். ஆவிக்குரியவர்களாக இருக்கும்பொழுதோ நாம் வாழ்ந்து, அசைந்து முழுவதும் கிறிஸ்தவைச் சார்நதவர்களாக இருந்து, விலையுயர்ந்த உலோகங்களையும் நகைகளையும் சேகரிக்கிறோம். நெருப்பு அணைந்தபின் நம்முடைய நித்தியத்தின் தரம் தீர்மானிக்கப்படும்.

நம்முடைய நற்கிரியைகளினால் நாம் இரட்சிக்கப்படுகிறோம் என்று பவுல் போதிக்கவில்லை. இந்த நெருப்பினால் எரிக்கப்படுபவைகள் நம்முடைய இரட்சிப்பு அல்ல. உண்மையில் அவர், ஒரு ஞானமுள்ள தேர்ச்சிபெற்றக் கட்டிட நிபுணராக கொரிந்துவின் விசுவாசிகளின் வாழ்க்கையில் அவர் போட்ட அஸ்திபாரத்தின்மேல் கட்டுபவர்களையே அவர் எச்சிரிக்கிறார். அந்த அஸ்திபாரம் கிறிஸ்துவே, அவரே கொரிந்து விசுவாசிகளின் இரட்சிப்புக்கு அஸ்திபாரமாயிருக்கிறார்.

கொரிந்திய விசுவாசிகளை ஒரு கட்டிடம் என்று எடுத்துக்காட்டுவதைத் தொடர்ந்து பவுல், ''நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக் கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக்கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம், பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்,'' (16-17) என்று கேட்ட பொழுது பேதுருவுடன் அவர் ஒத்துக்கொள்ளுகிறார்.

மனிதனுடைய கைகளினால் கட்டப்பட்ட ஆலயத்தில் தேவன் இனிமேலும் வாழ்வதில்லை என்று பவுலும் பேதுருவும் ஒத்துக் கொள்ளு கின்றனர். அவர் இனிமேல் வனாந்தரத்திலோ, ஆசரிப்பு கூடாரத்திலோ அல்லது சலொமோனின் தேவாலயத்திலோ வாசம் செய்யமாட்டார். நாம் விசுவாசிகளா யிருந்தால் நம்முடைய உடலே தேவனுடைய ஆலயம். அவர் நமக்குள் வாழ்கிறார் - அந்த ஆலயத்தை நாம் மாசுப்படுத்தக் கூடாது.

8. ''ஞானியும் பைத்தியக்காரனும்''

(I கொரிந்தியர் 3 : 18 - 20)

பவுல் மூன்றாவது அதிகாரத்திலும் முதல் அதிகாரத்தில் அளித்த கருத்துக் குத் திரும்புகிறார்: ''ஒருவனும் தன்னைத்தானே வஞ்சியாதிருப்பானாக; இவ் வுலகத்திலே உங்களில் ஒருவன் தன்னை ஞானியென்று எண்ணினால் அவன் ஞானியாகும்படிக்குப் பைத்தியக்காரனாயிருக்கக்கடவன். இவ்வுலகத் தின் ஞானம் தேவனுக்கு முன்பாகப் பைத்தியமாயிருக்கிறது. அப்படியே, ஞானிகளை அவர்களுடைய தந்திரத்திலே பிடிக்கிறாரென்றும், ஞானி களுடைய சிந்தனைகள் வீணாயிருக்கிறதென்று கர்த்தர் அறிந்திருக்கிறா ரென்றும் எழுதியிருக்கிறது'' (3:18-20).

நாம் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களாக மாறும்பொழுது நம் புத்தியை பயன்படுத்துவதை நிறுத்திவிட வேண்டும் என்று பவுல் போதிக்கவில்லை. இரண்டாவது அதிகாரத்தில், பவுல், பரிசுத்த ஆவி, ஆவிக்குரியவற்றைப் போதிக்கிறார் எனக்காண்கிறோம். ''பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தை களாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப் படுத்திக் காண்பிக்கிறோம்.'' என்னைப்போன்ற அநேகருக்கு கிறிஸ்துவுக்குள் வரும்முன்பாக மனது என்று ஒன்றிருந்ததே தெரியாது. நான் இரட்சிப்பின் அனுபவத்தைப் பெறும்பொழுது என்னுடைய வயது பத்தொன்பது. எனினும், கிறிஸ்துவுக்குள் நான் வந்த பின்னர்தான் தேவன் எனக்கு ஒரு மனதைக் கொடுத்திருக்கிறார் என்று தெரிந்து கொண்டேன். பரிசுத்த ஆவி யானவரின் அபிஷேகம் பெற்று கிறிஸ்துவுக்குள் வந்தபின், நான் முன்பு பயன்

படுத்தியதைவிட அந்த மனதை அதிகமாகப் பயன்படுத்தினேன். இது அநேக விசுவாசிகளைப் பொறுத்தவரையில் உண்மையாயிருக்கிறது.

''இவ்வுலகத்தில் ஞானம்'' என்று பவுல் குறிப்பிடுவது என்ன? சில வேளைகளில் வேதவசனங்கள் ''உலகம்'' என்ற சொல்லை உபயோகப் படுத்தும்போது நம்பிக்கைகளின் ஒரு அமைப்பு, மதிப்புகளின் அமைப்பு, அல்லது உலகம் முக்கியத்துவம் கொடுப்பவற்றைக் குறிப்பிட பயன்படுத்தப் பட்டது. இதையே பவுல் ஆவிக்குரிய மக்களுடைய மதிப்புகளை ஆவிக்குரிய வர்களல்லாதவரிடமிருந்து எதிர்பார்க்க முடியாது என்கிறார்.

நாம் விசுவாசிகளாகும்பொழுது நமக்கு ஆவிக்குரிய மதிப்புகள் இருக் கின்றன என்று வேதவசனங்கள் தெளிவாகக் கூறுகின்றன. நாம் ''மனம் புதிதாகிற'' அனுபவத்தைப் பெற்றிருக்கிறோம் (ரோமர் 12:2). இயேசு முன் சொல்லியபடி, தேவனையும் அவருடைய குமாரனையும் தெரிந்துகொள்ளும் போது வாழ்வு ஆரம்பமாகிறது (ரோமர் 12:2). உலகம் சிந்திக்கிற வழியில் நாம் சிந்திக்கக்கூடாது. நாம் ஜீவனுள்ள கிறிஸ்துவுடன் ஐக்கியமாயிருக்கிறோம். பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசம் செய்கிறார். நம்முடைய தகுதி களுக்கும் எண்ணங்களுக்கும் மூலாதாரமாக தேவன் இருக்கிறார்.

எனவே, பவுல் மறுபடியும் இந்த முரண்பாட்டைக் கொண்டுவந்த பொழுது - உலக ஞானமும் தேவ ஞானமும் - அவர், ''இவ்வுலகத்திலே உங் களில் ஒருவன் தன்னை ஞானியென்று எண்ணினால் அவன் ஞானியாகும் படிக்குப் பைத்தியக்காரனாயிருக்கக் கடவன்,'' என்று எழுதுகிறார். சாலொமோன், ''கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்'' (நீதி. 9:10) என்றார். கர்த்தருக்குப் பயப்படுதல் என்பதும் கர்த்தருக்குள் விசுவாசம் என்பதும் ஒரே காரியம். கர்த்தருக்குப் பயப்படுதல் என்பது அவரை ஒரு கடுமையான எஜமானனைப் போலப் பார்ப்பது என்று அர்த்தமுடையதல்ல. தேவனுக்கு மரியாதை கொடுப்பதாகும். இதன் அர்த்தம், தேவனை நீங்கள் விசுவாசிப்பதால், அவர் வாழும் ஆலயத்தை மாசுப்படுத்தப் பயப்படுகிறீர்கள்.

தேவனுக்குக் கீழ்ப்படியாமலிருப்பதற்குப் பயப்படுகிறீர்களா? தேவன் உங்களைத் தண்டிப்பார் என்று நீங்கள் விசுவாசிப்பதால், அவருக்குப் பயந்து நீங்கள் பாவஞ்செய்யாமல் இருக்க முயற்சி செய்கிறீர்களா? அது தேவனுக்கு பயப்படுதலின் ஆரோக்கியமான ஒரு காரியம். அது நம்பிக்கையின் ஒரு சாட் சியாகவும் ஞானத்தின் ஆரம்பமாகவும் இருக்கிறது. நீங்கள் தேவனை விசு வாசிக்கத் தொடங்கும்போது, ஞானத்துடனிருக்கத் துவங்குகிறீர்கள். தேவனுடைய பார்வையில் நீங்கள் ஞானியாயிருக்க விரும்பினால், உலகத் தாராலே பைத்தியக்காரன் என்று எண்ணப்படுவதை எதிர்கொள்ள தயாரா யிருங்கள். தேவனுடைய காரியங்களில் ஞானமுடையவர்களாக இருக்கிறீர் களா? ஆவிக்கேற்ற காரியங்களில் ஞானமுடையவர்களாயிருக்கிறீர்களா?

வேதவசனங்களை அறிந்துகொள்ளுவதில் ஞானமுடையவர்களாயிருக்கிறீர் களா?

ஆவிக்கேற்ற ஞானமுடையவர்களை உலகம் பைத்தியக்காரர் என்றழைக் கிறது. உலகத்திலுள்ள ''ஞானம்'' தேவனால் பைத்தியம் என்று கருதப்படு வதில் நமக்கு வியப்பு எதுவுமில்லை, ஏனெனில் அவர்களுடைய ஞானத்தின் மூலம் அவர்கள் அவரை அறிந்து கொள்ளவில்லை. சுவிசேஷத்தைப் பிரசங் கிப்பதின்மூலம் மக்களை இரட்சிப்பது தேவனுடைய திட்டம். ஆவிக்குரிய வாழ்க்கை இல்லாத மனிதன், சுவிசேஷத்தைக் கேட்டு ''பைத்தியக்காரத் தனம்!'' என்று சொல்லுகிறான். ஆனால் இயேசு அந்த உலகத்தானைக்கண்டு ''பைத்தியக்காரன்'' என்கிறார்.

அப்போஸ்தலர்களுக்கும், தம்முடைய சபைக்குமான அவருடைய மிகப் பெரிய ஜெபத்தில் இயேசு: ''ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பியவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்'' (யோவான் 17:3) என்று ஜெபிக்கிறார். இயேசு கூறியபடி, தேவனையும் அவருடைய குமாரனையும் நாம் தெரிந்துகொள்ளும் இடத்திலிருந்து வாழ்க்கை ஆரம்பிக்கிறது. பவுல் இந்த உண்மையை வேதத்தில் கண்டுபிடிப் பவன் ஞானி என்றும், அதை உணராதவர்கள் பைத்தியக்காரர்கள் என்றும் எழுதுகிறார்.

9. ''இரகசியங்களின் உக்கிராணக்காரன்''

(I கொரிந்தியர் 3:21-4:5)

இந்தக் கடிதத்தில் பவுல் கொரிந்திய சபைகளைப்பற்றிய முதல் பிரச்சினைக்கு முடிவு காண்கிறார் – விசுவாசிகள் தங்கள் சபைத் தலைவர் களைச் சுற்றி கவரப்படுவதால் அவர்களிடையே ஏற்படும் பிரிவினைப் பிரச் சினையைப் பற்றிக் கூறுகிறார். இந்த முடிவு 29-ஆம் வசனத்தில் காணப்படு கிறது : ''இப்படியிருக்க, ஒருவனும் மனுஷரைக்குறித்து மேன்மை பாராட்டா திருப்பானாக; எல்லாம் உங்களுடையதே; பவுலாகிலும், அப்பொல்லோவா கிலும், கேபாவாகிலும், உலகமாகிலும், ஜீவனாகிலும், மரணமாகிலும், நிகழ் காரியங்களாகிலும், வருங்காரியங்களாகிலும், எல்லாம் உங்களுடையது; நீங்கள் கிறிஸ்துவுடையவர்கள்; கிறிஸ்து தேவனுடையவர்'' (21-23).

உங்களை இரட்சிப்புக்குக் கொண்டுவரவும், உங்கள் விசுவாசத்தில் உங் களை வளர்க்கவும் அவசியமான காரியங்கள் எவை என்று தேவனுக்குத் தெரி யும் என்று பவுல் சொல்லுகிறார். உங்கள் வாழ்வில் இந்த அற்புதங்களை நிறை வேற்றத் தேவையான எல்லாக் காரியங்களும் உங்களுக்கு இருப்பதை அவர் உறுதிப்படுத்துகிறார். எனவே, பவுல் உங்களுக்குத் தேவை என்றால் தேவன்

பவுலை அனுப்புவார், அப்பொல்லோ வேண்டுமானால் அப்பொல்லோவை யும், பேதுரு வேண்டுமானால் பேதுருவையும் அனுப்புவார். உங்கள் வாழ்வில் நேரிடும் எல்லாக்காரியங்களையும் தேவன் பயன்படுத்தி, அவைகளை நன் மைக்கேதுவாக ஆக்குவார். இவையாவற்றையும் இயக்குபவர் தேவனே. இதனால், தேவன் அனுப்பும் இந்த மனிதர்களைக் குறித்து கொரிந்தியர்கள் மேன்மை பாராட்டாமலிருக்க வேண்டும் என்று சொல்லித் தன் விவாதத்தை முடிக்கிறார்.

நான்காம் அதிகாரத்தில், ''இப்படியாக, எந்த மனுஷனும் எங்களைக் கிறிஸ்துவின் ஊழியக்காரரென்றும், தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரரென்றும் எண்ணிக்கொள்ளக்கடவன்'' (1) மற்றொரு மொழி பெயர்ப்பில், ''தேவனுடைய இரகசியங்களின் பொறுப்புக்கொடுக்கப் பட்டவர் '' என்று எழுதப்பட்டுள்ளது. இதனால் பவுல் இங்கே, ''நாங்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரர் (அடிமைகள்) மட்டுமே. கிறிஸ்து எங்களைக் கொரிந்துவுக்கு அனுப்பியதால் நாங்கள் இங்கே வந்தோம். கிறிஸ்துவினால் நடந்தது, எங்களால் அல்ல,'' என்று சொல்லுகிறார்.

இரண்டாவது அதிகாரத்தில் பவுல், ''மறைக்கப்பட்டதுமாயிருந்த இரகசி யமான தேவஞானத்தைப்'' போதிப்பதாக எழுதுகிறார். மறைபொருள் என்பது கடைசியில் வெளியிடப்படும் ஒரு இரகசியம். இரண்டு கருத்துக்களில் சுவி சேஷம் ஒரு மறைபொருளாயிருக்கிறது : இயேசு கிறிஸ்து மறுபடியும் வந்து, கிறிஸ்துவில் மனித வரலாறு பூர்த்தி செய்யப்படும்பொழுது சுவிசேஷம் வெளிப்படுத்தப்படும். வருங்காலத்தைப்பற்றி வேதாகமம் சொல்லக்கூடிய அநேக காரியங்கள் இருக்கின்றன. இந்தக் கடிதத்தில் பிற்பகுதியில் கல்லறைக்கு அப்பால் வாழ்வு என்பதைப்பற்றிப் பவுல், ''இதோ, ஒரு இரக சியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்,'' என்று எழுதுகிறார். வருங்கால நிகழ்ச்சிகள் இப்பொழுது நமக்கு மறைவாயிருக்கின்றன. ஆனால் ஒருநாள் அவைகள் வெளிப்படுத்தப்படும்.

எனினும், பவுல் இந்தக் கொரிந்திய விசுவாசிகளிடம் இரட்சிப்பைக் கொண்டுவந்த தாமும் மற்றத்தலைவர்களும் வருங்காலத்துக்கும் இப் பொழுதிலுமுள்ள தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரர்க ளாகக் கருதப்படவேண்டும் என்கிறார். பரிசுத்த ஆவியானவர் இந்த சத் தியங்களை வெளிப்படுத்தும்வரை சுவிசேஷத்திலிருந்தும் வேத வசனங் களிலிருந்தும் அநேக காரியங்கள் நமக்கு மறைக்கப்பட்டிருக்கும். இந்தக் கருத் தில், தேவன் நம்மோடுபகிர்ந்துகொள்ளும் சத்தியங்கள் எல்லாம் நமக்கு ஒரு மறைபொருளாயிருக்கிறது. பவுல், வேதவசனங்களைப் போதிக்கும் தம்மை யும் மற்றவர்களையும் இந்த இரகசியங்களின் உக்கிராணக்காரரென்று கருது கிறார்.

தொடர்ந்து பவுல், ''மேலும், உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவனுக்கு அவசியமாம்'' (2) என்று சொல்லுகிறார். லூக்கா 16-ஆம் அதிகாரத்தில் உக்கிராணத்துவம் பற்றிய ஒரு உவமையை இயேசுவானவர் கொடுக்கிறார். இந்த உவமையிலும் வேறு உவமைகளிலும், நாம் எல்லாரும் உக்கிராணக்காரர்களே என்று அவர் போதிக்கிறார். தேவனுடைய பிள்ளைகளாக நாம் மற்றொருவருக்குச் சொந்தமான காரியங்களை நிர்வகிக்கிறோம். ''நீங்கள் உங்களுடையவர்களல்ல... கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே,'' என்று பவுல் இந்தக் கடிதத்தில் எழுதுகிறார். (6:19-20).

உக்கிராணத்துவம் என்பது நம்முடைய நேரமோ, நம்முடைய வல்லமையோ நமக்குச் சொந்தமானதல்ல என்பதே. உக்கிராணத்துவம் நம்முடைய பணத்தோடும் உடைமைகளோடும் மட்டும் தொடர்புடையது மட்டுமல்ல. அது நம்முடைய வாழ்வின் ஒவ்வொரு பரிமாணத்துடனும் தொடர்புடையது. ஆழ்ந்த கருத்துடைய இந்தப் பகுதியில் பவுல், தேவனுடைய இப்போதைய, வருங்கால மறைபொருட்களை உக்கிராணத்துவத்தோடு தொடர்புபடுத்துகிறார்.

உக்கிராணக்காரருக்கு முக்கியமான ஒரு காரியம், அவர்கள் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும், ஏனெனில் ஒரு நாள் நாம் நம்முடைய உக்கிராணத்துவத்துக்கான கணக்கை ஒப்புவிக்கவேண்டும். ஆண்டவர் கூறும் ''நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே (உக்கிராணக்காரன்)'' என்ற இந்த வார்த்தைகளினால் நாம் மகிழ்ச்சியடைபவர்களாக இருக்க முடியுமா?

இந்த எண்ணத்தை இரண்டாம் வசனத்தில் அறிமுகப்படுத்திய பவுல், ''நீங்கள் என்னைப் பற்றியும் என் உக்கிராணத்துவத்தைப் பற்றியும் நியாயந்தீர்க்கிறீர்கள். வெளிப்படையாகச் சொன்னால் இது எனக்குப் பெரிதாகத் தெரியவில்லை'' என்று தவிர்க்கமுடியாமல் எழுதுகிறார். (தன்னை மிகப் பெரியவர் என்று கருதும் கொரிந்து மக்களுக்கு எழுதுகிறார் என்பது ஞாபகமிருக்கட்டும்.)

உண்மையில் பவுல் இங்கே, ''என்னைப்பற்றி உண்மையாக நீங்கள் என்ன தெரிந்துகொண்டீர்கள்? என்னைப்பற்றி எனக்கு என்ன தெரியும்? என்னைப்பற்றி நான் தீர்ப்பளிப்பதும் கிடையாது. இது ஏன் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். என்னுடைய இருதயத்தின் நோக்கங்கள் எனக்குத் தெரியாது. தேவன் மட்டுமே என் நோக்கங்களை அறிவார், இதனாலேயே என்னை நியாயந்தீர்க்கும் தகுதியுள்ள ஒரே ஒருவராக அவர் இருக்கிறார் (எரே. 17:9-10; சங்கீதம் 139:23, 24). எனவே, கர்த்தரே என்னை நியாயந்தீர்க்கிறவர். இதனால் மற்றவர்களை நியாயந்தீர்ப்பதில் கர்த்தர் வரும் காலம்வரை

எதற்கும் தீர்ப்பளிக்காதீர்கள்,'' என்று கேட்கிறார். பவுலின் கூற்றுப்படி, கர்த்தர் வரும்போது, ''இருளில் மறைந்திருக்கிறவர்களை அவர் வெளியரங்கமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார்; அப்பொழுது அவனவனுக்குரிய புகழ்ச்சி தேவனால் உண்டாகும்'' (5).

10. ''இரத்த சாட்சியின் மாதிரிகள்''

(I கொரிந்தியர் 4 : 6 – 21)

இந்த அதிகாரத்தின் ஏழாவது வசனத்தில் பவுல் ஆழ்ந்து சிந்திக்கவேண்டிய முக்கியமான கேள்விகளை எழுப்புகிறார். முதலாவதாக, ''உன்னை, மற்றெல்லா படைப்புகளினின்றும் விசேஷித்தவனாகச் செய்கிறவர் யார்? ''மனிதர்கள் ஒவ்வொருவரும் தனித்தன்மையுடன் வடிவமைக்கப் பட்டிருக்கின்றனர், தேவனிடம் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறான திட்டங்களிருக்கின்றன. இது தேவனுடைய மிகப்பெரிய அற்புதங்களில் ஒன்று. எடுத்துக்காட்டாக, யோவான் சுவிசேஷத்தின் கடைசியில், யோவானுக்கு தேவனுடைய திட்டம் என்ன என்று இயேசுவிடம் பேதுரு கேட்கிறான். ஆண்டவர், ''நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால், உனக்கென்ன, நீ என்னைப் பின்பற்றிவா,'' என்று பதிலளித்தார் (யோவான் 21:22).

ஆறு பில்லியனுக்கும் அதிகமான மக்கள் இன்று பூமியின்மேல் வாழ்கின்றனர். எனினும், நம்மில் ஒவ்வொருவரும் தனித்தன்மையுடையவர்கள். நம் எல்லாருக்கும் வித்தியாசமான கைரேகைகள் உள்ளன. உயர்ரக மின்னணுக் கருவிகளினால் ஒவ்வொருவர் குரலையும் அடையாளங் கண்டுகொள்ள முடியும். ஏனெனில் நம்மில் இருவருக்கு ஒரே குரல் இருப்பதில்லை; நம்முடைய பல்லின் அமைப்புகள் வேறுபட்டவை. தேவன் உன்னையும் என்னையும் இன்னும் கோடிக்கணக்கான மக்களையும் படைத்தபொழுது, ஒவ்வொரு முறையும் ஒரு மாதிரியை களைந்து விட்டு புதிதொன்றை உண்டாக்கினார் என்று டி.என்.ஏ. (DNA) எந்தத் தவறுமின்றி உறுதிப்படுத்துகிறது. முதல் மனிதனையும், பெண்ணையும் படைத்த காலம் முதல் இதை அவர் செய்து வருகிறார்.

ஏழாம் வசனத்தில் பவுலின் இரண்டாவது கேள்வி, ''எனக்கு உண்டாயிருக்கிறவைகளில் நீ பெற்றுக்கொள்ளாதது எது?'' தேவனிடத்திலிருந்து நீ பெற்றுக் கொள்ளாதது ஒன்றுமில்லை. உன்னைப் படைத்தபொழுது எப்படி எதுவும் செய்ய முடியாமலிருந்தாய் என்று நினைத்துப்பார். நீ இந்தப் பூமியில் பிறக்கவேண்டும் என்பதைத் தெரிந்துகொண்டாயா? உன் பெற்றோர்களை நீயாகவா தெரிந்து கொண்டாய்? உலகத்தின் எந்தப் பகுதியில், வரலாற்றின் எந்த நேரத்தில் பிறக்கவேண்டும் என்று தீர்

மானித்தது யார்? உன் திறமைகளையும் ஆவிக்குரிய வரங்களையும் முடிவு செய்தது யார்? இவைகளைப் பற்றி நீங்கள் சிந்தித்தால், நீங்கள் தேவனிடமிருந்து பெற்றுக் கொள்ளாத காரியம் ஒன்றுமில்லை என்பது தெரியும்.

மூன்றாவது கேள்வி, ‘‘நீ பெற்றுக்கொண்டவனானால் பெற்றுக் கொள்ளாதவன் போல் ஏன் நடந்து கொள்கிறாய்?’’ எந்தத் திறமையை - இயல்பான அல்லது ஆவிக்குரிய — தேவன் உனக்குக் கொடுக்கவில்லை என்று கூறுகிறாய் ? அதற்கு உனக்கு என்ன உரிமையிருக்கிறது?

தனக்கும், மற்ற அப்போஸ்தலர்களுக்குமான கேள்விகளுக்கு பவுல் கொடுக்கும் பதில்களை கவனமாக வாசியுங்கள். ‘‘நாங்கள் கிறிஸ்து வினிமித்தம் பைத்தியக்காரர், நீங்கள் கிறிஸ்துவில் புத்திசாலிகள்; நாங்கள் பலவீனர், நீங்கள் பலவான்கள்; நீங்கள் கனவான்கள், நாங்கள் கனவீனர். இந்நேரம்வரைக்கும் பசியுள்ளவர்களும் தாகமுள்ளவர்களும், நிர்வாணி களும், கட்டுண்டவர்களும், தங்க இடமில்லாதவர்களுமாயிருக்கிறோம். எங்கள் கைகளினாலே வேலைசெய்து, பாடுபடுகிறோம்; வையப்பட்டு, ஆசீர்வதிக்கிறோம்; துன்பப்பட்டு, சகிக்கிறோம். தூஷிக்கப்பட்டு வேண்டிக்கொள்ளுகிறோம்; இந்நாள் வரைக்கும் உலகத்தின் குப்பையைப் போலவும், எல்லாரும் துடைத்துப் போடுகிற அழுக்கைப் போலவுமானோம்’’ (10-13).

கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் கொடுக்கும் விலை இதுவாகும் என்பது தெளிவாகிறது. பவுலும் மற்ற அப்போஸ்தலர்களும் ‘‘இரத்தசாட்சியின் மாதிரிகள்’’ (models of martyrdom) ஆக இருந்தனர். கொரிந்தியர்களைத் தாழ்த்திக் கூறும்படி பவுல் இதை எழுதவில்லை. மாறாக, அவர்கள் தங்கள் இருதயங்களை பூமியின் பொக்கிஷங்கள் மீது வைக்காமல் பரலோகத்தின் மேல் வைக்கவேண்டுமென்பதை ஞாபகப்படுத்தவே இது எழுதப்பட்டது. இயேசு சிலுவைக்கு செல்லுமுன் இப்படி ஜெபித்தார், ‘‘பிதாவே, வேளை வந்தது... உம்முடைய குமாரன் உம்மை மகிமைப்படுத்தும்படிக்கு நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும்’’ (யோவான் 17:1).

அமெரிக்காவிலிருக்கும் டாக்டர் A.W.டோசர் என்ற நல்மதிப்புப் பெற்றுள்ள போதகர், இயேசு கிறிஸ்துவினுடைய ஒவ்வொரு சீடனும் இப்படியாக ஜெபிக்கவேண்டும் என்று அடிக்கடி போதித்தார்: ‘‘பிதாவே, உம்மை மகிமைப்படுத்தி எனக்கு அந்த பில்லை (Bill) அனுப்பும். பிதாவே, எதுவானாலும் சரி, உம்மை மகிமைப்படுத்தும்!’’ இயேசுவின் எந்தச்சீடனும் ‘‘சிலுவையை சுமக்க’’ சித்தமுள்ளவனாயிருக்கவேண்டும். இந்தக் காரியத்தில் பவுலும் அவன் உடன் அப்போஸ்தலர்களும், நம் எல்லாருக்கும் மிக உயர்ந்த மாதிரிகளாக இருந்தார்கள். இதனாலேயே அவர்

கொரிந்தியர்களையும் மற்றவர்களையும் அவருடைய எடுத்துக்காட்டைப் பின்பற்றும்படி ஊக்கப்படுத்தினார் (16).

11. ‘‘சபை நல்லொழுக்கம்’’

(I கொரிந்தியர் 5:1-5)

நான்கு அதிகாரங்களில் கொரிந்து சபையின் பிரிவினைகளின் பிரச்சினைகளைப் பற்றிக் கூறியபின் பவுல் ஐந்தாவது அதிகாரத்தில் ஒரு வித்தியாசமான பிரச்சினையைப் பற்றி எழுதுகிறார். கொரிந்துவிலுள்ள வீட்டுச் சபைகளில் பால்வினைப் பாவம் இருந்தது பொதுவாக தெரிந்த ஒரு காரியம். குறிப்பாக, ஒரு மனிதன் தன் தகப்பனுடைய மனைவியுடன் பாலுறவு வைத்துக் கொண்டிருந்தான். (அது அவன் தகப்பனின் மறுமனை யாட்டியாயிருந்திருக்கலாம்.) பவுல், ‘‘இப்படிப்பட்ட காரியஞ்செய்தவனை நீங்கள் உங்களைவிட்டு நீக்காமலும் துக்கப்படாமலும், இறுமாப் படைந்திருக்கிறீர்கள்’’ என்று எழுதுகிறார் (2).

கொரிந்தியருக்கிடையே இருந்த இந்த இரண்டாம் பிரச்சினையை பவுல் எழுதும் நமக்கு ‘‘சபை நல்லொழுக்கம்’’ பற்றி உணர்ந்து கொள்ள ஒரு வேதாகம மாதிரியாக உதவுகிறது.

சபை நல்லொழுக்கத்திற்கான உந்துதல்

சபை நல்லொழுக்கத்திற்கான உந்துதல் என்பது பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை நல்லொழுக்கத்தினுள் கொண்டுவரும்போது இருக்கும் அதே மாதிரியான உந்துதல் தான். அதாவது வழி விலகிப் போனவர்களை மீட்டுக்கொள்ளுதல், முற்றிலுமாக இரட்சித்தல். கொரிந்தியர்களுக்கு பவுல் ‘‘சபையிலுள்ள பாவத்தைப் புறக்கணிக்கக்கூடாது. நீங்கள் பாவத்தை எதிர்த்து, தவறுசெய்யும் விசுவாசியை சீர்ப்படுத்த வேண்டும்,’’ என்று ஆலோ சனையளிக்கிறார்.

வீழ்ச்சியடைந்த விசுவாசிக்கு நம்முடைய அன்போடுகூட நம் வாழ்க் கையைக் கண்டு கற்றுக்கொள்ள ஒரு வாய்ப்பளிக்க வேண்டும். அதாவது இயேசு கிறிஸ்துவைத் தெரிந்துகொள்ள ஆர்வமாயிருக்கும் ஒருவனிடம்: ‘‘இயேசு கிறிஸ்துவினால் மறுபடியும் பிறந்த ஒரு சீடன் எப்படியிருப்பான் என்பதை நீ தெரிந்து கொள்ள வேண்டுமானால் ஒன்று அல்லது இரண்டு மாதங்கள் எங்கள் வீட்டுக்கு வந்து எங்களோடு தங்கியிரு’’ என்று நாம் எல்லாரும் சொல்லக்கூடியவர்களாயிருக்க (தேவகிருபையினால் இப்படிப் பட்ட ஒரு அழைப்பை உண்மையாகத் தேடுபவர்களை அழைப்பதற்கு நாம்) திறனுடையவர்களாயிருக்க வேண்டும். சபை வரலாற்றின் முதல்

நூற்றாண்டுகளில் இப்படிப்பட்ட சக்தி வாய்ந்த வாழ்க்கையின் சாட்சியே ரோமராஜ்ஜியம் முழுவதும் சுவிசேஷத்தைப் பரவச் செய்தது.

இயேசு, பன்னிரு அப்போஸ்தலர்களையும் மூன்று ஆண்டு தம்மோடு வாழும்படி அழைத்தார். அந்த அனுபவம் இந்த அப்போஸ்தலர்களின் வாழ்க்கையை முழுவதுமாக மாற்றியது. அதேபோல, சபை உலகத்துக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கும்படி உருவாக்கப்பட்டது - இயேசு கூறியபடி சபையானது ''விளக்குத் தண்டின் மேல் வைத்த விளக்காகும்''. இந்த உவமையைக் கூறும்போது இயேசு, ''மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பலரோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிராகாசிக்கக்கடவது'' (மத் 5:16) என்று சொன்னார்.

தனியாகவோ அல்லது சேர்ந்தோ சபை இந்த உலகத்துக்குக் காட்டும் எடுத்துக்காட்டுகளே, சபை உலகத்துக்குப் பிரகடனம் செய்யும் சுவிசேஷத்தின் மிக முக்கியமான பகுதியாகும். இது உண்மை என்று சாத்தானுக்குத் தெரியும் என்பதால், அவன் அணுகுமுறை இந்த எடுத்துக்காட்டுகளை எதிர்ப்பதாகும். இதனாலேயே கிறிஸ்துவின் சரீரத்தில், குறிப்பாகத் தலைவர்களுக்குள், எப்பொழுதும் விபச்சாரப்பிரச்சினை இருந்து வருகிறது. துன்மார்க்கன் தலைவர்களின் எடுத்துக்காட்டுக்கு அவமானம் ஏற்படச் செய்ய விரும்புகிறான். ஏனெனில் அவர்களுடைய நன்னெறி, ஆவிக்குரிய காரியங்கள் இவற்றின் தோல்வி அதிக மக்கள்மீது எதிரிடையான தாக்கத்தை ஏற்படுத்தும்.

விசுவாசிகளுக்குள் விபச்சாரப் பிரச்சினையை எப்படி நாம் சமாளிக்க முடியும்? பவுல் கொரிந்தியருக்கு எழுதிய கடிதத்தின் இந்த அதிகாரம், இந்தக் கேள்விக்குப் பதில்களையளிக்கும் புதிய ஏற்பாட்டின் அதிகாரங்களில் ஒன்று. பவுல் முன்சொல்லியபடி, ஒரு மனிதன் பாலியல் பாவத்துக்குட் பட்டிருந்தால், சபையிலுள்ளவர்கள் அவனை எதிர்க்க வேண்டும். அதனால் அந்த மனிதன் தன் பாவத்தை அறிக்கையிட்டு விட்டுவிடக்கூடும் என்பதே இதன் நோக்கமாகும். தேவன் அவனுக்கு மன்னிப்பளிப்பார் (I யோவான் 1:9) என்பதே நமக்களிக்கப்படும் நற்செய்தியாகும். இதன் பின் பாவம் செய்தவரை பழைய நிலைக்குக் கொண்டு வந்து மறு வாழ்வளித்து அதைத் தொடர வேண்டும். (கலா 6:1).

கொரிந்து சபையில் இந்தப் பாவம் முடிந்துபோன ஒரு காரியமல்ல என்பதைக் கண்டுகொள்ளுவது முக்கியம். பவுல் இந்தக் கடிதத்தை எழுதியபோதும் அந்தப் பாவம் காணப்பட்டது. இன்னும் கேவலமான காரியம், பவுலோடு இந்தப் பிரச்சினையைப் பகிர்ந்து கொண்டவர்களால் இது

''சாதாரணமாக அறிவிக்கப்பட்டது''. எல்லாருக்கும் இதைப்பற்றித் தெரிந்தும், அதைப்பற்றி யாரும் ஒன்றும் செய்யாததுபோலத் தோன்றுகிறது.

இந்தப் பிரச்சினைக்குப் பவுலின் மருந்து சீட்டு இங்கே யிருக்கிறது:

> ''நான் சரீரத்தினாலே உங்களுக்குத் தூரமாயிருந்தும், ஆவியினாலே உங்களோடேகூட இருக்கிறவனாய், இப்படிச் செய்தவனைக்குறித்து நான் கூட இருக்கிறதுபோல, நீங்களும் என்னுடைய ஆவியும், நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் அதிகாரத்தோடே கூடி வந்திருக்கையில் இயேசு கிறிஸ்துவின் நாளிலே இரட்சிக்கப்படும்படி, மாம்சத்தின் அழிவுக்காக, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அவனைச் சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று தீர்ப்புச் செய்கிறேன்'' (3-5).

சபை நல்லொழுக்க அணுகுமுறை

பவுல் கடைசியாக, பாவத்தில் விழுந்த மனிதனுக்கு வேண்டிய இரட்சிப்பைப்பற்றிக் கூறுகிறார். வழி தப்பிப்போன அந்த சகோதரனை சபை பழைய நிலைக்குக் கொண்டுவரவேண்டும்.

பவுல் கொரிந்தியருக்கு இந்தக் கடிதத்தைத் தொடர்ந்து மற்றொரு கடிதத்தை எழுதும்பொழுது இந்த மனிதனை திரும்பவும் சபையின் ஐக்கியத்திற்குள் கொண்டுவர சபைக்கு உத்தரவிடுகிறார். (II கொரிந்தியர் 2:4-8).

சபையிலிருக்கும் தலைவர்களுக்கு நல்லொழுக்கம்

இந்தப் பாவத்தில் விழுந்தவர் கொரிந்திய சபையின் ஒரு தலைவரா யிருக்கலாம் என்று சில வேத நிபுணர்கள் நம்புகின்றனர். போதகர்களுக்கு அவர் எழுதிய கடிதங்களில் பவுல் (தீமோத்தேயுக்கு), ''மூப்பனானவனுக்கு விரோதமாக ஒருவன் செய்யும் பிராதை இரண்டு மூன்று சாட்சிகள் இல்லாமல் நீ ஏற்றுக்கொள்ளக்கூடாது. மற்றவர்களுக்குப் பயமுண்டாகும்படி, பாஞ் செய்தவர்களை எல்லாருக்கும் முன்பாகக் கடிந்துகொள்''. (I தீமோத்தேயு 5:19-20) என்று உத்தரவிடுகிறார். தீமோத்தேயுவுக்கு எழுதிய இந்த ஆலோசனையை கொரிந்தியருக்கு எழுதியவற்றோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, நாம், சம்பந்தப்பட்ட இந்த மனிதன் கொரிந்திய சபையின் ஒரு தலைவன் என்ற முடிவுக்கு வருகிறோம்.

நான்காவது அதிகாரத்தில் தவறுசெய்தவனை தீர்த்ததற்காக விசுவாசிகளைக் கடிந்து கொண்டு, கர்த்தர் வரும் நாள் வரை அவர்கள் எதையும் நியாயந்தீர்க்கக்கூடாது என்றும் உத்தரவிட்ட பின், இந்த அதிகாரத்தில் இந்த சகோதரனை நியாயந்தீர்க்காமல் இருந்ததற்காக அவர்களை அவர் கடிந்து கொள்ளுகிறார். பவுலோ இயேசுவோ நாம் எதையும் அல்லது எவரையும் நியாயந்தீர்க்கக்கூடாது என்று போதிக்கவில்லை. நாம் மற்றவர்களை நியாயந்தீர்க்குமுன் நமக்கு நாமே தீர்ப்பளிக்க வேண்டுமென்று இயேசு போதித்தார் (மத்தேயு 7:1-5). நாம் மற்றவர்களுடைய உள்ளெண்ணங்களைப்பற்றி தீர்ப்பளிக்கக் கூடாது. ஏனெனில் நம்முடைய சொந்த இருதயங்களின் உள்ளெண்ணங்களைப் பற்றியுங்கூட நமக்குத் தெரியாது என்று பவுல் போதித்தார்.

இந்த அதிகாரத்தில், சபையிலிருப்பவர்கள் குறிப்பாக தலைவர்கள் பாவம் செய்யும்போது நாம் நியாயந்தீர்த்து அவர்களை நல்லொழுக்க முள்ளவர்களாக ஆக்க வேண்டும் என்று பவுல் சொல்லுகிறார். ஒரு தலைவன் பாவஞ்செய்து கொண்டிருந்தால், அவன் தன் இரட்சிப்பை ''இழந்து'' விடுவான். அல்லது சபையைவிட்டு நீக்கிவிட வேண்டும் என்பது இதன் அர்த்தமல்ல. சபையிலிருந்து நீக்கப்படவேண்டியதற்கான ஒரேகாரணம், அவர்களுக்கு பாவத்தை எடுத்துக் காட்டினதற்குப் பின்னும் பாவ அறிக்கை யிடாமலும் மனந்திரும்பாமலுமிருக்கும் தொடர்ந்திருப்பதான பாவம்.

12. ''உங்கள் சகோதரனை நீங்கள் ஆதாயப்படுத்தும்படியாக''

(I கொரிந்தியர் 5 : 6 – 12)

தேவனுக்காக கிறிஸ்து, விரும்புவதுபோல் இந்த உலகில் சபை வல்லமையுடையதுமல்ல; செல்வாக்குடையதுமல்ல. அதற்கு அநேக காரணங்கள் உள்ளன. 1 கொரிந்தியர் ஐந்தாம் அதிகாரத்தில் சபை நல்லொழுக்கத்தில் குறைவுபடுவதான ஒரு காரியம் காணப்படுகிறது. கொரிந்துவில் சபை நல்லொழுக்கம் குறைவுபடுவதைப்பற்றியே பவுல் இவ்வளவு தீவிரமாக உணரும்போது, இன்றைய சபைகளைக் கண்டால் எப்படி உணர்வார்? சபை இந்த உலகத்தில் தேவனுடைய உறைவிடமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. சபையிலுள்ள விசுவாசிகள், இந்த உலகத்தில் இன்று உயிர்த்தெழுந்த இயேசு கட்டிக்கொண்டிருக்கும் சபையில் ஜீவனுள்ள கற்களைப்போலிருக்க வேண்டும் என்று பேதுருவும், பவுலும் கூறுகின்றனர். (I பேதுரு 2:5; I கொரிந்தியர் 3:9,16).

இன்று கிறிஸ்து தம்முடைய சபையின் தூய்மையையும் வல்லமையையுங்குறித்து கவலைப்படுகிறாரா? இவைகளிரண்டும் ஒன்றோடொன்று கைகோர்த்து செல்லுகின்றன. சபை தூய்மை யாயில்லாவிட்டால் அது வல்லமையுடனிருக்க முடியாது. சபையை நல்லொழுக்கத்தோடு வைப்பதன் நோக்கம், அதைத் தூய்மையாகவும் வல்லமையுடையதாகவும் வைத்திருப்பதாகும்.

சபை நல்லொழுக்கத்தின் நோக்கம்

சபை நல்லொழுக்கத்தின் நோக்கம் தவறு செய்தவரை தண்டிப்பது மட்டுமல்ல, பாவத்தினுள் விழுந்த ஒருவரை பழைய நிலைக்குக்கொண்டு வருவதும் கூடத்தான். மத்தேயு 18இல் கர்த்தர் இந்தக் கட்டளையைக் கொடுத்திருக்கிறார்: ''உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றஞ் செய்தால், அவனிடத்தில்போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து; அவன் உனக்குச் செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக்கொண்டாய். அவன் செவிகொடாமற் போனால், இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிக ளெல்லாம் நிலைவரப்படும்படி, இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக் கொண்டுபோ. அவர்களுக்கும் அவன் செவிகொடாமற்போனால், அதைச் சபைக்குத் தெரியப்படுத்து; சபைக்கும் செவிகொடாதிருப்பானானால், அவன் உனக்கு அஞ்ஞானியைப்போலவும் ஆயக்காரனைப்போலவும் இருப்பானாக'' (15-17).

இது மிகக் கடுமையானதாய் காணப்படுகிறது. அப்படியானால் சபை நல்லொழுக்கத்தின் நோக்கம் என்ன? ''நீ உன் சகோதரனை ஆதாயப்படுத்திக் கொள்ளுவதற்காக.'' அவன் மேல் உள்ள அன்பினால் நீ அவனை எதிர்த்து நல்லொழுக்கமுடையவனாக மாற்ற வேண்டும். உண்மையிலேயே அவன் ஆவிக்குரிய வனாயிருந்தால், தன் பாவத்தை அவன் அறிக்கையிடுவான். அவன் வீழ்ந்த இடத்திலிருந்து பழைய நிலைக்குக் கொண்டுவரப்படுவான். நீ உன் சகோதரனை ஆதாயப்படுத்திக்கொண்டாய். ஆனால் அவன் கிறிஸ்துவில் நிலைகொண்டிராத ஒரு சகோதரனாக இருந்தால், அவன் ''ஆட்டுத் தோலைப் போர்த்திய ஓநாய் ''ஆக மட்டுமேயிருந்தால், கிறிஸ்துவுக்காகவும் உன் சபைக்காகவும் அவனை ஒரு அஞ்ஞானியாக நடத்தி சபையின் தூய்மையை காப்பாற்றவேண்டும் என்று உனக்கு உத்தரவு கொடுக்கப்பட்டுள்ளது. ஏனெனில் உண்மையாகவே அவன் அப்படி யானவன்.

சபை நல்லொழுக்கத்திற்கு இன்னொரு நோக்கம், கிறிஸ்துவின் மேலும் அவனுடைய சபையின் மேலும் உள்ள அன்பு. தேவனுக்கு மகிமை

செலுத்துவது, கிறிஸ்துவை மகிமைப்படுத்துவது, தூய்மை, வல்லமை யோடிருப்பது, சாட்சி கொடுப்பது ஆகியவை சபை நல்லொழுக்கத்தின் நோக்கங்களாகும். சபை நல்லொழுக்கத்தை நாம் செயல்படுத்தத் தவறுவது, நாம் இவைகளில் அக்கறை கொள்ளவில்லை என்பதைக் காட்டுகிறது. நாம் தேவனையும், உயிர்த்தெழுந்த, உயிரோடிருக்கும் கிறிஸ்துவையும் மகிமைப் படுத்துவதைப் பற்றிக் கவலைப்படவில்லை; இந்த உலகத்தில் சபையின் சாட்சியில் அக்கறை கொள்ளவில்லை; வீழ்ச்சியடைந்த ஒருவரைப் பற்றியுங்கூட நாம் கவலைப்படவில்லை என்பதை இது காட்டுகிறது.

ஒன்பதாவது வசனத்தில் பவுல், இது கொரிந்தியருக்கு எழுதிய அவரது முதல் கடிதம் அல்ல என்று குறிப்பிடுகிறார்: ''விபச்சாரக்காரரோடே கலந்திருக்கக்கூடாதென்று நிருபத்தில் உங்களுக்கு எழுதினேன். ஆனாலும், இவ்வுலகத்திலுள்ள விபச்சாரக்காரர், பொருளாசைக்காரர், கொள்ளைக்காரர், விக்கிரகாராதனைக்காரர் இவர்களோடு எவ்வளவும் கலந்திருக்கக் கூடாதென்று நான் எழுதவில்லை; அப்படியானால் நீங்கள் உலகத்தைவிட்டு நீங்கிப்போக வேண்டியதாயிருக்குமே'' (9-10). கர்த்தர் நாம் உலகத்தி லிருந்து எடுத்துக்கொள்ளப்படவேண்டும் என்ற கருத்துடைய வரல்ல. ''நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக் கொள்ளும்படி நான் வேண்டிக் கொள்ளாமல், நீர் அவர்களை தீமையினின்று காக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன்'' (யோவான் 17:15) என்று வாசிக்கிறோம்.

இந்த உலகத்திலிருக்கும் நெறியற்ற மக்களோடு கூடியிருக்கும்படி நமக்கு உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கிறது. இது உங்களுக்கு ஒரு அதிர்ச்சியைக்கொடுப்பதாக இருக்கலாம். இதை நீங்கள் விரும்பவும் மாட்டீர்கள். நீங்கள் இதைச் செய்யவும் மறுக்கலாம். ஆனால் இதை நினைவில் வைத்திருங்கள்: பிதா இயேசுவை இந்த உலகத்தில் அனுப்பிய அதே பிரகாரமாக, இயேசு நம்மை இந்த உலகத்தினுள் அனுப்பினார். அவர் விபச்சார மக்களோடு இணைக்கப்பட்டவராயிருந்தாரா? நான்கு சுவிசேஷங் களையும் வாசியுங்கள், அவர் இணைக்கப்பட்டிருந்தார் என்று கண்டு கொள்ளுவீர்கள். அவர் சுவிசேஷத்தைப் பிரசங்கித்த பொழுது அதற்குச் செவி கொடுத்தவர்களே அந்த மக்கள். பாவிகளோடு உங்களுக்குத் தொடர்பு இல்லாவிட்டால், எப்படி அவர்களோடு சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ளுவீர்கள்?

விசுவாசிகளைப்போல பாசாங்கு செய்யும் விபச்சாரராகிய மக்களிட மிருந்து தங்களை பிரிக்க வேண்டும் என்று பவுல் கொரிந்தியர்களுக்குச் சொல்லுகிறார்'' .... ஒருவன் விபச்சாரக்காரனாயாவது, பொருளாசைக் காரனாயாவது, விக்கிரகாராதனைக்காரனாயாவது உதாசீனனாயாவது, வெறியனாயாவது, கொள்ளைக்காரனாயாவது இருந்தால், அவனோடே கலந்திருக்கக் கூடாது'' (11). ஒரு மனிதன் ஒரு விசுவாசியைப்போல

பாசாங்கு செய்து, அவனுடைய வாழ்க்கைமுறை சரியானபடி இல்லா விட்டால் அவனோடு கலந்திருக்கக்கூடாது. மக்கள் ஒருவரின் தன்மைகளைப்பற்றி சீக்கிரமே கண்டுகொள்வார்கள். நாம் நம்முடைய வாழ்வில் கொடுக்கும் கனியினால் அறியப்படுவோம் என்று இயேசு சொன்னார். பாசாங்கு செய்யும் ஒரு சகோதரன், தான் உண்மையில் ஒழுங்கான வாழ்க்கையைக் கடைப்பிடிக்காவிட்டால் அவனோடு நீ சேர்ந்திருப்பதை மற்றவர்கள் கண்டால், அவர்கள் உன்னையும் அவனைப்போன்ற போலி என்று எண்ணுவார்கள்.

13. ''நல்லொழுக்கத்தைப்பற்றிய விவாதங்கள்''

(I கொரிந்தியர் 6 : 1 - 8)

பவுல் ஆறாவது அதிகாரத்தில் இந்தக் கடிதத்தை எழுதும் பொழுது, கொரிந்து சபையில் இருந்த மற்றொரு பிரச்சினையைப் பற்றிக் கூறுகிறார். விசுவாசிகள் ஒருவரோடொருவர் இணைந்து செயல்படாத போது கொரிந்து பட்டணத்தின் சிவில் நீதிமன்றங்களில் வழக்குத் தொடரும் அளவுக்கு நிலைமை சீரழிந்தது.

இந்தக் காரியம் பவுல் அவர்களுக்குப் போதித்த எல்லாக் காரியங்களுக்கும் ஒரு முரண்பாடாயிருந்தது. விசுவாசிகள் அஞ்ஞானியின் நீதிமன்றத்துக்குப்போய் இயல்பான மனிதனும், ஆவிக்குரியபடியல்லாத மனிதனுமான ஒரு நீதிபதியின் முன்நின்று, அவனிடம், ''நாங்கள் ஆவிக்குரிய மனிதர்கள், எங்களுக்கு ஒரு பிரச்சனையிருக்கிறது, அதற்குத் தீர்வுகாணும் ஞானம் எங்களுக்கில்லை. எங்களுக்குப் பரிசுத்த ஆவியிருந்தும், உமக்கு அது இல்லாவிட்டாலும், எங்களிடமில்லாத உம்மிடமிருக்கும் ஞானம் எங்களுக்குத் தேவை'' என்று ஏன் அவரிடம் சொல்ல வேண்டும்? பவுல் இரண்டாம் அதிகாரத்தை எழுதியபொழுது இந்தப் பிரச்சினை அவர் மனதில் இருந்தது, ''பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்களென்று அறியீர்களா... அற்ப வழக்குகளைத் தீர்க்க நீங்கள் அபாத்திரரா?''

இன்னும் பவுல், ஒருநாள் விசுவாசிகள், ''உலகத்தை நியாயந்தீர்ப்பார்கள்'' (2) என்று எழுதினார். நாம் அதைச் செய்யும்போது வாழ்க்கையின் மிகச் சாமானிய காரியங்களைப் பற்றி ஏன் நாம் தீர்ப்பளிக்கக்கூடாது?'' உங்களுக்கிடையே வழக்குகள் இருக்கின்றன என்பதன் அர்த்தம், ஏற்கெனவே நீங்கள் முற்றிலுமாகத் தோற்கடிக்கப்பட்டீர்கள் என்பதே,'' இதுவே பவுல் ஏழாம் வசனத்தில் எழுதியுள்ளதன் சாராம்சம்.

மாயமாலக்காரர்களாகிய விசுவாசிகளுடன் கலந்திருப்பது அவர்களின் சாட்சியை கறைபடுத்துவதுபோல (அதிகாரம் 5), இந்த வழக்குகள் அவர்கள்

விசுவாசிப்பதாக பாவனை செய்யும் எல்லாக்காரியங்களையும் கேலி செய்வதாயிருக்கிறது. எனவே அப்போஸ்தலர் ''ஏன் சிறிது ஏமாற்றப்பட்டால் என்ன?'' என்ற தீர்வோடு வந்தார். (7). வெறுமனே உன் நஷ்டங்களை ஏற்றுக் கொண்டு, ஏமாற்றப்படுவது கர்த்தருக்கு அதிகமாக மதிப்பளிக்கும் ஒரு செயலாயிருக்கும். இதற்கு மாறாக, நீங்களே தவறு செய்து உங்கள் சொந்த சகோதரர்களை ஏமாற்றுபவர்களாக இருக்கிறீர்கள் – இந்த முறையினால் கிறிஸ்துவையும், சபையையும் முட்டாள் தனமாகத் தோன்றும்படிச் செய்கிறீர்கள்.

பொதுவான ஆவிக்குரிய ஒரு தீர்வு

திருத்தம் செய்யும் இந்த நிருபத்தை நீ ஆய்வுசெய்யும்பொழுது, கொரிந்து சபையில் பவுல் எழுதிய ஒவ்வொரு பிரச்சினைக்கும் தாமே தகுந்த தீர்வைக் கொடுப்பதை நீ கண்டுகொள்வாய். எனினும், பன்னிரெண்டு முதல் பதினான்கு அதிகாரங்களை நாம் பார்க்கும்போது, அவர் பொதுவான தன்மையையுடைய ஆவிக்குரிய தீர்வுகளை அளிக்கிறார். கொரிந்து சபைகளைப் பற்றி அவர் எழுதிய எல்லாப் பிரச்சினைகளுக்கும் பொதுவானத் தீர்வு, பன்னிரண்டிலிருந்து பதினாலாம் அதிகாரம் வரையில், குறிப்பாக பதிமூன்றாம் அதிகாரத்தில் காணப்படுகிறது. அந்த அதிகாரத்தில் பவுல் எழுதும் சிறிய குறிப்பு சுயநலமற்ற அகேப் (agape) என்னும் அன்பேயன்றி சுயமையம் கொண்ட அன்பல்ல. இயற்கையாக, நாம் சிந்திக்கும் செயல்படும் எல்லாக் காரியங்களுக்கும் மையத்தில் சுயம் இருக்கிறது. ஆனால், கிறிஸ்து நமக்குள் வரும்பொழுது அவர் நமக்கு ஒரு புதிய மையத்தைக் கொடுக்கிறார் என்று பவுல் சொல்லுகிறார்.

எடுத்துக்காட்டாக, தமஸ்கு செல்லும் பாதையில் பவுல் இயேசு கிறிஸ்துவை சந்தித்தபொழுது, தன்னுடைய வாழ்க்கைக்கு அவர் ஒரு புதிய மையத்தைக் கண்டார். இயேசுகிறிஸ்துவே அவர் வாழ்வின் மையமானார். அதன்பின் அவருடைய வாழ்வு ஒரு புதிய மையத்தைச் சுற்றி சுழன்றது. அவர் செய்த எல்லாக் காரியங்களையும், பிரச்சினையையும் சந்தித்தபோது அது எப்படி கிறிஸ்தவ வாழ்க்கையைப் பாதித்தது என்று சிந்தித்தார். பவுல் தன் வாழ்வில் ஏற்பட்ட ஒவ்வொரு கடினமான சூழ்நிலையிலும் கிறிஸ்துவுக்கு இதனால் என்ன இருக்கிறது? இதனால் எப்படி கிறிஸ்துவை மகிமைப்படுத்த முடியும்?'' என்றே கேட்டு அணுகுகிறார்.

ஒருவர்மீது ஒருவர் வழக்குத்தொடரும் இந்த விசுவாசிகளுக்கு அவர் கூற விரும்பியது இதுவே. இந்தப் போராட்டங்களுக்கு தீர்வு காண்பதைப் பற்றி எண்ணாமல், கிறிஸ்துவை மகிமைப்படுத்தும் வழியில் இந்தப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது எப்படியென்று சிந்தியுங்கள். கிறிஸ்துவை

மையமாகக் கொண்டு எடுக்கப்படும் தீர்மானம் உங்களுக்கு நஷ்டம் வந்தாலும் கிறிஸ்துவையும் அவர் சபையையும் நீங்கள் மேன்மை படுத்துவதைக் காட்டுகிறது.

குறிப்பான ஆவிக்குரிய தீர்வு

நான்காவது வசனத்தில் விவாதமிட்டுக் கொண்டிருக்கும் சீடர்களுக்கு பவுல் ஒரு மாற்றுத் தீர்வளிக்கிறார்: ''இந்த ஜீவனுக்கேற்ற வழக்குகள் உங்களுக்கு இருந்தால், தீர்ப்பு செய்கிறதற்கு, சபையில் அற்பமாய் எண்ணப்பட்டவர்களை நியமித்துக் கொள்ளுங்கள்!'' நமக்கு ஒரு சிறிய பிரச்சினை ஏற்படும் பொழுது, அந்தக்காரியங்களைப் பற்றிக் கேட்க குறைந்த ஞானமுடைய அல்லது அனுபவமுடையவர்களை நாம் கண்டுபிடிக்க வேண்டும் என்று அவர் புத்திமதியளிக்கவில்லை. பரிசுத்த ஆவியானவர் வாசம் செய்யும் விசுவாசிகள், ஆவிக்குரிய மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண, பரிசுத்த ஆவியானவர் இல்லாத மக்களைவிட அதிகத் தகுதிபெற்றவர்கள் என்று அவர் சொல்லுகிறார்.

எனவே உங்கள் உள்ளூர் சபையில் இரண்டு மக்களிடையே, பரம்பரை சொத்து தொடர்பான அல்லது தொழில் காரியங்கள் பற்றிய பிரச்சினையிருந்தால், சபையில் தொழில் அனுபவமுடைய இரண்டு தெய்வபக்தியுள்ள மக்களைக் கண்டுபிடித்து அவர்களிடம் உங்கள் வழக்குகளைத் தீர்த்துக் கொள்ளலாம். இதில் ஈடுபட்ட இருதரத்தாரையும் வரும்படிக் கேட்டுக் கொண்டு இந்தக் காரியங்களைப்பற்றி பரிசுத்த ஆவியானவரின் தீர்வைக் கண்டு தீர்ப்பளியுங்கள். பவுலினால் ஏவப்பட்ட இந்த ஆலோசனை அலட்சியம் செய்யப்படாமல் ஏற்றுக்கொள்ளப்பட்டு, ரோம கத்தோலிக்க சபையில் இன்று '' ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரமாணம்'' (Canon law) என்றழைக்கப்படுகிறது.

14. ''பாலியல் பாவங்களுக்கான குறிப்பானத் தீர்வுகள்''

(1 கொரிந்தியர் 6 : 9 – 20)

அப்போஸ்தலர் பவுல் ஆவிக்குரிய சுதந்திரத்துக்காகப் பரிந்து பேசுபவராகவும் பாரம்பரியக் கட்டுப்பாடுகளை எதிர்ப்பவருமாய் இருந்தால், கொரிந்துவிலுள்ள அதிக புத்திசாலித் திறமையுடைய சில விசுவாசிகள், ''எனக்குள் ஆவியானவர் வாசம் செய்வதால் எனக்கு எதையும் செய்யும் சுதந்தரமிருக்கிறது. நான் விரும்பும் எதையும் சுயேச்சையாகச் செய்யலாம்'' என்று சொல்லுகின்றனர். ஆனால் பவுல் போதித்தது இதுவல்ல. பவுல் 'ஆவிக்குரிய

வாழ்க்கையைக் கடைப்பிடிப்பவர்கள் தாம் விருப்பப்பட்ட எதையும் செய்ய லாம்; அதற்கு உரிமையிருக்கிறது' என்று கூறவில்லை.

''அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா?'' என்று அவர்களுக்கு ஞாபகப்படுத்தி அவர் இந்த வசனப் பகுதியை ஆரம்பிக்கிறார் (9). இன்னும் அவர்களில் சிலர் வேசிமார்க்கத் தாரும், விபச்சாரக்காரரும், விபச்சாரிகளும், ஆண்புணர்ச்சிகாரரும் இன்னும் இப்படிப்பட்டவர்களாயுமிருந்தனர். ''ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத் தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்த மாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்'' (11).

அப்படிப்பட்ட வாழ்க்கையிலிருந்து விடுவிக்கப்பட்ட இந்த மக்களிடம் பவுல், ''இதைப்போன்ற பெரிய அற்புதத்தை எப்படி சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியும்?'' என்று கேட்கிறார். ஒருவேளை இந்தக் கொரிந்திய விசு வாசிகளில் சிலருக்கு தங்கள் பழைய வாழ்க்கை முறைகளை விட்டுவிடு வதில் துன்பங்கள் இருந்திருக்கலாம். அவர்கள் இன்னும் பாலியல் பாவங் களைச் செய்யும்படி ஏற்படும் சோதனைகளினால் தத்தளித்தனர். இது புரிந்து கொள்ளக்கூடியதுதான். அப்படிப்பட்ட ஒரு மனிதன் அந்த மாதிரியான வாழ்க்கை முறையிலிருந்து விடுபடுவதும், வெற்றிபெறுவதும் கடினமான காரியம்தான். இருந்தாலும், பவுல் கிறிஸ்துவுக்குள்ளாக வந்த புதிய சிருஷ்டி கள் பாவம் செய்யக்கூடாது என்று தெளிவுபடுத்துகிறார்.

பன்னிரெண்டாம் வசனத்தில் தங்களுடைய ஆவிக்குரிய சுதந்திரத்தைப் பற்றி தவறாகக் குறிப்பிடும் மக்களைப் பற்றி அவர் குறிப்பிடுகிறார். பவுல் தன்னுடைய விவாதத்தில், ''எல்லாக் காரியங்களும் எனக்கு அனுமதிக்கப் படக்கூடியது, ஆனால் எல்லாக் காரியங்களும் நன்மையளிப்பவையல்ல'' என்று எழுதுகிறார். பவுல், ''எல்லாக் காரியங்களும் எனக்கு அனுமதிக்கப் படலாம், ஆனால் எந்தக் காரியமும் என்மேல் அதிகாரம் செலுத்த அனுமதிக்க மாட்டேன்,'' என்று விவாதிக்கிறார்.

நீ இருக்கிறபடியே இயேசுவிடம் வரும்பொழுது, அவர் உன்னை மன மாற்றமடையச் செய்கிறார், நீ வந்தபடியே திரும்பிப்போக மாட்டாய். இந்த நிலையிலிருந்து உன் வாழ்க்கையைக் கிறிஸ்து மட்டுமே கட்டுப்படுத்த வேண்டும். அதுவே உயிர்த்தெழுந்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமை, பரிசுத்த ஆவியானவரின் வல்லமை. உன் வாழ்க்கையில் இயேசு ஆண்டவராயிருந்தால், வேறுயாரும், அல்லது வேறு ஒன்றும் ஆண்டவராயி ருக்கமுடியாது. பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் இயேசு கிறிஸ்து உன் ஆண்டவராயிருக்கும்போது வேறு ஒரு நபராலும் கீழ்ப்படுத்த முடியாது.

பதிமூன்றாம் வசனத்தில் இன்னொரு பெரிய விவாதத்திற்கு, ஆழ்ந்த கருத்துடைய ஒரு உவமையைப் பயன்படுத்துகிறார். ''வயிற்றுக்கு போஜனமும் போஜனத்துக்கு வயிறும் ஏற்கும்; ஆனாலும் தேவன் இதையும் அதையும் அழியப்பண்ணுவார். சரீரமோ வேசித்தனத்திற்கல்ல, கர்த்தருக்கே உரியது; கர்த்தரும் சரீரத்திற்கு உரியவர்.'' பவுல் சொல்லுகிறது என்ன வென்றால் : தேவன் உணவுக்காகப் பசியைக் கொடுத்திருக்கிறார், உணவை ஜீரணிக்க அவர் வயிற்றைக் கொடுத்திருக்கிறார். இது நன்மையான காரியம். ஆனால், வேதாகமம், ''இதன் அர்த்தம் உனக்குத் தேவையான அளவுக்கு அதிகமாக உண்ண வேண்டும் என்பதல்ல,'' என்று சொல்லுகிறது.

நம்முடைய சரீரங்கள் வேசித்தனத்துக்காக உருவாக்கப்பட்டதல்ல. அவைகள் தேவனுக்காக அவர் வாசம் செய்யும் இடங்களாக உருவாக்கப்பட் டவைகள். சிலுவையின்மேல் இயேசு உங்களுக்காக மரித்தபொழுது, அதிக விலைகொடுத்து உங்களை வாங்கினார், உங்களை மீட்டார். உங்களை வாங் கியிருப்பதால், நீங்கள் அவருக்குச் சொந்தமானீர்கள். இதனால் பவுல், ''உங் கள் சரீரத்தினால் தேவனை மகிமைப்படுத்துங்கள்,'' (20) என்று சொல்லு கிறார்.

இந்த வசனத்தில் பல வகை விவாதங்கள் இருந்தாலும், அதன் சுருக்கம், ஒன்றே : ''வேசித்தனத்துக்கு விலகியோடுங்கள்,'' (18) என்பதே. இதைப் போல வேறு எந்த பாவமும் சரீரத்தைப் பாதிப்பதில்லை. உன் சரீரம் தேவனுடைய ஆலயமாயிருப்பதாலும், நீ அவரோடு ஒன்றாயிருப்பதாலும், மணமானவர் ஒரு வாழ்க்கைத் துணையோடு மட்டும் ஒன்றுபடலாம். மற்ற மக்களோடு சரீரத்தில் ஒன்றாயிருக்க உனக்கு உரிமையில்லை. பவுல், நம் முடைய சரீரம் தேவனுடைய ஆலயமாயிருப்பதால், ஒரு விபச்சாரியுடன் ஒரே மாம்சமாயிருக்கக்கூடாது என்று காரணம் காட்டுகிறார் (16, 19).

தேவவசனங்கள் அநேக இடங்களில் நாம் பலமான தூண்களல்ல என்று சொல்லுகிறது. இதனாலேயே, நாம் சோதிக்கப்படும் சூழ்நிலைகளைத் தவிர்க்கவேண்டும், தவறான காரியத்தில் சிக்கிக்கொண்டு நம்மை மீட்க வேண்டும் என்று எதிர்பார்க்கக்கூடாது. இதைத் தவிர்க்க நாம் உண்மையில் வேசித்தனத்துக்கு விலகியோட வேண்டும். நம்முடைய இருதயத்தின் ஆழத்தில் பாலியல் பாவம்செய்ய நமக்கு விருப்பமில்லை. அதனால் நாம், நமக்கென்றே ஒரு தகுதியை வரையறுத்துக் கொண்டு, தவறான வழியில் செல்லாமலிருக்க பாதுகாப்பு வேலிகளை கட்டவேண்டும்.

15. ''திருமண உறவு கையேடு''

(I கொரிந்தியர் 7)

கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் நிருபத்தில் பவுல், ஒரு புதிய பிரச்சினையைப்பற்றி எழுதுவதுமல்லாமல், கடிதத்தின் ஒரு புதிய பகுதியைத் துவங்குகிறார். சபையிலுள்ள பிரிவினைகளையும், நல்லொழுக்கமற்ற மனிதனையும், அவர்களுடைய வழக்குகளையும் பற்றி, அவர் குலோவேயாளின் வீட்டுச் சபைகளிலிருந்து தெரிந்துகொண்டார். இந்தச் சபையிலிருந்து பவுலுக்குக் கிடைத்த ஒரு கடிதத்தில் எழுதப்பட்ட காரியங்களைக் குறித்து பவுல் இப்பொழுது எழுதத்துவங்குகிறார்.

திருமணம் செய்து கொள்ளுவதைப்பற்றி அவர்களுடைய கேள்விகளுக்கு அவரது பதில் யாவருக்கும் நன்மை கொடுக்கக்கூடியது. இன்றும் அநேக போதகர்கள் அவர் கூறிய போதனைகளை ஒரு திருமண உறவின் கையேடாகவே கருதுகின்றனர். சபை அங்கத்தினர்கள் திருமண உறவு, விவாகரத்து, திரும்பவும் திருமணம் செய்துகொள்ளுவது இன்னும் திருமண உறவுபற்றிய பல கேள்விகளை எழுப்பும்போது, இந்த அதிகாரத்தில் பவுல் கூறிய போதனைகளை போதகர்கள் தம் சபையினருக்கு அறிவுறுத்த பயன்படுத்துகின்றனர்.

இந்த அதிகாரத்தின் குறிப்பிட்ட போதனைகளைப் புரிந்துகொள்ள, பொதுவான சில அபிப்பிராயங்களுடன் நான் துவங்க வேண்டும். முதலாவது, முதல் இரண்டு வசனங்களிலிருந்தும் எடுக்கப்பட்டது. பவுல், ''ஸ்திரீயைத் தொடாமலிருப்பது மனிஷனுக்கு நல்லது (திருமணம் செய்துகொள்ளாமலிருப்பது). ஆகிலும் வேசித்தனம் இராதபடிக்கு அவனவன் தன்சொந்த மனைவியையும், அவளவள் தன் சொந்த புருஷனையும் உடையவர்களாயிருக்க வேண்டும்,'' என்று சொல்லுகிறார். இது திருமண உறவைப்பற்றிய ஒரு பயங்கரத் தோற்றமாயிருக்கிறது அல்லவா? முதல் இரண்டு வசனங்களைப் புரிந்துகொள்ளத் திறவுகோலாக இருபத்தாறாம் வசனம் காணப்படுகிறது. இங்கே பவுல், ''இப்பொழுது உண்டாயிருக்கிற துன்பத்தினிமித்தம்,'' என்று எழுதுவதின் அர்த்தம் என்ன?

சபை வரலாற்றின் முதல் முன்னூறு ஆண்டுகளில் சபை மிகுந்த உபத்திரவங்களை அனுபவித்திருக்கிறது. வீட்டுச் சபைகளில் ஏன் சந்தித்தனர் என்பதற்கு இது ஒரு காரணம். மூன்று நூற்றாண்டுகளாக சபை ஒரு இரகசிய அமைப்பாக இருந்தது. ரோம சக்ரவர்த்தியாக சார்லிமானே (Charlemagne) 313 கி.பி.யில் ரோம நாட்டின் குடிமக்களுக்கு கிறிஸ்தவ மதத்தை சட்டபூர்வமாக வழிபடமுடியும் என்று அறிவித்தபின்னரே இந்தத் துன்புறுத்தல் நிறுத்

தப்பட்டது. இந்த அதிகாரம் முழுவதையும், விசுவாசிகள் துன்புறுத்தப்பட்டதை மனதில்கொண்டு பவுல் எழுதுகிறார். தனிமையாகவே நிலைத்திருப்பது நல்லது என்று பவுல் எழுதுவதற்கு இது ஒரு காரணம். எனினும், நீ தனியாயிருந்து, சோதனைகளோடு போராடிக்கொண்டிருந்தால், அப்பொழுது வேசித்தனத்தைத் தவிர்க்க, நீ திருமணம் செய்துகொள்ள வேண்டும். வேகிறதைப்பார்க்கிலும் விவாகம்பண்ணுகிறது நலம் என்று பவுல் கூறுகிறார்.

பொதுவான ஒரு இரண்டாவது அபிப்பிராயம் இந்தஅதிகாரத்தின் தெய்வீக ஏவுதலோடுத் தொடர்புடையது. இந்தத் திருமண உறவு கையேட்டின் அநேக இடங்களில் பவுல், ''இதை நான் கட்டளையாகச் சொல்லாமல், யோசனையாகச் சொல்லுகிறேன்,'' என்று எழுதுகிறார். அல்லது அவர் ''நான் அல்ல, கர்த்தரே,'' என்று எழுதுகிறார். இந்த வாக்கியங்கள், ''நான் சொல்லவில்லை, கர்த்தர் உங்களுக்குச் சொல்லுகிறார்,'' அல்லது ''கர்த்தர் சொல்லவில்லை, நானே உங்களுக்குச் சொல்லுகிறேன்'' என்று பவுல் எழுதுவதைப்போல தொனிக்கிறது. சிலர் சில இடங்களில் பவுல் கர்த்தரிடமிருந்தல்ல என்று அவர் கூறியதெல்லாம் தெய்வீகமாகத் தூண்டப்பட்டதல்ல என்று தவறாக முடிவெடுக்கிறார்கள். ஏழாம் அதிகாரத்தின் கடைசி வார்த்தைகளில் பவுல், ''என்னிடத்திலும் தேவனுடைய ஆவி உண்டென்று எண்ணுகிறேன்,'' என்று எழுதியவைகளைக் காணத் தவறாதீர்கள். இங்கே பவுல் தாம் நினைப்பதை நமக்குச் சொல்லும்பொழுது, அவர் பரிசுத்த ஆவியானவரின் தூண்டுதலினால் எழுதுகிறார் (7:40) என்பதே இதன் பொருள்.

பவுல் தான் எப்போது பேசுகிறாரென்றும் அல்லது கர்த்தர் எப்பொழுது பேசுகிறார் என்றும் சொல்லாமலிருந்தால், இந்த எல்லா வாக்கியங்களுக்கும் அர்த்தமென்ன? திருமணம் என்ற கருத்தை இயேசுவின் போதனையின்படி பவுல் மிகக்கவனமாகக் கட்டியெழுப்புகிறார். திருமண உறவைப்பற்றி இயேசு என்ன போதித்தார் என்பதன் தொடர்பான கேள்வியைக் கொரிந்தியர் கேட்டபோது, எடுத்துக்காட்டாக மத்தேயு 5 அல்லது மத்தேயு 19 – அப்போது பவுல் ''இந்த கேள்விக்கு நான் பதிலளிக்க வேண்டியதில்லை, ஏனெனில் கர்த்தரே அந்தக் கேள்விக்குப் பதிலளித்திருக்கிறார்,'' என்று எழுதுகிறார்.

ஆயினும் அவர்கள் கேட்ட சில கேள்விகள் இயேசு குறிப்பிடாத காரியங்களைக் குறித்தவை. அதைப்போன்ற ஒரு கேள்வி இது: ''விசுவாசிகளல்லாத ஒரு ஆணும், பெண்ணும் திருமணம் செய்துகொண்டார்கள் என்று வைத்துக் கொள்ளுவோம். இப்பொழுது இவர்கள் என்ன செய்யவேண்டும்?'' இப்படிப்பட்ட திருமண உறவுப் பிரச்சினையைப்பற்றி இயேசு பேசவில்லை. பன்னிரெண்டாவது வசனத்தில் பவுல் இந்தக் கேள்வியைப்பற்றி எழுதும்பொழுது,

‘‘கர்த்தர் அல்ல, நானே சொல்லுகிறதாவது,’’ என்று எழுதுகிறார். ஆயினும், இது ஏவப்பட்ட கட்டளை, ஏனெனில் அவர் தேவனுடைய ஆவியின் தூண்டுதலினால் எழுதுகிறார் என்பதை ஞாபகத்தில் வைத்திருங்கள்.

16. ‘‘திருமணம் செய்துகொண்டவர்களின் பாலியல் வாழ்வு’’

(I கொரிந்தியர் 7:1-6)

திருமணம் செய்துகொண்ட தம்பதியரின் வாழ்க்கையில் பாலுறவின் நோக்கம் என்ன? அது இனப்பெருக்கத்துக்காக மட்டுமா? இதுதான் அதன் ஒரே நோக்கமா?

சபை வரலாறு முழுவதிலும் கிறிஸ்துவை பக்தியுடன் பின்பற்றுபவர்கள் இந்தக் கேள்விகளைப்பற்றி நன்கு ஆராய்ந்தனர். மூன்று முதல் ஐந்து வசனங்களில் கொரிந்துவிலுள்ள தூய்மைப்படுத்தப்பட்ட திருமணமான தம்பதிகளுக்கு நெருங்கிய உடல் உறவைப்பற்றி, பவுல் தாம் ஏவப்பட்டபடி திருமண ஆலோசனையளிக்கிறார்.

பவுல் : ‘‘புருஷன் தன் மனைவிக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்யக்கடவன்; அப்படியே மனைவியும் தன் புருஷனுக்குச் செய்யக்கடவள். மனைவியானவள் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல, புருஷனே அதற்கு அதிகாரி; அப்படியே புருஷனும் தன் சுயசரீரத்துக்கு அதிகாரியல்ல, மனைவியே அதற்கு அதிகாரி, உபவாசத்திற்கும் ஜெபத்திற்கும் தடையிராதபடிக்கு இருவரும் சிலகாலம் பிரிந்திருக்கவேண்டுமென்று சம்மதித்தாலன்றி, ஒருவரை விட்டு ஒருவர் பிரியாதிருங்கள்; உங்களுக்கு விரதத்துவம் இல்லாமையால் சாத்தான் உங்களைத் தூண்டிவிடாதபடிக்கு, மறுபடியும் கூடி வாழுங்கள்’’ (3-5).

தனியாக ஜெபம் செய்வதற்கும், உபவாசம் இருப்பதற்கும் ஈடுபட்டிருப்பது மட்டுமே நெருங்கிய பாலுறவு உரிமைகளை உங்கள் மனைவி அல்லது கணவனுக்கு மறுப்பதற்கான ஒரே அடிப்படையான காரணமாக இருக்கலாம். தனித்தனியே உங்களை உபவாசத்துக்கும் ஜெபத்துக்கும் ஒப்புக்கொடுக்க ஒருவருக்கொருவர் சம்மதித்தாலன்றி ஒருவர் மற்றவருக்கு மறுக்கக்கூடாது. இதன்பின், உங்களுக்கு சோதனை ஏற்படாதபடி திரும்பவும் உங்கள் உறவுகளைத் தொடருங்கள்.

இந்த வசனங்களிலிருந்து நாம் அநேக முக்கியமான கருத்துக்களை எடுத்துத் தொகுக்கலாம். இதில் முதலாவதாக: அவர்கள் இருவரும் ஒரே மாம்

சமாயிருப்பார்கள். மனைவியின் உடல் தன் கணவனுக்கும், கணவனின் உடல் தன் மனைவிக்கும் சொந்தமாயிருக்கிறது. கணவனுக்குத் தன் உடலின் மீது முழு உரிமைகளும் இல்லை. அதுபோலவே, மனைவிக்குத் தன் உடல் மேல் முழு உரிமைகளும் இல்லை. அவள் கணவனுக்கு அவளுடைய உடலின் மேலும் உரிமைகள் இருக்கின்றன.

இரண்டாவது கொள்கை, விபச்சாரம் செய்யத் தூண்டப்படுவதற்கு எதிராக உயர்ந்த பாதுகாப்பாக இருக்கிறது: திருமண உறவில் நல்ல திருப்தியளிக்கக்கூடிய உடல் உறவு இருப்பது, சோதனைக்குட்படாமல் ஒருவனை, ஒருத்தியைக் காக்கிறது. இந்த வழியில், உலகத்தில் சென்று மற்றவர்களோடு இடைபடும்பொழுது, நீங்கள் திருப்தியடைந்தவராக இருப்பதால், தூண்டுதல்கள், சோதனைகள் அந்த அளவுக்கு உன்னைச் சேதப்படுத்த முடியாது. பழைய ஏற்பாட்டில் நீதிமொழிகள் புத்தகமும் திருமணம் செய்துகொண்ட வாலிபருக்கு இதே ஆலோசனையை அளிக்கிறது (நீதி. 5:15-20).

மூன்றாவது கொள்கை, திருமண உறவில் ஒருவரோடொருவர் சம்மதத்துடன் உள்ள நெருங்கிய உடல் உறவின் செயல்பாட்டைக் குறிக்கும். இந்த உறவில் எது சரி அல்லது எது தவறு, எது இயல்பானது அல்லது எது இயல்பல்லாதது என்பதைப்பற்றிய கேள்விகள் அடிக்கடி கேட்கப்படுகின்றன. ஒரு தம்பதியினர் சராசரியாக எத்தனை முறை உடல் உறவு கொள்ளலாம்? இந்த கேள்விகளுக்கெல்லாம் பதில் அந்தந்த தம்பதியரிடம் தான் உள்ளது. அவர்கள் ஒருவருக்கொருவர் புரிந்து கொள்ளுதலுடனும் சம்மதத்துடனும் செயல்படுவதே சரியாகும்.

இன்னொரு முக்கியமான கொள்கை, அவர்களுடைய இந்த உறவு அவர்கள் திருமண உறவுக்கு முக்கியமானதாக இருந்தாலும் தேவனோடுள்ள உறவை அவர்கள் தனியாகவும் தங்களுக்குள் மட்டும் தொடருகின்றனர்.

திருமணமான இரண்டு பேரின் உறவு, உடல் சம்பந்தமானது மட்டுமல்ல என்று இயேசு போதித்தார். தேவன் திருமண உறவை அமைத்தபொழுது, திருமணம் செய்துகொண்ட தம்பதியர் இருவரும், ஆவியிலும் மனதிலும் ஒன்றுபட்டவர்களாக இருக்க வேண்டும் என்றுத் திட்டமிட்டார், அப்பொழுது உடல்ரீதியான நெருக்கம், ஆழ்ந்த உறவின் வெளிப்பாடாக, மகிழ்ச்சியுடையதாக இருக்கும். பவுல், இயேசுவின் இந்தத் திருமணக் கொள்கையின் மேலாக, ஒரு உட்கருத்தையும் கூட்டி எழுதுகிறார். அதாவது ஒரு தம்பதியர் தேவனோடு தொடரும் உறவு, அவரவருக்கே உரியதாகவும், தனிப்பட்டதாகவும் இருந்தாலும் அது அவர்கள் இருவரும் சேர்ந்து தேவனோடு பகிர்ந்து கொள்ளும் ஒரு உறவாகவும் இருக்க வேண்டும் என்பதாகும். ஒரு திருமண

மான தம்பதியினரை ஒன்றாக்கும் ஆவிக்குரிய பந்தம், அவர்கள் ஒன்றுகூடி ஜெபிப்பதாலோ, ஒன்றாகச் சபைக்குச் செல்லுவதாலோ மட்டும் ஆனதல்ல. ஒரு மனிதனுக்கும் அவனுடைய மனைவிக்கும் கிறிஸ்துவுடன் ஆவிக்குரிய ரீதியில் ஐக்கியம் இருக்க வேண்டும்.

உங்கள் திருமண உறவு பலவீனமடைகிறது என்றும், ஆழ்ந்த தோழமை சரியாக இல்லாமலிருக்கிறது என்றும் நீ கண்டுகொண்டால், நீ என்ன செய்வாய். அப்படியானால் நீங்கள் இருவரும் தேவனோடு ஆழ்ந்த உறவைத் தேடுங்கள். ஆவிக்குரிய பந்தத்தினால் உங்கள் உறவு கட்டுப்பட்டிருக்கும் போது, அது உறுதியாக இருக்கும். உன் திருமண உறவை உறுதியாக்க வேண்டுமானால், கிறிஸ்துவை நாடி அவரிடம் வாருங்கள்.

17. ''பவுலின் ஏவப்பட்ட திருமண ஆலோசனை''

(I கொரிந்தியர் 7:7-16)

திருமண உறவைப்பற்றியத் தம்முடைய செய்தியின் மத்தியில், பவுல் ஏழாம், எட்டாம் வசனங்களில், தான் ஒரு தனி மனிதன் என்பதைத் தெளிவாக்குகிறார் : ''எல்லா மனுஷரும் என்னைப்போலவே இருக்க விரும்புகிறேன்... அவர்களுக்கு நலமாயிருக்கும்.'' சில கல்விமான்கள், பவுல் சனகரீம் சங்கத்தின் ஒரு அங்கத்தினராக இருந்ததால், ஒரு காலத்தில் அவர் திருமணமானவராயிருந்திருக்க வேண்டும் என்று நம்புகின்றனர். இதனால் கொரிந்தியருக்கு முதல் நிருபத்தை எழுதிய காலத்தில் அவர் மனைவியை இழந்த ஒருவர் என்ற முடிவுக்கு வந்தனர். அவர் தனியாயிருந்தாலும் அல்லது மறுபடியும் தனியானவரானாலும், இங்கே அவர் கூறும் கருத்து ஒன்றே : நீ தனிமையாயிருந்தால் தனிமையாகவே இரு.

இந்த அதிகாரத்தின் கடைசியில், தனிமையாயிருப்பவர்களும், திருமணமாகாத கன்னியர்களும் தனியாயிருப்பது நல்லது என்று திரும்பவும் போதிக்கிறார். திரும்பவும் தனிமையாகிவிட்டவர்களும் தனியாயிருக்க வேண்டும். இந்தப் போதனையை ''இப்பொழுது உண்டாயிருக்கிற துன்பத்தினிமித்தம்,'' அல்லது விசுவாசிகள் துன்புறுத்தப்படுதல் (வ.26) என்ற அடிப்படையில் பார்க்கவேண்டும். திருமணமாகி பிள்ளைகளோடிருக்கும் ஒருவனைவிட ஒரு தனி மனிதன் துன்பத்தை எதிர்கொள்வது எளிதான காரியமாயிருக்கும் என்று பவுல் வெளிப்படையாகவே காரணத்தைக் கூறுகிறார்.

ஆண்டவரின் வருகை சமீபமாயிருக்கிறது என்பதையும் பவுல் விசுவாசித்தார் – தனியாயிருப்பவர்கள் திருமணம் செய்துகொள்ள வேண்டாம் என்று

அவர் கூறியதற்கு இது இன்னொரு காரணம். மேலும், திருமணம் செய்து கொள்ளாதவர்கள் கர்த்தரைப் பிரியப்படுத்துவதில் தங்கள் முழு கவனத்தையும் செலுத்த முடியும். இந்த அதிகாரத்தில் பல இடங்களில், தனியாயிருப்பதைப்பற்றிய விவாதத்தைப் பவுல் தொடருகிறார். ஆனாலும் தனியாயிருக்கக்கூடாதவர்களாயிருந்தால், உங்கள் பாலுணர்வு தீவிரமாயிருந்தால், அப்பொழுது திருமணம் செய்துகொள்ளுங்கள் என்றும் பவுல் சொல்லுகிறார். இந்த அதிகாரத்தில் நிச்சயமாக பவுல் பிரம்மச்சரிய நிலைக்கான மாதிரியை முன்வைக்கிறார். பிரம்மச்சரியத்தை அவர் ஒரு வரம் என்றழைக்கிறார். கர்த்தருக்கு மணவாளனாக அல்லது மணவாட்டியாக இருக்கிறார்கள் என்று கூறுகிறார்.

பத்து மற்றும் பதினொன்றாம் வசனத்தில், வசனம் மூன்று முதல் ஐந்து வசனங்களில் குறிப்பிட்டுள்ள திருமணமான விசுவாசிகளான தம்பதிகளுக்கு எழுதுகிறார். அவர்களுக்கு அவருடைய புத்திமதி விவாகரத்து அல்ல. இது இயேசு போதித்தவைகளோடு ஒத்துப்போகிறது. இதனால் அவர், ''நானல்ல, கர்த்தரே கட்டளையிடுகிறதாவது'' என்று எழுதுகிறார். நம்முடைய ஆண்டவர் இதற்கு ஒரு விலக்கு அளித்திருக்கிறார், அது நம்பிக்கைத் துரோகத்துக்கான விலக்கு. இயேசு, திருமணம் ஒரு ஒப்பந்தம் என்றும், அது இருவருக்கும் உள்ள பூரண உரிமை நிலையின் (Exclusiveness) அடிப்படையிலானது என்றும் போதித்தார். பூரண உரிமை மீறப்படும்பொழுது ஒப்பந்தம் முறிக்கப்பட்டது என்று வெளிப்படுத்த முடியும். தேவனும் இயேசுவும், தங்களுடன் பூரண உண்மையுடன் வாழாத ஒரு துணையுடன் விசுவாசிகள் வாழ்க்கை நடத்தும்படிக் கட்டளையிடவில்லை.

வசனம் பன்னிரெண்டு திருமணம்பற்றி கொரிந்தியர் எழுப்பிய இன்னொரு கேள்விக்குப் பவுலின் பதிலுடன் ஆரம்பிக்கிறது. விசுவாசியான ஒரு ஆண் அல்லது பெண் ஒரு அவிசுவாசியை திருமணம் செய்து கொண்டால் என்ன செய்ய வேண்டும் என்ற கேள்வியாயிருக்கலாம். பவுல் : ''சகோதரனொருவனுடைய மனைவி அவிசுவாசியாயிருந்தும், அவனுடனே வாசமாயிருக்க அவளுக்குச் சம்மதமிருந்தால், அவன் அவளைத் தள்ளிவிடாதிருக்கக் கடவன். அப்படியே ஒரு ஸ்திரீயினுடைய புருஷன் அவிசுவாசியாயிருந்தும், அவளுடனே வாசமாயிருக்க அவனுக்குச் சம்மதமிருந்தால், அவள் அவனைத் தள்ளிவிடாதிருக்கக்கடவள்'' (12-13) என்று எழுதுகிறார்.

இயேசு தம்பதியரில் ஒருவர் விசுவாசியாகவும் அடுத்தவர் அவிசுவாசியாகவுமிருக்கும் ''கலந்தத் திருமணங்கள்'' என்ற பொருள்பற்றி எழுதவில்லை. இந்தத் திருமணங்கள் ஒருவேளை திருமணத்துக்குப்பின் ஒருவர் இரட்சிப்படைந்ததின் விளைவாக இருக்கலாம். இது இன்றுங்கூட இதுபோல நடை

பெறுகிறது. விசுவாசிகள் அவிசுவாசிகளைத் திருமணம் செய்யக்கூடாது என்று வேதாகமம் கூறுவதன் விளைவாகவுமிருக்க முடியும் (II கொரிந்தியர் 6 : 14).

வேதாகமத்தில் விவாகரத்து

ஒரு கலந்த திருமணத்தில் விசுவாசிகள் விவாகரத்து செய்வதை அனுமதிக்கவில்லை, ஆனால் அவிசுவாசிகளுக்கு அனுமதிக்கிறார். இது அநேக வழிகளில் அதிக நேர்மையுள்ளது. எடுத்துக்காட்டாக, விசுவாசிக்காத ஒரு மனிதன் திருமணம் செய்துகொள்கிறான். அவன் மனைவி திருமணத்துக்குப்பின் விசுவாசியாகிவிட்டார் என்று வைத்துக்கொள்ளுவோம். அவிசுவாசிகளாக அவர்கள் திருமணம் செய்துகொண்டபொழுது, அவர்களுக்கு கூடிவாழக் கூடிய இணக்கம் இருந்தது; அவர்கள் ஒரே கருத்துடையவர்களாயிருந்தனர். அப்பொழுது மனைவி ஒரு விசுவாசியாகிறாள். இப்பொழுது அவள் என்ன செய்ய வேண்டும்? அவள் தன் கணவனுடன் கூடிவாழ்பவளாகவே இருக்க வேண்டும் என்று பவுல்போதிக்கிறார். ஆனால் அவள் கணவன் ''நான் திருமணம் செய்த பெண் நீயல்ல, நான் இந்தத் திருமணத்திலிருந்து விடுபட விரும்புகிறேன்'', என்று சொல்வதாக வைத்துக்கொள்வோம். இதற்குப் பவுல், அவர்கள் பிரிந்துபோகட்டும். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் ஒரு சகோதரன் அல்லது சகோதரி கட்டப்படவில்லை (15).

இதற்கு மாறாக விசுவாசமில்லாத கணவன், ''நான் திருமணம் செய்து கொண்டது உன்னையல்ல, ஆனாலும் இன்றும் நான் உன்னை நேசிக்கிறேன். இந்தத் திருமணத்தில் நான் நிலைத்திருக்க விரும்புகிறேன்'', என்று சொல்வானாகில், அந்தத் திருமணம் நிலைத்திருக்கவேண்டும் என்பதே அவனுக்குப் பவுலால் ஏவப்பட்ட ஆலோசனையாயிருக்கிறது. இது ஏன்? ''அவிசுவாசியான புருஷன் தன் மனைவியால் பரிசுத்தமாக்கப்படுகிறான்'' (14). அவள் அவனைக் கிறிஸ்துவுக்குள் நிச்சயமாய்க்கொண்டுவருவாள் என்பதே இதன் நம்பிக்கை. அந்தத் திருமணத்தில் அவன் நிலைத்திருப்பது என்றால் மட்டும் அவளோடு உறவு கொண்டு வாழவேண்டும்.

அவன் அப்படிப் பிரிந்து செல்லும்பொழுது அவள் எந்த கட்டுக்குள்ளும் இல்லை என்று பவுல் எழுதும்பொழுது, அவள் திரும்பவும் திருமணம் செய்துகொள்ள முடியுமா? (நான் சம்மதிக்கிறேன்).

அதாவது அவள் அவனுக்குக் கட்டுப்பட்டிருக்கவில்லையென்றால், அவள் திரும்பவும் மணம் செய்து கொள்ள உரிமையுள்ளவராயிருக்கிறாள்.

18. ''கலந்த திருமணத்தின் பின்னணிகள்'

(I கொரிந்தியர் 7 : 17-34)

கொரிந்தியர் தங்கள் கடிதத்தில் கேட்டுக் கொண்ட கேள்விகளுக்குப் பவுலின் பதில்கள் இதில் உள்ளன. திருமணம் பற்றிய இந்தப்பெரிய அதிகாரத்தை நான் இரண்டு பகுதிகளாகப் பிரித்திருக்கிறேன். கொரிந்தியரின் கேள்விகளுக்கான பவுலின் பதில்களை ஆய்வு செய்யும்பொழுது, அவர்களது கேள்விகள் எவை என்பதை நாம் தீர்மானிக்க முடியும்.

இந்தக்கொள்கையின் அடிப்படையில், இந்தப்பகுதில், ஒரு முறைக்கு மேலாகத் திருமணம் செய்து கொண்டவர்களால் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு பவுல் பதிலளிக்கிறார் என்று அனுமானிக்கலாம். கொரிந்திய கலாச்சாரம், அந்த மக்களின் வாழ்க்கை, மனந்திரும்புவதற்கு முன்பாக எப்படியிருந்தது என்பவைகளைப்பற்றிச் சிந்தியுங்கள். ஆறாவது அதிகாரத்தில், பாவகரமான பயங்கர வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தனர் என்று காண்கிறோம். இந்தப்பகுதியில் கொரிந்து சபையின் தம்பதிகளில் சிலர் வேடிக்கையான கலந்த திருமணப் பின்னணியையுடையவர்கள் என்று அவர் எழுதுகிறார்.

இந்தப்பகுதியில், பதினேழு, இருபது, இருபத்தி நான்கு ஆகிய வசனங்கள் எப்படி இதே கொள்கையை அறிவிக்கின்றன என்று கவனியுங்கள்.'' கர்த்தர் அவனவனை அழைத்தெப்படியோ, அப்படியே அவனவன் நடக்கக்கடவன்'' (17), ''அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலைமையிலே நிலைத்திருக்கக் கடவன், (20) ''அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலைமையிலே தேவனுக்கு முன்பாக நிலைத்திருக்கக்கடவன்'' (24).

எனக்குத் தெரிந்த வயதான ஒரு தம்பதியரின் கதை மூலமாய், இந்தச் சூழ்நிலையை நான் எடுத்துக்காட்டுகிறேன். இரண்டு ஆண்டுகளில் இந்த தம்பதியரைப் பற்றி நன்றாக நான் தெரிந்துகொண்டேன். ஒரு இரவு, அவர்கள் தங்கள் கதையை எனக்குச் சொல்ல விரும்பியதால், வேதாகம வகுப்பு முடிந்தபின் தங்கள் வீட்டில் தங்கியிருக்குமாறு என்னைக் கேட்டுக்கொண்டனர்.

மனந்திரும்புவதற்கு முன்பாக, அவள் ஒரு சர்க்கஸ் குழுவில் இருந்தாள். மூன்று அல்லது நான்கு முறை திருமணம் செய்துகொண்டு நெறிகெட்ட வாழ்க்கையை அவள் வாழ்ந்தாள். இதன்பின் தன் கணவனைச் சந்தித்தாள். அவன் ஒரு குற்றவாளி, அவனும் மூன்று நான்கு முறை திருமணம் செய்து கொண்டவன். ஒரு பெரிய நகரத்தில், ஒரு விடுமுறை நாளில், அந்த நகரத்தில் எழுப்புதல் கூட்டங்களை நடத்திய ஒரு போதகர் கூறியவற்றை

அவர்கள் கேட்டனர். அவர்கள் இரட்சிக்கப்பட்டார்கள், ஆனால் வேதாகமத்தை அவர்கள் வாசிக்கத் துவங்கியபோது, ''நம்முடைய திருமணத்தைப் பற்றி நாம் என்ன செய்ய முடியும்?'' என்று ஆச்சரியப்பட்டனர். அவர்கள் ஒரு போதகரைக் கண்டுபிடித்தனர், அவர்களுக்கு அவர் கொடுத்த ஆலோசனை, ''முதலாவது நீங்கள் திருமணம் செய்த துணைவர் / துணைவியிடம் செல்லுங்கள், அவன் / அவள் உயிரோடிருந்து இன்னும் திருமணமாகாதவர்களாக இருந்தால், அந்த மனைவியை / கணவனை திருமணம் செய்து கொள்ளுங்கள். ஆனால் உங்கள் இந்த உறவு விபச்சாரம். இப்பொழுதே இந்த ஐக்கியத்தை கலைத்துவிடுங்கள்!'' இப்படியாயிருந்தது.

அவர்கள் ஒருவர்மேல் ஒருவர் அதிக அன்புகொண்டிருந்தனர்; மேலும் அவர்கள் இருவரும் இரட்சிப்படைந்து கிறிஸ்துவைப் பின்பற்றியதால் விவாகரத்து செய்ய விருப்பமில்லாதவர்களாயிருந்தனர். ஆனால், ஒவ்வொரு முறை அவர்கள் உடலுறவு கொள்ளும்பொழுதும், அவர்கள் விபசாரம் செய்வதான உணர்வு பெற்றனர். அவர்கள் குற்றவுணர்வு அவர்களை வருத்தியது. எங்கள் வேதாகம ஆய்வில் இந்தத் திருமண அதிகாரத்தை அப்போதுதான் படித்தோம், அவர்கள் என்னிடம், ''பவுல் எங்களுக்கு சொல்ல என்ன இருக்கிறது'', என்று கேட்டார்கள். நான் அவர்களுக்கு இந்தப் பகுதியைச் சுட்டிக்காட்டி, பவுல் மூன்று முறை அவர்களுக்கு தங்கள் திருமணத்தில் உறுதியாயிருக்கும்படி சொல்லியிருக்கிறார். ஏனெனில் கிறிஸ்து அவர்களை அந்தத் திருமணத்தகுதியில் கண்டார் என்று நான் அவர்களுக்குச் சொன்னேன்.

இந்தப்பகுதியும் மற்றப்பகுதிகளும் குறிப்பிடுவதுபோல இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளும் அனுபவத்தை விவரிக்கப் பவுலும் 'அழைப்பு' என்ற வார்த்தையைப் பயன்படுத்த விருப்பப்பட்டார். நான் விவரித்த இந்த தம்பதியரைப்போலவே பவுலும் தம்பதியரைப்பற்றி எழுதுகிறார் என்று விசுவாசிக்கிறேன். முக்கியமாக அவர் அவர்களிடம் : ''இயேசு கிறிஸ்து உங்களைக் கண்டுபிடித்தபோது, உங்கள் திருமணத்தகுதி என்ன? அது எப்படியிருந்தாலும் அதே திருமணத்தில் நிலைத்திருங்கள்,'' என்று சொல்லுகிறார். அவர்களுக்காக நாங்கள் ஒரு திருமண சடங்கு நடத்தினோம். இது ஆவிக்குரிய ஒரு சடங்கு, அவர்கள் கிறிஸ்துவைப்பின்பற்றும்படி அழைக்கப்பட்டபொழுது அவர்கள் கொண்டிருந்த ஐக்கியத்துக்கு தேவனுடைய ஆசீர்வாதத்தையும் அவருடைய அனுமதியையும் கேட்டோம்.

பாவிகள் இரட்சிக்கப்படும்பொழுது, அவர்கள் நீதிமான்களாக்கப்படுகின்றனர். அவர்களுடைய பாவங்களெல்லாம் மன்னிக்கப்படுவது மட்டுமல்ல, அவள் அல்லது அவன் ஒருபொழுதும் பாவஞ்செய்யாதவர்களாகக் கருதப்பட்டனர். இப்பொழுது நாம் நீதிமான்களாக்கப்படும் கொள்கையை

கலந்த திருமணத்தின் பின்னணிகளிலிருக்கும் மக்களுக்குச் செயல்படுத்துவோம். இந்த வசனங்களில் பவுலின் ஏவப்பட்ட ஆலோசனை, சுவிசேஷத்தோடு ஒத்துப்போகிறது. தேவன் உங்களை அழைத்தபோது நீங்கள் யாருடனிருந்தீர்களோ, அதே திருமணத்தகுதியில் நிலைத்திருந்து அதன் மேல் தேவனுடைய ஆசீர்வாதத்தைக் கேளுங்கள். உங்கள் கடந்த காலம் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் கீழிருக்கிறது, இது உங்கள் திருமண உறவுகளையும் உள்ளடக்கியது.

19. ''பிரம்மச்சரியத்தின் தூய்மை''

(I கொரிந்தியர் 7 : 25-40)

முதலாவது கொரிந்தியர் ஏழாம் அதிகாரத்தின் கடைசி பகுதியில் காணப்படும் எல்லா ஆலோசனையும், திருமணமாகாதவர்கள் அல்லது மரணம் அல்லது விவாகரத்தினால் தனியாயிருப்பவர்களைப் பற்றியது. நாம் முன்பு கூறியதுபோல, இங்கே பவுலின் போதகத்தைப் புரிந்துகொள்ள அவர் இருபத்தாறாம் வசனத்தில் கூறுவதைக் காணவேண்டும்: ''இப்பொழுது உண்டாயிருக்கிற துன்பத்தினிமித்தம் விவாகமில்லாதிருக்கிறது மனுஷனுக்கு நலமாயிருக்குமென்று எண்ணுகிறேன்.'' இன்னுமதிகமாக கர்த்தர் சீக்கிரம் திரும்ப வருவார் என்று பவுல் விசுவாசித்தார். ''இனிவரும் காலம் குறுகியதானபடியால்... இவ்வுலகத்தின் வேஷம் கடந்துபோகிறதே'' (29, 31).

தனியாயிருப்பவர்கள் தனியாகவேயிருக்க வேண்டுமென்று பவுல் விரும்பினார், ஏனெனில் திருமணமான மக்களால் முடியாத வழியில் அவர்கள் தங்களைக் கர்த்தருடைய ஊழியத்தில் ஈடுபடுத்த முடியும். ''நீங்கள் கவலையற்றவர்களாயிருக்க விரும்புகிறேன். விவாகமில்லாதவன் கர்த்தருக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாமென்று, கர்த்தருக்குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறான். விவாகம் பண்ணினவன் தன் மனைவிக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாமென்று, உலகத்துக்குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறான்'' (32, 33). பெண்களைப்பற்றியும் இந்தக் காரியம் உண்மையாயிருக்கிறது என்று பவுல் சொன்னார். தனியாயிருக்கும் மக்கள் உலகச் சிக்கல்களில் அகப்பட்டுக் கொள்ளாமல் சுதந்திரமாக இருக்கவேண்டுமென்று அவர் விரும்புகிறார்.

இந்த அதிகாரம் முழுவதிலும், பவுல் பிரம்மச்சாரியாக இருப்பதை ஊக்குவிக்கிறார்.

தனியாயிருக்கும் ஒருவர் கர்த்தருடைய ஊழியத்தில் அதிக அர்ப்பணிப்புடையவராயிருக்க முடியும் - தனியாயிருக்கும் ஒரு போதகரை சபை அழைப்பது அதிக ஞானமுள்ள ஒரு செயலாயிருக்கும்.

ஆனாலும் இதே நேரத்தில், திருமணம் செய்துகொள்வது இன்னும் ஒரு தெரிவாயிருக்கிறது என்று பவுல் தெளிவுபடுத்துகிறார். ''நீ மனைவியோடே கட்டப்பட்டிருந்தால், அவிழ்க்கப்பட வகை தேடாதே; நீ மனைவி இல்லாத வனாயிருந்தால், மனைவியைத் தேடாதே. நீ விவாகம் பண்ணினாலும் பாவ மல்ல.''

விதவையானவளைப்பற்றிப் பவுல்,''மனைவியானவள் தன் புருஷன் உயிரோடிருக்குங்காலமளவும் பிரமாணத்தினால் கட்டப்பட்டிருக்கிறாள்; தன் புருஷன் மரித்தபின்பு தனக்கு இஷ்டமானவனாயும் கர்த்தருக்குட்பட்டவனாயு மிருக்கிற எவனையாகிலும் விவாகம் பண்ணிக்கொள்ள விடுதலையாயிருக் கிறாள். ஆகிலும் என்னுடைய அபிப்பிராயத்தின்படி அவள் அப்படியே இருந்துவிட்டால் பாக்கியவதியாயிருப்பாள். என்னிடத்திலும் தேவனுடைய ஆவி உண்டென்று எண்ணுகிறேன்'' (39, 40). தங்கள் மனைவிகளை இழந்த ஆண்களுக்கும் இதே ஆலோசனை உபயோகமாயிருக்கும் என்பது தெளி வாகத் தெரிகிறது.

மரணத்தினால் உங்கள் திருமணத் துணையை இழந்திருப்பீர்களானால், அந்தத் திருமணம் மிக சிறப்பான திருமணமாயிருந்தாலுங்கூட, நீங்கள் மணம் செய்துகொள்ள சுதந்திரமாயிருக்கிறீர்கள். அது நீங்கள் செய்யக்கூடிய சாதாரண இயல்பான காரியம். உண்மையில், மனிதனைப் படைத்தபின் தேவன், ''மனிதன் தனியாயிருப்பது நல்லதல்ல'' (ஆதி. 2:18) என்று கூறினார். ஒரு ஆணின் அல்லது ஒருபெண்ணின் வாழ்நாளில் கடைசி பத்து அல்லது பதினைந்து ஆண்டுகளே இன்னும் இருந்தாலும்கூட வாழ்க்கை முழுமை பெறவேண்டும் என்பதே தேவனுடைய நோக்கம்.

இந்தத் திருமண அதிகாரம் இன்று சபைக்கு அதிக முக்கியமாகவேண்டிய ஒன்றாகும். திருமணம் உலகமெங்கும் இன்று தாக்குதலுக்குள்ளாகியிருக் கிறது. திருமணமான தம்பதிகள் வில்லுகளென்றும், அவர்கள் பிள்ளைகள் அம்பைப்போல உலகத்தினுள் எய்யப்படுவார்கள் என்றும் சாத்தானுக்குத் தெரியும். விவாகரத்து உலகெங்கும் தொற்றுநோய் போலிருக்கிறது.

தேவனுடைய மகிமைக்காகவும், நம் சொந்த ஆவிக்குரிய நன்மைக் காகவும் மகிழ்ச்சிக்காகவும் நம்முடைய திருமண உறவுகளைப் பலப்படுத்து வது அவசியம். இது குடும்ப வாழ்க்கையின் அடிப்படையானதும், மையத்தி லுள்ளதும் முக்கியமானப் பகுதியாயுமிருக்கிறது. இதன்மூலமாக நீங்கள் பூமிக்கு உப்பாகவும், உலகத்துக்கு வெளிச்சமாகவும் இருக்கவேண்டுவது தேவனுடைய விருப்பமாயிருக்கிறது.

20. ''பலவீனமான சகோதரனுக்கு அன்பு''

(I கொரிந்தியர் 8)

கொரிந்தியருக்கு பவுல் எழுதிய முதலாம் நிருபத்தின் எட்டாம் அதிகாரம் கொரிந்துவில் காணப்பட்ட மற்றுமொரு பிரச்சனைக்கு பவுல் கொடுத்த பதிலுடன் துவங்குகிறது. அதாவது விக்கிரகங்களுக்குப் பலியாகக் கொடுக் கப்பட்ட மாம்சத்தை உண்பது.

விசுவாசிகளாவதற்கு முன்பாக, அவர்கள் விக்கிரகாராதனையில் ஈடுபட்ட வர்கள். விக்கிரகாராதனை மொத்தமாக நெறிகெட்டச் செயல். ஏனெனில் அவர்கள் மாம்ச இச்சையைத் தூண்டும் தேவர்களை ஆராதித்தனர். இந்தத் தேவர்களை அவர்கள் ஆராதிப்பது, கோவில் விபசாரிகள், ஓரினப் பாலியல் அனுபவ சேர்க்கையையும் உட்கொண்டது. அந்த ''ஆராதனை அனு பவத்தைப்பெற'' இளைஞர்கள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டனர். இந்த விக்கிரகங்களுக்கு அவர்கள் மாம்சத்தைக் காணிக்கையாகச் செலுத்தினார்கள். அந்த மாம்சம் சேகரிக்கப்பட்டு, கொரிந்துவின் சந்தைவெளிகளில் குறைந்த விலையில் விற்கப்பட்டது. அது விக்கிரகாராதனையோடும் மிக்க கேவலமான விபச்சாரத்தோடும் தொடர்புடையதாயிருந்ததால் கிறிஸ்துவைப் பின்பற்றும் ஒருவர் இந்த மாம்சத்தை வாங்கி உணவு மேசைகளில் பரிமாறுவது சரியா? இந்தக் காரியத்தில் சபை தீவிரமாய்ப் பிரிந்திருந்தது.

அவர்கள் கிறிஸ்துவுக்குள் வருவதற்கு முன்பாக, அநேக விசுவாசிகள் விக் கிரகாராதனைக்காரர்களாக இருந்தவர்கள். உண்மையில் விக்கிரகாராதனை கிரேக்க கலாச்சாரத்தின் ஒரு முக்கிய அங்கமாயிருந்தது. அப்போஸ்தலர் 17இல் விவரிக்கப்பட்டபடி பவுல் எத்தேனே பட்டணத்துக்குச் சென்றபோது ஒரு மனிதனைக் கண்டுபிடிப்பதைவிட ஒரு தேவனைக் கண்டுபிடிப்பது எளி தாயிருந்தது என்று ஒரு கல்விமான் சொன்னார்.

இந்த வகையான ஆராதனை முறையில், பெரிய அளவில் மாம்சம் விக் கிரகங்களுக்குக் காணிக்கையாகப் படைக்கப்பட்டது. பின்னர் இது மாம்சத்தை விற்கும் கடைக்காரர்களால் சேகரிக்கப்பட்டு சந்தைவெளிகளில் விலை குறைத்து விற்கப்பட்டது. அந்த நாட்களில் விசுவாசிகள் துன்புறுத்தப்பட் டார்கள். அவர்கள், பொருளாதார ரீதியில் துன்பப்பட்டனர் என்று நாம் அனு மானிக்கலாம். விசுவாசிகள் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டியிருந்த தால், விக்கிரகங்களுக்கு காணிக்கையாக அளிக்கப்பட்ட மாம்சத்தை வாங்கி சாப்பிடுவதில் எந்தத் தவறும் இருப்பதாக அவர்கள் காணவில்லை. பவுல் இந்தக் கடிதத்தில் எட்டாம் அதிகாரத்தில் கொரிந்தியருக்கு அவர்களுடைய கேள்விக்கு பதில் எழுதுகிறார்.

அவர் அறிவைப் (Knowledge) பற்றிய சில வார்த்தைகளோடு துவங்குகிறார். கிரேக்கர்கள் அறிவில் சிறந்தவர்கள். அவர்கள் அறிவாளிகளையும் கல்வியையும் வணங்கினர். எனவே பவுல் அறிவை மையமாகக்கொண்டுத் துவங்குகிறார். ''நம்மெல்லாருக்கும் அறிவு உண்டென்று நமக்குத் தெரியுமே. அறிவு இறுமாப்பை உண்டாக்கும், அன்போ பக்திவிருத்தியை உண்டாக்கும். ஒருவன் தான் ஏதேனும் ஒன்றை அறிந்தவனென்றும் எண்ணிக்கொள்வானானால், ஒன்றையும் அறியவேண்டியபிரகாரமாக அவன் இன்னும் அறியவில்லை'' (1, 2). பிரச்சினை என்னவென்றால் உனக்கு என்ன தெரியும் என்பதல்ல, எவ்வளவு நீ அன்பு கூருகிறாய் என்பதே. பிரச்சினை, எது சரி எது தவறு என்பதல்ல, ஆனால் இது தவறு என்று நினைக்கிற பலவீனமான சகோதரனை நீ எவ்வளவு நேசிக்கிறாய் என்பதே.

''இந்தப் பிரச்சினை இன்று எப்படி எனக்குப் பொருந்தும்? நான் விக்கிரகங்களை ஆராதிக்கவில்லை, அவைகளுக்குப் படைக்கப்பட்ட மாம்சத்தை வாங்குவதுமில்லையே என்று எண்ணலாம்.

இந்த மாம்சத்தைச் சாப்பிடுவதில் தவறில்லை என்ற நம்பிக்கையுடையவர்களைப் பவுல் புகழ்கிறார். எனினும், மெய்யான தேவன் ஒருவரே என்றும் விக்கிரகங்கள் வெறும் மரம், கல், பொன், வெள்ளி தான் என்பதை எல்லாரும் புரிந்துகொள்ளுவதில்லையென்றும் பவுல் சொல்லுகிறார். அவர்கள் விக்கிரகங்களுக்குப் பலியிட்ட ஆகாரத்தைச் சாப்பிடும்பொழுது அவர்களுடைய பலவீனமான மனச்சாட்சி பாதிக்கப்படுகிறது, தூய்மையற்றதாகிறது. ''ஆகிலும் இதைக்குறித்து உங்களுக்கு உண்டாயிருக்கிற அதிகாரம் எவ்விதத்திலும் பலவீனருக்குத் தடுக்கலாகாதபடிக்குப் பாருங்கள்'' (9). பலவீனமுள்ள மனச்சாட்சி அல்லது மனதுடையவர்களை இயேசு கிறிஸ்து நேசிக்கிறார். அவனுக்காக மரிக்கும் அளவுக்கு அந்த மனிதன்மீது அன்பு செலுத்தினார். அதாவது இந்தப்பிரச்சினை சரியா தவறா என்பதைப் பற்றியதல்ல. அது தவறு என்று நினைப்பவர்கள்மேல் நீ எவ்வளவு அன்பு வைத்திருக்கிறாய் என்பதைப்பற்றியதே.

உங்களுக்கு நன்கு பிரித்தறியும் திறனிருப்பதால் உங்கள் கலாச்சாரத்தில், அல்லது வாழ்வில், அல்லது சபையில், உங்கள் கருத்துப்படி தவறல்ல என்று கருதப்படும் ஒரு காரியத்தைச் சிந்தித்துப் பாருங்கள். உங்களைப்போன்ற அளவுக்குப் பகுத்தறியும் திறன் இல்லாத விசுவாசிகள் ஒருவேளை உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். அவர்கள் இந்தப்பிரச்சினையை நீங்கள் பார்ப்பதுபோல் பார்க்கவில்லை. தங்கள் தனிப்பட்ட காரணங்களுக்காக, அவர்கள் இந்தக் காரியம் விக்கிரகங்களுக்குப் படைப்பதை உண்ணுவது

தவறு என்று நினைக்கின்றனர். நீங்கள் இந்தக் காரியத்தைச் செய்வதை அவர்கள் பார்த்தால், ஆவிக்குரிய ரீதியில் அவர்கள் மனக்காயமடைவார்கள்.

''ஒருவருடைய பலவீனமுள்ள மனச்சாட்சியினால் என் சுதந்திரம் ஏன் கட்டுப்படுத்தப்படவேண்டும்,'' என்று நீங்கள் கேட்கலாம். இங்குதான் அன்பு வருகிறது. இதனால்தான் பவுல் அது அறிவைப் பொறுத்ததல்ல என்று சொல்லுகிறார். அறிவு இறுமாப்பை உண்டுபண்ணி உங்களை வீண்பெருமைக்காரராக ஆக்குகிறது, ஆனால் அன்பு பக்திவிருத்தியை உண்டாக்குகிறது. இயேசு கிறிஸ்து தன் பலவீனமுடைய சகோதரனுக்காக மரணத்தை ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு அவன்மேல் அன்பு கூர்ந்தார். எந்த அளவுக்கு நீங்கள் அவன்மேல் அன்பாயிருக்கிறீர்கள்? அறிவினாலல்ல, அன்பினால், பலவீனமுடைய ஒரு சகோதரனைப் பாதிக்கக்கூடிய காரியங்களை விட்டுவிடச் சித்தமுடையவனாயிருக்கிறாயா?

21. ''எல்லாக் காரியங்களும் எல்லா மனிதர்களுக்கும்''

(I கொரிந்தியர் 9:1-23)

ஒரு போதகர் ஒரு சபையை நிலைநாட்டி, சபையின் அங்கத்தினர்களை கிறிஸ்துவுக்கு வழி நடத்தின ஒருவர் என்று வைத்துக்கொள்ளுவோம். சபை வளர்ச்சியடைந்தபொழுது, போதகர் ஊழியத்திற்கு ஆட்கள் தேவைப்படுகிறது, எனவே அந்தச் சபை அநேக ஊழியர்களை வேலைக்கு வைத்துக்கொள்கிறது. ஆனால் இந்த எல்லா ஊழியர்களையும் ஆதரித்து, நிலைநாட்டிய போதகரை ஆதரிக்கவில்லை. அது நேர்மையாயிருக்குமா?

இதுவே கொரிந்துவில் நடைபெற்றது. பவுலின் அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்ட ஊழியர்கள் எல்லாரும் சபையின் உதவியைப்பெற்றனர், ஆனால் பவுல் கொரிந்திய விசுவாசிகளிடமிருந்து ஒருபொழுதும் எந்த உதவியையும் பெறவில்லை. ஒன்பதாம் அதிகாரத்தில், அவர் தன் சொந்த வாழ்க்கையில் ''பலவீனமுடைய சகோதரன் கொள்கையைச்'' செயல்படுத்துகிறார் என்ற உண்மைக்கு ஒரு எடுத்துக்காட்டாக இதைப் பயன்படுத்துகிறார். கொடுப்பதில் கொரிந்தியர்களை அவர் பலவீனமுடைய சகோதரர்களாகக் கருதுகிறார்.

கொரிந்தியச்சபையிலிருந்த சில மக்கள், பவுல் தன்னை ஒரு அப்போஸ்தலன் என்றழைப்பதைப் பற்றி கேள்வியெழுப்பியது தெளிவாகிறது. அப்போஸ்தலர் முதலாம் அதிகாரத்தில், கர்த்தருடைய ஞானஸ்நானம் முதல் அவர் பரத்துக்கேறிய நாள் வரை அவரோடிருந்தவர்கள் அப்போஸ்தலர்களாகத் தெரிந்து கொள்ளப்

பட்டனர் என்பதைப் பற்றி வாசிக்கிறோம். இந்தப் பிராணங்களின்படி, பவுலுக்கு ஒரு அப்போஸ் தலனாகும் தகுதியில்லை. இந்தப் பாடப்பொருளைப் பற்றி அதிகாரம் ஒன்பதில் விளக்கியபின், பத்தாம் அதிகாரத்தில் பலவீனமுடைய சகோதரனுக்குக் காட்ட வேண்டிய அன்பைப்பற்றிய பாடப்பொருளுக்கு அவர் திரும்ப வருகிறார்.

பவுல்: ''நான் அப்போஸ்தலனல்லவா? நான் சுயாதீனனல்லவா? நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நான் தரிசிக்கவில்லையா? கர்த்தருக்குள் நீங்கள் என் கிரியையாயிருக்கிறீர்களல்லவா? நான் மற்றவர்களுக்கு அப்போஸ்தலனாயிராவிட்டாலும், உங்களுக்கல்லவோ அப்போஸ்தலனாயிருக்கிறேன்; கர்த்தருக்குள் நீங்கள் என் அப்போஸ்தலர் ஊழியத்திற்கு முத்திரையாயிருக்கிறீர்களல்லவா?'' (1, 2).

ஒரு அப்போஸ்தலர் என்பவர் (அனுப்பப்பட்டவர்), ஒரு மிஷனரியைப் போல அனுப்பப்பட்ட ஒருவர். பவுல் கொரிந்துவுக்கு அனுப்பப்பட்டார், அங்குள்ள மக்கள் அஞ்ஞானிகளாயிருந்தார்கள். ஆனால் அவர் வந்ததனால் அவர்கள் இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றார்கள்; அவர்கள் கர்த்தருக்காக அவர் செய்த கிரியையின் பலன். ஒரு காலத்தில் அஞ்ஞானிகளாயிருந்து, இப்பொழுது கிறிஸ்துவுக்குள்ளிருக்கும் கொரிந்தியர்களே அவருடைய அப்போஸ்தலத்துவத்து நிரூபணம் என்று பவுல் வாதமிடுகிறார்.

தொடர்ந்து அவர், ''என்னை நியாயம் விசாரிக்கிறவர்களுக்கு நான் சொல்லுகிற மாறுத்தரமாவது : புசிக்கவும் குடிக்கவும் எங்களுக்கு அதிகார மில்லையா? மற்ற அப்போஸ்தலரும், கர்த்தருடைய சகோதரரும், கேபாவும் செய்கிறதுபோல, மனைவியாகிய ஒரு சகோதரியைக் கூட்டிக்கொண்டு திரிய எங்களுக்கும் அதிகாரமில்லையா? அல்லது, கைத்தொழில் செய்யாதிருக் கிறதற்கு எனக்கும் பர்னபாவுக்கும் மாத்திரந் தானா அதிகாரமில்லை... நாங்கள் உங்களுக்கு ஞானநன்மைகளை விதைத்திருக்க, உங்கள் சரீரநன்மைகளை அறுத்தால் அது பெரிய காரியமா... அப்படியிருந்தும், கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு யாதொரு தடையும் உண்டாகாதபடிக்கு, நாங்கள் இந்த அதிகாரத்தைச் செலுத்தாமல் எல்லாப்பாடும்படுகிறோம்'' (3-6, 11-12).

பவுலுக்கு கொரிந்து சபையிலிருந்து உதவிபெற்றுக்கொள்ள அதிகாரமிருந்தது, ஆனால் அவர் அவர்களிடமிருந்தோ, எபேசுவிலுள்ளவர் களிடமிருந்தோ தெசலோனிக்கேயரிடமிருந்தோ எந்த உதவியையும் எடுத்துக் கொள்ளவில்லை. இந்த சபைகளுக்கெல்லாம் அவர் ஊழியஞ் செய்தபொழுது அவருக்கு உதவியளித்த சபை, பிலிப்பியின் சபை. பிலிப் பியர்கள் போதுமான முதிர்ச்சியடைந்தவர்கள் என்றும் அவருடைய ஊழியத்தில் உதவிசெய்ய அவர்களுக்குச் சரியான நோக்கங்கள் இருந்தன

என்றும் பவுல் விசுவாசித்தார், இதனால் அவருக்கு உதவிசெய்யும் சலுகையை அவர்களுக்கும் அளித்தார்.

கொரிந்திய விசுவாசிகளுக்கு இந்தப் பிரச்சினை தடைக்கல்லாக இருப்பதை அவர் விரும்பவில்லை. அதிகாரபூர்வமாக அவர்களிடம் உதவியைப் பெற்றுக் கொண்டிருந்தால், அவர்களில் சிலர், ''நம்மிடமிருந்து பணம் பெற்றுக்கொள்ள அவர் முயற்சி செய்கிறார்,'' என்று சொல்லியிருப்பார்கள். இதனால் பவுல், கிறிஸ்துவின் விசுவாசத்துக்குள் வரும் எவருக்கும் தடங்கலில்லாமலிருக்கும்படி கொரிந்துவில் சுவிசேஷத்தை இலவசமாக அறிவிப்பதில் திடமாயிருந்தார். கொரிந்து சபையோடு தமக்குள்ள உறவில் பலவீனமுடைய சகோதரன் கொள்கையை எப்படி நிறைவேற்றுகிறார் என்பதை நீங்கள் காண்கிறீர்களா? வசனம் 16இல் பவுல், ''சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும், மேன்மை பாராட்ட எனக்கு இடமில்லை; அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ!'' என்று சொல்லுகிறார். பவுலுக்கு அது அந்தப்படியாயிருந்தது. அவர் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்காவிட்டால் அவர் துயரப்பட்டிருப்பார். சுவிசேஷத்தைச் ''செலவில்லாமல்'' (18) அளிப்பதே அவருடைய அர்ப்பணிப்பு - அப்படிச் செய்வதால், பலவீனமுடைய சகோதரனுக்கான அன்பின் கொள்கையை அவர் செயல்படுத்துகிறார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் பவுல் தம்முடைய ஊழியத்தின் கொள்கையைக் கொடுக்கிறார்: ''நான் ஒருவருக்கும் அடிமைப்படாதவனாயிருந்தும், நான் அதிக ஜனங்களை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு, என்னைத்தானே எல்லாருக்கும் அடிமையாக்கினேன்'' (19). நியாயப்பிரமாணத்தின் கீழிருக்கும் யூதருக்கு, அவர் நியாயப்பிரமாணத்தின் கீழிருக்கும் ஒருவரானார். பலவீனரை கிறிஸ்துவுக்கு ஆதாயப்படுத்தும்படி பலவீனருக்கு பலவீனரானார். ''எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும் நான் எல்லாருக்கும் எல்லாமானேன்'' (22).

நாம் செய்யும் எல்லா காரியங்களும், மற்றவர்களுக்கு அது எப்படித் தாக்கமளிக்கிறது என்ற அளவின்படியே அளக்கப்பட வேண்டும். நாம் மற்றவர்களை மையமாகக் கொண்டிருக்க வேண்டும். நாம் பலவீனமுடைய சகோதரனைப்பற்றி நாட்டமுடையவர்களாயிருக்க வேண்டும், சுயநாட்ட முடையவர்களாக அல்ல. பவுல் தெய்வபக்தியுள்ள யூதன், பலவீன சகோதரன், பிரமாணத்துக்குக் கீழ்பட்ட விசுவாசி, சட்டத்துக்குக் கட்டுப் படாதவன், காணாமற்போன மக்கள் ஆகியவர்களை தம் வாழ்க்கை மற்றும் ஊழியத்தின் மையமாக வைத்திருந்தார். அவர் தன்னை அந்த மக்களுக்கு அடிமையாக்கி, அவர்களை எப்படியாவது செவி கொடுக்கும்படி செய்து, பின்னர் அவர்களோடு சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொள்ளத் தீர்மானித்தார்.

22. ‘‘வெற்றிப்பெற்றுக் கொள்ளத்தக்கதாக ஓடுங்கள்’’

(I கொரிந்தியர் 9:24-27)

ஒன்பதாம் அதிகாரத்தில், உலக விளையாட்டுப் போட்டியிலிருந்து ஒரு எடுத்துக்காட்டைப் பயன்படுத்தி கொரிந்துவிலுள்ள வாலிப விசுவாசிகளை ஊக்கப்படுத்தி அவர்களை விசுவாசத்தைக் காத்துக் கொள்ளும்படி கேட்டுக்கொண்டு, பவுல் இந்த அதிகாரத்தை முடிக்கிறார். ‘‘பந்தயச் சாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள்; ஆகிலும் ஒருவனே பந்தயத்தைப் பெறுவானென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக் கொள்ளத்தக்கதாக ஓடுங்கள். பந்தயத்துக்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள், நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம். ஆதலால் நான் நிச்சய மில்லாதவனாக ஓடேன்’’ (24-26).

விளையாட்டுப்போட்டிகளிலிருந்து அப்போஸ்தலர் பயன்படுத்தும் முதல் எடுத்துக்காட்டு, ஓட்டப் பந்தயத்தைப் பற்றியது. ஒரு பத்து கிலோமீட்டர் ஓட்டப்பந்தயத்தில் ஓட்டக்காரர்கள் போட்டியிடுகிறார்கள் என்று வைத்துக்கொள்ளுவோம். அவர்கள் ஓட்டக்களத்தின் கடைசியி லிருக்கும் இலக்கின்மேல் தங்கள் கண்களால் அடியெடுத்து வைக்கின்றனர் - முடிவு எல்லைக் கோட்டை அவர்கள் கடக்கும்பொழுது உடைக்கும் நாடா, அவர்கள் அந்த நாடாவை உடைக்கும் அந்த நொடிப்பொழுதில், சரியாக அடியெடுத்து வைத்தால், அந்தப் பந்தயத்தை ஜெயிக்கும்படியான எல்லாக் காரியங்களையும் செய்தாயிற்று. பந்தயத்தை நன்றாக ஓடி வெற்றிபெறு வதற்கு சரியான ஓட்டவேகம் முக்கியமானது. ஓடுபவர்கள் தங்கள் முழு சக்தியையும் சீக்கிரமாகச் செலவிடக் கூடாது, முன்பாகவே அவர்கள் தடத்தில் விழுந்துவிடுவார்கள். இன்னும் அதிக சக்தியிருக்கும்பொழுது ஓட்டப் பந்தயத்தை முடித்து விடவுங்கூடாது. இதை வெற்றிபெற பயன்படுத்தி யிருக்க முடியும்.

இந்த அதிகாரத்தில் (19-23), பவுல் ஊழிய தத்துவத்தைப்பற்றி சுருக்கமாகக் கூறியதின் கருத்தை செயல்படுத்துகிறார். ஒரு மிஷனரியாக அவருடைய குறிக்கோள், நற்செய்தியை உலகத்தில் பரப்புவதாகும், இந்தக் குறிக்கோளை கிறிஸ்துவின் பிரமாணத்துக்குள், அவர் செய்வார். அவருடைய பரிசு என்ன என்று அவருக்குத் தெரியும் - அவருடைய பிரசங்கத் தினால் நற்செய்தியை ஏற்றுக்கொண்ட மக்கள் - நித்தியகாலத்துக்கு மானவர்கள்.

இருபத்தாறாம் வசனத்தில், உலக விளையாட்டுப் போட்டியிலிருந்து மற்றுமொரு எடுத்துக்காட்டைப் பயன்படுத்துகிறார்: ‘‘ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம் பண்ணேன். மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்’’ (27). ஒருவேளை பவுல் ஒரு வாலிபனா யிருந்தபொழுது ஒரு பெரிய விளையாட்டு வீரராய் இருந்திருக்கக் கூடும். ஏனெனில் தம்முடைய நிருபங்களில் இதுபோன்ற அநேக எடுத்துக் காட்டுகளைப் பயன்படுத்துகிறார். எடுத்துக்காட்டாக எபேசியர் 6 ஆம் அதிகாரத்தில் அவர் போராட்டத்தைப் பற்றிப்பேசுகிறார். இந்த வசனப் பகுதியில், ஒரு மரத்தான் (Marathon) நீண்ட தூர ஓட்டக்காரன் ஒரு ஓட்டப்பந்தயத்துக்கு திட்டமிடுவதுபோல பவுல் தன் வாழ்க்கை மற்றும் ஊழியத்தின் மேலான மனோபாவத்தை ஒப்பிட்ட பின், அவர் தன்னுடைய வாழ்க்கை, ஊழியம் ஆகியவற்றின் தோற்றத்தை ஒரு குத்துச்சண்டை வீரன் தன்னுடைய போராட்டத் திட்டத்தை ஆயத்தம் செய்வதோடு ஒப்பிடுகிறார்.

ஒரு குத்துச் சண்டை வீரன் ஒரு சண்டைக்கு ஆயத்தப் படுத்தும்பொழுது, தன்னுடன் போட்டி போடப்போகும் நபரின் தந்திரங் களைத் திட்டமிடுவதில் அநேக மாதங்களை அவன் செலவிடுகிறான். அவனை எதிர்ப்பவனின் விடியோப்படங்களைப் பார்த்து, ஆராய்ந்து அவனுடைய பலவீனத்தை அவன் காணமுடியும் - தான் ஜெயிப்பதற்கான தருணங்களை அவன் குறிப்பாகக் காண்கிறான். இன்னும் தன்னுடைய பாவங்கள் எவை, பலவீனங்கள் எவை என்பதும் அவனுக்குத் தெரியும். இந்த ஆயத்தம் முழுவதும் அவன் வெற்றியடைவதற்கான அவனுடைய தந்திரத்தின் ஒரு பகுதி.

ஒரு நீண்ட தூர ஓட்டக்காரன், ஒரு குத்துச் சண்டை வீரன், மற்ற விளையாட்டுப்போட்டி வீரர்கள் ஒரு நிகழ்ச்சிக்கு ஆயத்தம் செய்வதுபோல, பவுல் தன்னுடைய குறிக்கோளில் அதிக கவனம் செலுத்தினார். தமஸ்குவுக்குச் செல்லும் பாதையில் கிறிஸ்து அவனை இரட்சித்தபொழுது, அவர் பவுலை ஒரு ஊழியத்துக்காக அழைத்தார். இந்த ஊழியம் நிறைவேற்றப்படுவதற்காக, பவுல் தான் எப்படி வாழவேண்டும் என்பதற்கு ஒரு திட்டம் வகுத்தார் - தன்னால் கூடியவரை அநேக மக்களை கிறிஸ்து வுக்குள் வழிநடத்துவதற்காக அவர் எல்லா மக்களுக்கும் எல்லாக் காரியங் களாயிருப்பார். ஒரு விளையாட்டுப் போட்டி வீரன் தன் உடலைக் கடுமை யான பயிற்சிக்கும் கட்டுப்பாட்டுக்கும் ஏற்றபடி உணவுமுறைகளைப் பின்பற்றவும் தன்னை உட்படுத்துவது போல, பவுலும் செய்தார். ஓட்டப்பந்தயத்தில் - தன்னோடு ஓடும்படி மற்றவர்களையும் அழைத்த அந்த ஓட்டப்பந்தயத்தில் - தான் தகுதியை இழந்து விடுவதை அவர் விரும்ப வில்லை.

கிறிஸ்துவைப் பின்பற்றும் ஒவ்வொருவருக்கும் தங்களது வாழ்க்கை மற்றும் ஊழியத்தைப் பற்றி இதுபோன்ற தத்துவம் இருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும். இரட்சிக்கப்பட்டு, நாம் அழைக்கப்பட்ட இந்த வாழ்க்கையைப் பற்றி நமக்கு இதுபோன்ற மனப்பான்மை இருக்க வேண்டும். இதுபோன்று ஊழியர்கள் யோசித்தால் தேவனுடைய நாமம் எப்படி மகிமைப்படும். கிறிஸ்து எப்படி மகிமைப்படுத்தப்படுவார், நற்செய்திப் பணி எப்படி நடைபெறும் என்று பவுல் அழகாக எடுத்துக்கூறினார்.

23. ''எடுத்துக்காட்டுகளும் எச்சரிக்கைகளும்''

(I கொரிந்தியர் 10:1-22)

முதல் கொரிந்தியர் 10 ஆம் அதிகாரத்தில் விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட மாம்சத்தை உண்பது பற்றிய கருத்துக்குத் திரும்புகிறார். இந்த மாம்சத்தை உண்பது சரி என்று விசுவாசிப்பவர்களுக்கு அவர் ஒரு எச்சரிக்கையளிக்கிறார். ''மாம்சத்தின்படியான இஸ்ரவேலரைப் பாருங்கள்; பலிகளைப் புசிக்கிறவர்கள் பலிபீடத்தோடே ஐக்கியமாயிருக்கிறார் களல்லவா?'' (18). அதாவது ''விக்கிரகங்களுக்கு காணிக்கையாகப் படைக்கப்பட்ட இந்த மாம்சத்தை நீ உட்கொண்டால், நீ உன்னை அதோடு சம்பந்தப்படுத்திக்கொண்டாய் என்பதை நீ தெரிந்துகொள்ளவில்லையா? கிறிஸ்துவோடும், அவருடைய சரீரத்தைக் குறிப்பிடும் கிறிஸ்துவின் அப்பத்தோடும் திருவிருந்தில் பங்குபெற்றுக்கொண்டே இன்னும் விக்கிர காராதனை மற்றும் அதோடு தொடர்புடைய எல்லாக் காரியங்களிலும் பங்குபெறுவது உன்னால் முடியுமா?''

அவர்கள் வனாந்தரத்திலிருந்தபொழுது இஸ்ரவேலரின் விக்கிர காராதனையையும் பழைய ஏற்பாட்டிலிருந்து சில எடுத்துக்காட்டுகளையும், குறிப்பிட்டபின், பவுல் 11 ஆம் வசனத்தில், ''இவைகளெல்லாம் திருஷ்டாந் தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவு காலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாகும்படி எழுதப்பட்டும் இருக்கிறது'' என்றார்.

பவுல் குறிப்பிடுகிற இந்த எடுத்துக்காட்டுகள், உண்மையில் கொரிந்திய விசுவாசிகள் மேலும், நம்மீதும் இன்று ஒரு கருத்தைத் தெரிவிப்பதற்கான சிறிய உவமானங்களாகும்.

''இப்படியிருக்க, நான் நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்'' (12) ''இதெப்படி, நான் ஒருபொழுதும் விழமாட்டேன்'' என்று நீ நினைத்தால், இஸ்ரவேலர் உனக்கு ஒரு

எச்சரிக்கையாயிருக்கட்டும். ஏனெனில் நீயுங்கூட பாவத்தில் விழ முடியும். பழைய ஏற்பாட்டில் தேவனுடைய மக்கள் செய்த அதே பாவத்தை திரும்பவும் செய்யாதபடி நாம் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். மேலும் வனாந் தரத்தில் சாலொமோனும் தவறுகளைச் செய்தான், என்பதைப் படிக்கிறோம். தன் வாழ்வின் கடைசி நேரத்தில் அவன்: ''நான் செய்ததை நீங்களும் செய்யாதிருங்கள். என்னுடைய அனுபவத்திலிருந்து கற்றுக்கொண்டு நான் அனுபவித்தத் துன்பங்களைத் தவிருங்கள். என்னுடைய வாழ்க்கை உங்களுக்கு ஒரு எச்சரிக்கையாயிருக்கட்டும்'' (சங்கீதம் 127:1,2).

தாவீதுக்கு ஏற்பட்ட ஒவ்வொரு சோதனையும் உங்களுக்கும் ஏற்படும். இஸ்ரவேலருக்கு ஏற்பட்ட ஒவ்வொரு சோதனையும் உங்களுக்கும் ஏற்படும். ஏன்? ஏனெனில் அவர்கள் மனிதர்கள், நீங்களும் மனிதர்கள். தேவன் அப்போது பயன்படுத்திய அதே மூலாதாரங்களை இன்றைக்கும் பயன்படுத்துகிறார்.

ஆனாலும் பவுல் அடுத்த வசனத்தில் நம்பிக்கையளிக்கிறார். ''மனுஷனுக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுவதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத் தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார் (13). அடுத்த வசனம், விலகி ஓடுவதனால் தப்பித்துக்கொள்ள முடியும் என்று நமக்கு வழி காட்டுவதைக் கவனியுங்கள்.

உங்களுடைய வாழ்க்கையில் வரும் தவறான ஆசைகள், ஒரு புதிய வித்தியாசமான காரியமல்ல. மற்ற மக்கள் இதே சோதனைகளைச் சந்தித்திருக்கிறார்கள். ஆனால் தேவனிடம் நம்பிக்கை வைப்பதனால், சோதனைகளை நீங்கள் எதிர்த்து நிற்கக் கூடிய வல்லமையைப் பெற்றுக்கொள்ள முடியும். ஏனெனில் அப்படிச் செய்வதாக அவர் வாக்களித்திருக்கிறார், அதன்படி அவர் செயல்படுவார்.

கொரிந்திய விசுவாசிகள் தவிர்க்கவேண்டிய, (இஸ்ரவேலர்கள் செய்த குறிப்பிட்ட பாவங்களை) பவுல் நினைவுபடுத்துகிறார்: கர்த்தரை சோதிப்பது, குறைகூறுவது, பதினைந்தாம் வசனத்தில், விக்கிரகங்களுக்குக் காணிக்கை யாகப் படைக்கப்பட்ட மாம்சத்தை உண்பது எப்படி பலவீனமுள்ள சகோதரனைப் பாதிக்கிறது என்றும் குறிப்பிடுகிறார்.

''ஆகையால் எனக்குப் பிரியமானவர்களே, விக்கிரகாரா தனைக்கு விலகி ஓடுங்கள்'' (14). விக்கிரகங்களுக்குக் காணிக்கையாகப் படைக்கப்பட்ட மாம்சத்தை உண்பது நெறிகெட்ட நடத்தையை சம்பந்தப்பட்ட தாயிருக்கிறது.

இந்த நடத்தைகள் எவ்வளவு பாவகரமானது என்று உணர வேண்டும். உண்மையில், விக்கிரகாராதனை ஆவி உலகத்தோடு தொடர்புடைய தாகவுமிருந்தது. ''அஞ்ஞானிகள் பலியிடுகிறவைகளை தேவனுக்கு அல்ல, பேய்களுக்கே பலியிடுகிறார்கள் என்று சொல்லுகிறேன்''(20). அதனாலேயே கொரிந்தியர்களிடம் அவற்றிற்கு விலகி ஓடும்படிச் சொல்லுகிறார்.

அதுவும் நமக்கு ஒரு நல்ல ஆலோசனை தான்: இந்தச் சோதனைகளிலிருந்து உடனே விலகியோடுங்கள். நீங்கள் பலனுள்ள ஒரு தூண் என்றும், உங்கள் வாழ்க்கையில் வரும் சோதனைகளிலிருந்து தப்பித்துக் கொள்ளும் ஒரு வழியை உங்களால் கண்டு பிடிக்க முடியும் என்றும் எண்ணாதீர்கள். உங்கள் ஆவி உற்சாகமுள்ளது மாம்சமோ பலவீனமானது என்பதை மறவாதீர்கள், மாம்சத்துக்கு இடங்கொடுக்காதீர்கள். சோதனையைக்குறித்த உறுதியானப் போதனை நாம் சோதனைக்குட்படக் கூடாது என்பதே. சீடர் களுக்குக் கற்பித்த தம்முடைய ஜெபத்தில், ஒவ்வொரு நாளும், ''எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல்... இரட்சித்துக் கொள்ளும்'' என்று ஜெபிக்கும்படி இயேசு போதித்தார் (மத்தேயு 6:13; 26:40,41).

24. ''அன்பின் மூன்று கொள்கைகள்''

(I கொரிந்தியர் 10:23-33)

விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட மாம்சத்தை உட்கொள்ளும் பிரச்சினை பற்றிய அற்புதமான இந்த ஆராய்ச்சியை முடிக்கும்போது, எட்டாம் அதிகாரத்தில் கிறிஸ்துவைப்போல் உரிமையுள்ளவராய் இருப்பதைப் பற்றி திரும்பவும் அவர் கூறுகிறார். எல்லாம் அனுமதிக்கப்பட்டது. ஆனால் எல்லாம் நன்மையானதும் தகுதியுடையதுமல்ல என்று அவர் சொல்லுகிறார். நாம் நம் சொந்த நன்மைகளுக்கு மேலாக மற்றவர்களுக்கு நன்மையானவைகளையே தேட வேண்டும் என்று திரும்பவும் அவர் வலியுறுத்துகிறார்.

இதற்குப்பின் குறிப்பிட்ட போதனைகளை அவர் கொடுக்கிறார் ''கடையிலே விற்கப்படுகிற எதையும் வாங்கிப்புசியுங்கள்; மனச்சாட்சி யினிமித்தம் நீங்கள் ஒன்றையும் விசாரிக்க வேண்டியதில்லை. பூமியும் அதன் நிறைவும் கர்த்தருடையது'' (25,26). மேலும், ஒருவர் உங்களை மதிய உணவு சாப்பிடும்படி அழைத்து, மேசையின்மேல் மாம்சமிருந்தால்,'' இந்த மாம்சம் விக்கிரகத்துக்குப் படைக்கப்பட்டதா? என்று கேட்காதீர்கள்,'' என்று

அவர் புத்திமதியளிக்கிறார். எந்தக் கேள்விகளையும் கேட்காமல் அதைச் சாப்பிடுங்கள். ஆனால் உங்களை விருந்துக்கழைத்தவர், ''இந்த மாம்சம் ஒரு விக்கிரகத்துக்குப் பலியாகப் படைக்கப்பட்டது என்று நீ தெரிந்து கொள்ள வேண்டும்'' என்று சொன்னால் ''மனச்சாட்சியினிமித்தம் அதைச் சாப்பிட வேண்டாம்'' ''அந்த மனிதனுடைய மனச்சாட்சி, உங்களுடையதல்ல'' (29) என்று பவுல் தெளிவுபடுத்துகிறார்.

பவுல் கொரிந்தியர்களின் கேள்வியை எதிர்பார்க்கிறார். ''என் சுயாதீனம் மற்றொருவனுடைய மனச்சாட்சியினாலே குற்றமாய் எண்ணப்பட வேண்டுவதென்ன'' (29). மற்றொருவர் எண்ணுகிறபடி நான் வழிநடத்தப் பட்டு கட்டுப்படுத்தப்படவேண்டுமா? ஏன்? என்று நீங்கள் கேட்கலாம். தேவனுடைய மகிமைக்காக! இயேசு கிறிஸ்துவினுடைய ஒரு சீடனாக நீ செய்யும் ஒவ்வொரு காரியமும், நீ புசிப்பதும் குடிப்பதுங்கூட, தேவனுடைய மகிமைக் கென்றே செய்யப்படவேண்டும். எந்த ஒருவருக்கும் - யூதரானாலும் அஞ்ஞானிகளானாலும் அல்லது விசுவாசிகளானாலும் - இடறல் இல்லாதபடி வாழ்வதை நீங்கள் உறுதிசெய்து கொள்ள வேண்டும் (10:32,33).

உன்னை விருந்துக்கழைத்தவர் இரட்சிப்பைப் பெறக் கூடியவர். அவன்/அவள் அப்படியொரு காரியத்தைச் சொன்னதினால், கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் விக்கிரகத்துக்குப் படைத்த மாம்சத்தைச் சாப்பிட மாட்டார்கள் என்று அவர்கள் ஒரு வேளை நம்பியவர்களாயிருக்கலாம். இந்தக் கேள்விக்கு இன்னொரு பதில் ஒரே வார்த்தையில் ''அன்பு'' எனலாம். பவுல் கொரிந்திய சபைக்கு எழுதிய ஒவ்வொரு பிரச்சினைக்கும், இந்தப் பிரச்சினைக்குங்கூட அன்பு அதிகாரத்தில் எப்படி தீர்வு காணப்பட்டது என்பதைக் கவனியுங்கள்.

ஒன்பதாம் அதிகாரத்தில் பவுல் விவரித்ததும் உத்தரவிட்டதுமான தனிப்பட்ட நீதிநெறிகளுக்கு வழிகாட்டும் மூன்று கொள்கைகள் இங்கே வெளிப்படுகின்றன. பவுல் தன்னுடைய நன்மையைத் தேடாமல், மற்றவர் களுடைய நன்மையையே தேடினார். யூதரையும், அஞ்ஞானியையும், நியாயப்பிரமாண விசுவாசியையும் பலவீனமுடைய சகோதரனையும், தன்னுடைய வாழ்வின் மையத்தில் வைத்திருந்தார். அவர் தனக்கு மகிமையைத் தேடாமல் தேவனுக்கே மகிமையைத் தேடினார் - புசிப்பது குடிப்பது போன்ற சிறிய காரியங்களிலுங்கூட. தேவனை மகிமைப் படுத்துவது எது? மற்றவர்களுடைய இரட்சிப்பையும் மேம்படுத்துதலையும் கொண்டுவருவது எது? நான் என்னுடைய ஆதாயத்தைத் தேடுகிறேனோ? இவைகள் விசுவாசிகளின் நன்னெறிகளை ஆட்சி செய்யும் அற்புதமான கொள்கைகள்.

இந்தக் கொள்கைகள் ஒவ்வொரு விசுவாசிக்குமானவை, ஆனாலும் சிலவேளைகளில் இந்த நன்னெறியைப் பூரணமாக அறிந்துகொள்ள முடியாது. எனினும், அவர்கள் முதிர்ச்சியடையும் பொழுது, மிகப்பெரிய மிஷனரி, போதகர், ஆசிரியர், ஆகிய புதிய ஏற்பாட்டுச் சபையை உண்டாக்கியவர் கூறிய கொள்கைகளின் தத்துவத்தை ஏற்றுக்கொள்ளுங்கள்.

ஒரு சபையின் தலைவராயிருக்க, முதல் கொரிந்தியர் எட்டு, ஒன்பது, பத்தாம் அதிகாரங்களில் பவுல் மாதிரிகளாகவும் சிறு குறிப்புகளாகவும் காட்டிய இந்த வாழ்க்கைத் தத்துவம் மற்றும் ஊழியத்தின் மாதிரியை கிறிஸ்துவைப் பின்பற்றுபவர் விசுவாசிக்க வேண்டும். ஆவியின் கனியும், ஆவிக்குரிய முதிர்ச்சியின் நிரூபணமும் அன்பு என்பதே. அன்பு ஒவ்வொரு விசுவாசிக்கும் நற்சாட்சியாகவுமிருக்க வேண்டும். கிறிஸ்துவை மையமாகக் கொண்டதும், மற்றவர்களை மையமாகக் கொண்டதுமான இந்த நன்னெறி தத்துவத்தின் மத்தியில் அன்பு இருக்கிறது. நீங்கள் இந்த நன்னெறி தத்துவத்தை விசுவாசித்து அதன்படி நடந்தால், கிறிஸ்துவும், நற்செய்தி யளித்தலும், மற்றவர்களை மேம்படுத்துவதும் உங்கள் வாழ்வின் மையமாக இருக்கும்.

உங்களுக்கு அறிமுகமாகும் ஒவ்வொருவரும் நற்செய்தியளிக்க அல்லது மேம்படுத்துவதற்கான ஒரு வாய்ப்பாக உள்ளனர். ஒருவர் விசுவாசியோ அல்லது அவிசுவாசியோ, அவர்களுடைய மேம்படுத்துதலுக்காக, அவர்களுக்கு ஒரு அடிமையைப்போல, அவர்கள் இரட்சிப்புக்காக ஊழியஞ் செய்வதே உங்கள் பேராவலாயிருக்கவேண்டும். அவர்கள் அவிசுவாசிகளா யிருந்தால், கிறிஸ்துவிடம் வராமல் தடை செய்யும் எந்தக் காரியத்தையும் செய்யாமலிருக்கவேண்டும். அவர்கள் விசுவாசி களாயிருந்தால், அவர்களை அவமதிக்கும் எந்தக் காரியத்தையும் செய்யா மலும் அவர்களுடைய விசுவாசத்துக்கு ஒரு இடறலாக இல்லாமலும் இருக்க வேண்டும்.

இந்தக் கொள்கைகள் — தேவனுக்கு மகிமை செலுத்துவது அவிசுவாசிகளுக்கு நற்செய்தியளிப்பது, விசுவாசிகளை மேம்படுத்துவது – ஆகியவைகளும் ''மங்கிய பிரச்சினைகளுக்கு'' நாம் தீர்வு காணக்கூடிய கொள்கைகளாகவுமிருக்க வேண்டும் – வேதாகமம் வெளிப்படையாகக் கண்டனம் செய்யாத பிரச்சினைகள். இந்தக் கடினமானப் பிரச்சினைகளில் ஒன்றை நீங்கள் சந்திக்கும்பொழுது – விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட மாம்சத்தைச் சாப்பிடுவதற்கு ஒத்த செயல் – உங்களைப் பார்த்துக் கொண்டிருக்கும் மக்களைப்பற்றிச் சிந்தியுங்கள். இதன்பின் உங்களைப் பரிசீலியுங்கள். தேவனுடைய மகிமைக்காகவும், தொலைந்துபோன மக்களின் இரட்சிப்பாகவும், விசுவாசிகளை மேம்படுத்துவதற்காகவும் நீங்கள்

சுயமையம் கொண்டவர் அல்லது கிறிஸ்துவையும் மற்றவர்களையும் மையமாகக் கொண்டவரா?

ஒன்பதாம் அதிகாரத்தில் பவுல் நம்மோடு பகிர்ந்துகொள்ளும் ஊழிய முன்னுரிமைகளையும், பத்தாவது அதிகாரத்தின் முடிவு பகுதியில் உங்கள் சொந்த முழுமையான முன்னுரிமைகளையும் உண்டாக்கும்படி நான் தாழ்மையாக உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். நீங்கள் சந்திக்கும் ஒவ்வொரு மனித சிருஷ்டிக்கும் அடிமையாயிருக்கும்படி உங்களை அர்ப்பணியுங்கள். அவர்களை மையத்தில் வைத்து, அவர்கள் இரட்சிக்கப் படுவதற்காக அவர்கள் எல்லாருக்கும் எல்லாக்காரியங்களுமாய் ஆகி விடுவீர்கள் என்று பிரார்த்தனை செய்துகொள்ளுங்கள். மேலும் உங்கள் வாழ்க்கையில் குறுக்கிடும் மதநம்பிக்கையுடையவர்கள், அஞ்ஞானிகள், அல்லது விசுவாசிகள் ஆகியவரை அவமதிக்கும் எந்தக் காரியத்தையும் செய்யமாட்டேன் என்று நிச்சயம் பண்ணிக் கொள்ளுங்கள்.

India Bible Literature
67, Beracah Road, Kilpauk,
Chennai - 600 010.